KALKI 29.10.95
ரூ. 3.00

கல்கி





காண்ட்ராக்ட் கதாநாயகர்கள்!

ஒருநாள் காலை ஒன்பது மணிக்கு திடீர் போன் அடித்து, சிலரிடம் இக்கேள்வியைக் கேட்டோம்.

இந்த நிமிடம் என்ன பிரச்னை?



• உமா

......இதோ அவர்கள் அளித்த பதில்கள் :

எம். கோபாலகிருஷ்ணன் :

தினம் விடிந்தால் பத்து, பதினைந்து பேர் ஏதாவது உதவி கேட்டு என் வீட்டுக்கு வருகிறார்கள். பிரச்னை – அவர்கள் வருவது அல்ல; ஒவ்வொருவரும் ஒரு வேண்டுகோள் அல்லது ஒரு தேவையை எடுத்துச் சொல்கிறார்கள்.

இவர்களில் யாருக்கு என்ன வகையில் உதவலாம் என்பதுதான் என் தினசரி காலை வேளை பிரச்னை! இப்போது உங்கள் போன் வருவதற்கு இரண்டு நிமிடங்கள் முன்பு, வால்டாக்ஸ் ரோடிலுள்ள ஒரு அனாதை இல்லத்திற்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்க உதவி கேட்டு வந்திருந்தார்கள். அதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன், என்ன செய்யலாம் என்று.



• அன்பழகன்



• திலகவதி



• கோபாலகிருஷ்ணன்

திலகவதி ஐ.பி.எஸ். :

என்னை வளர்த்த என் 83 வயதுப் பாட்டிக்கு யூட்ரஸில் கேன்ஸர் வந்து ரொம்பச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார். டாக்டர்கள் ஆபரேஷன் செய்யத் தயங்குகிறார்கள். 'உடம்பு தாங்குமா' என்பது அவர்கள் கவலை. இப்படி ஆபரேஷன் தள்ளிப் போகப் போக, வலியில் அவர் படுகிற சிரமம் பார்க்க, ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. இப்போதைக்கு என் பிரச்னை, கவலை, சிந்தனை எல்லாம் இதுதான்.



• பாத்திமா

பாத்திமா பாபு :

தலை போற பிரச்னையா? என் பையனுக்கு க, ங, ச... சொல்லித் தர்றதுதான். ஆர்டர்படி சொல்ல மாட்டேங்கறான். மாத்தி மாத்தி எழுதிடறான். அவனுக்கு எப்படியாவது ஒழுங்கா அதை சொல்லிக் கொடுத்தாகணும். இப்போதைக்கு இதைவிடப் பெரிய பிரச்னை ஏதும் எனக்கு இல்லை.

அன்பழகன் :

எனக்கு எந்தப் பிரச்னையும் எப்போதும் கிடையாது. வாழ்க்கை 'ரொடீனா'கத்தானே போய்க் கொண்டிருக்கிறது? பிரச்னை என்று எதையும் நான் நினைப்பதில்லை. அதனால் உங்கள் கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை!

உமா :

லைஃப்ல ஒரு சேஞ்ச் வேணும்னு தோணுது. அதான், ஒரு அட்வர்டைஸ்மென்ட் ஏஜென்ஸி தொடங்கலாமான்னு ஐடியா. அதுக்கு நிறைய செலவாகும் போல இருக்கு. லோன் ட்ரை பண்ணணும். இந்தியன் பாங்க் கோபாலகிருஷ்ணனை காண்டாக்ட் பண்ணப் போறேன். அவர் ஹெல்ப் பண்ணுவாரா? லோன் கிடைக்குமா...? இதான் சார் இப்ப என் பிரச்னை, கவலை எல்லாம்.

(கோபாலகிருஷ்ணன் சார்,
காதுல விழுந்துச்சுங்களா?)



டெலிபோன் பேட்டி : **கிச்சா**
வண்ணப்படம் : **யோகா**

நட்சத்திர ஃப்ளாஷ் பேக்

சாதாரண பஸ் கண்டக்டராக இருந்து சூப்பர் ஸ்டாரான நமது ரஜினியைப் போலவே அடிமட்டத்திலிருந்து புகழேணியின் உச்சிக்குப் போன சில பாலிவுட்காரர்களும் உண்டு....



அவர், நைனிடால் ஷெர்வுட் பள்ளியில் ஆரம்பப் படிப்பும் தில்லியில் அறிவியல் பட்டப் படிப்பும் முடித்தவுடன் கல்கத்தாவில் பிஸினஸ் எக்ஸிக்யூட்டிவாகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். அடிமனத்தில் நடிக்க வேண்டுமென்ற ஆசை. பள்ளியில் சில நாடகங்களில் நடித்திருந்த அனுபவம் மட்டும் உண்டு. கல்கத்தாவில், வேலை பார்த்துக் கொண்டே அமெச்சூர் தியேட்டர் சொஸைட்டியில் சேர்ந்து நடித்து வந்தார். சின்னச் சின்ன வேடங்கள். அவரது லட்சியம் அதுவல்ல. சினிமா! தன் திறமையை நாடு முழுவதும் அறியச் செய்ய வேண்டுமென்ற அடங்காத வெறி.

விளைவு?

வேலையை உதறி விட்டு பம்பாய் சென்றார். ஆனால் அவரது முகமோ பர்சனாலிட்டியோ சினிமாவுக்கு உகந்ததல்ல என்று பாலிவுட் அவரை முற்றிலும் நிராகரித்தது முதலில்.

தங்க இடம் கூட இன்றி, மெரைன் டிரைவ் பகுதியில் இரவு முழுதும் ஒரு சாலையோர பெஞ்சில் படுத்திருக்க வேண்டிய அளவுக்கு ஏழ்மை!

ஆனால் முயற்சியை மட்டும் அவர் விட்டு விடவில்லை. 1973-ல் வெளிவந்த 'ஜன்ஜீர்' திரைப்படம் அவரை மக்களுக்கு இனம்காட்டியது. அன்றைய சூப்பர் ஸ்டார்களான ராஜேஷ்கன்னா போன்றவர்களுக்குச் சவாலாக உருவானார். இன்று வரை இந்தித் திரையுலகின் முடிசூடா சக்ரவர்த்தியாக விளங்கும் (மீண்டும் சினிமாவுக்குத் திரும்பி விட்டாரே!) அவர் – அமிதாப்பச்சன்!

பம்பாயில் ஒரு மிலிட்டரி கான்டீனில் கிளார்க்காகப் பணிபுரிந்து வந்த அவர், பிற்காலத்தில், திரை உலகின் மிக உயர்ந்த விருதான தாதா சாகேப் பால்கே விருது பெறுவார் என்று யார் எதிர்பார்த்திருப்பார்கள்?

அவரது இயற்பெயர் யூசுஃப்கான். தந்தை, தம் மகனை ஒரு பட்டதாரியாக்கிப் பார்க்க ஆசைப்பட்டார். செயின்ட் ஜேவியர் கல்லூரியில் சேர்த்தார்.

அப்போது அவருக்கு நடிப்பு ஆசையெல்லாம் கிடையாது. ஒழுங்காகப் படித்து, பட்டம் வாங்குவதில் தான் முனைப்பாக இருந்தார்.

ஆனால் அவரை அறியாமல் அவருள்



இருந்த நடிப்பாற்றலை இனம்கண்டு கொண்ட தேவிகாராணி, அவரை மிலிட்டரி காண்டீன் கிளார்க் உத்தியோகத்திலிருந்து இழுத்து, 'ஜாவர் பாட்டா' என்ற படத்தில் நடிக்க வைத்தார். தொடர்ந்து, 1947-ல் அவர் நடித்து வெளிவந்த 'ஜுக்னு' என்ற படம் அவருக்குத் திருப்பு முனையானது! அதன் மூலம் புகழின் உச்சிக்கே சென்ற அந்த ஸ்டார் – திலீப் குமார்!


இன்னொருவர், பஞ்சாப்காரர். 1923-ல் லாகூரில் பட்டப் படிப்பை முடித்து விட்டு, அடங்காத நடிப்பார்வத்தால் பம்பாய்க்கு ரயில் ஏறினார். கையில் இருந்தது வெறும் முப்பது ரூபாய்!

நடிக்க வாய்ப்பு கிடைப்பது அத்தனை சுலபமாக இல்லை – அப்போதே! போர்க்காலமாதலால் ராணுவ சென்சார் அலுவலகத்தில் வேலை கிடைத்தது. ராணுவ வீரர்கள் தம் குடும்பங்களுக்கு எழுதும் கடிதங்களைப் படித்து, சென்சார் செய்யும் அந்த வேலைக்கு சம்பளம் அறுபத்தைந்து ரூபாய்! அதில் நாற்பத்தைந்து ரூபாயைத் தம் தங்கைகளின் படிப்புச் செலவுக்காக அனுப்பி விட்டு, மீதி இருபதில் காலம் தள்ளுவார்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் சின்னச் சின்ன அமெச்சூர் நாடகங்களில் நடித்து, 1945-ஆம் ஆண்டு ஒரு திரைப்படத்தில் வாய்ப்பு கிடைக்கப் பெற்றார். படம் சூப்பர் ஹிட்! மென்மையான காதல் ஹீரோவாக, நாடு முழுவதும் மக்களின் கனவு நாயகனாக வலம் வந்து – இன்றைக்கும் நடித்துக் கொண்டு திரை உலகில் தமது பொன் விழாவை இந்த ஆண்டு கொண்டாடும் அவர் தேவ் ஆனந்த்!

– கலா

நன்றி : ராஷ்ட்ரிய சகாரா



என்ன காரணம்?

புனேயைச் சேர்ந்த 52 ஜில்லா பரிஷத் அதிகாரிகள் மைசூர் மற்றும் பெங்களூரில் உள்ள பல்வேறு உரத் தொழிற்சாலைகளுக்கு 'கல்விச் சுற்றுலா' என்ற பெயரில் போய் ஜாலியாகப் பொழுதைக் கழித்து விட்டு வந்தனர். இந்தச் சுற்றுலாவுக்கு அரசு அனுமதித்த தொகை ரூ. 12,000தான். ஆனால் அவர்கள் செலவு செய்தது ரூ. 70,000. அதைப் பற்றி அவர்கள் துளியும் கவலைப்படாமல் ரூ 70,000க்கான பில்களை மாநில அரசுக்கு அனுப்பி வைத்தனர். காரணம் வழக்கம் போல் அரசாங்கம் எந்தக் கேள்வியும் கேட்காமல் செலவு செய்த தொகைக்கான பில்களை அப்படியே 'பாஸ்' செய்து விடும் என்ற தைரியம் தான்.

ஆனால் இம்முறை நடந்தது என்ன தெரியுமா? 'அதிகமாகச் செலவு செய்த பணத்தை உங்கள் கையிலிருந்து கட்டுங்கள்' என்று ஒரு தாக்கீதை அரசு அவர்களுக்கு அனுப்பி வைத்தது!

"டூர் கிளம்பும் போது மஹாராஷ்ட்ராவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்தது. எங்கள் பில்கள் மேலிடத்தைச் சென்று அடையும் போது பிஜேபி - சிவசேனா ஆட்சிக்கு வந்து விட்டது. அதுதான் காரணம்" என்கிறார் இதன் தலைவர் கோல்டே.

நன்றி : இந்தியன் எக்ஸ்பிரஸ்,
– க. மாரியப்பன், கோவை.

கி. ராஜேந்திரன்

விம்மல் ஒலி கேட்டதுமே, "சாயா! சாயா! அழாதேம்மா! எங்கே இருக்கே சொல்லு! இதோ ஓடி வரேன்" என்றான். அடுத்தகணமே அவள் அருகே ஆதரவாக நிற்கத் துடித்தான்.

"நான் சாயா இல்லே ஸார், ரஸியா!"

"சே! நீதானா!" ஏமாற்றமும் வெறுப்பும் பொங்கச் சொல்லி விட்டான். 'எல்லா கஷ்டத்துக்கும் இவள் தானே காரணம்?' என்ற கசப்புணர்வைத் தவிர்க்க முடியவில்லை.

மறுமுனையில் விம்மல் அதிகரித்தது. "ஸோ ஸாரி ஸார்! ஒரு அபாயம், ஆபத்துன்னா ஃபோன் பண்ணச் சொன்னீங்க. அந்த தைரியத்துலதான் டயல் செய்தேன். உங்களுக்கு வெறுப்பா இருக்கு. வைச்சுடறேன்."

சொன்னாளேயொழிய வைக்கவில்லை. அவனிடம் கோபப்படுவதில் அர்த்தம் இல்லை என்பது மட்டுமல்ல; அறிவீனம் கூட என்று உடன் உணர்ந்து, "இரு- இரு- ரஸியா! இப்ப என்ன புது ஆபத்து?" என்றான்.

"தபால்ல ஒரு பாக்கெட் வந்திருக்கு ஸார்!"

"ஓப்பன் பண்ணாதே! பார்ஸல் குண்டா இருந்து தொலைக்கப் போறது! நான் வர்றேன்."

"பார்ஸல் குண்டா இருந்தா தேவலையே ஸார். ஒருவழியா செத்துப் போயிடலாம். இது அதைவிட மோசம். அருவருப்பானது, கொடூரமானது!"

உடனடி ஆபத்து இல்லை என்று தெரியவந்ததில் நெடுமூச்சு பிரிந்தது.

"எங்கேயிருந்து பேசறே?" பி.ஸி.ஓ. தானே?"

"ஆமா."

"பொது இடத்துல நாம சந்திக்கிறது விபரீதமா முடியறது. நீ வீட்டுக்கே திரும்பிப் போ. நான் அரை மணியிலே வரேன்" என்றான்.

யமாஹாவில் போய் இறங்கி, எக்ஸ்னோரா நட்டிருந்த சாலையோர மரக்கன்றின் பின்னால் தன்னை மறைத்துக் கொள்ள முயன்று தோல்வி தழுவிய ஸி.ஐ.டியிடம், ஐ.டி. அட்டை காட்டி விட்டுப் படியேறினான்.

பள்ளி மாணவியாக இல்லாமல் ஒரு நக்மாவாகவோ ரோஜாவாகவோ தன்னை உருமாற்றிக் கொள்ள அரும்பாடுபட்டிருந்தாள். லிப்ஸ்டிக்கும் ரூஷும் ஐப்ரோ பென்சிலும் மஸ்காராவும் டீ ரோஸ் ஸெண்டும் யார்ட்லி பவுடரும் மழுமழுப்பான கால்களைக் காட்டிய மினி ஸ்கர்ட்டும் எதையும் வெளிக்காட்டாமலேயே ஆர்வத்தை வளர்த்த ஃப்ரில் வைத்த பிளவுஸும் 'சொக்கப் போகிறாயா இல்லையா' என்று மிரட்டின!

காப்பியுடன் வரவேற்றாள். "இன்ஸ்டண்ட் காப்பி இல்லே ஸார். அசல் காப்பி! கொட்டை வறுத்து, அரைத்து, டிகாக்ஷன் இறக்கி நானே போட்டேன்" என்று பெருமையாகச் சொன்னாள்.

ஆவி பறக்க கமகமத்தது. பிற்பகல் நேரம். பெற்றோர் வீட்டில் இல்லை. வந்த காரியம் சீக்கிரம் முடித்துத் திரும்புவது நல்லது...

"என்னமோ பார்ஸல்னே, பயங்கரம்னே..."

"அந்தச் சனியன் இருக்கவே இருக்கு. முதல்ல காப்பியைச் சாப்பிடுங்க. அப்புறம் பார்க்கலாம்."

ஸிப் செய்தவன், சட்டென்று கோப்பையை மேஜை மேல் வைத்தான். "ஏய்! மறுபடி என்னை ஏமாத்தறியா என்ன! கடைசில புலி வரது கதையாயிடும்!"


"இல்லே ஸார்! நிஜமாத்தான்! ஆனா பாருங்க. உங்க கிட்ட ஃபோன்ல பேசினதுமே பயம் போயிடுச்சு. என்ன ஆபத்தானாலும் நம்மைக் காப்பாத்த ஒருத்தர் இருக்கார்ன்ற தைரியம். ஏன் ஸார், ஸஃபாரிக்குள்ள தோள்ல துப்பாக்கி தொங்க விட்டிருப்பீங்கல்ல? ரிவால்வர்! அதைக் கொஞ்சம் எடுத்துக் காட்டறீங்களா! ரொம்ப நாளா பார்க்கணும்னு ஆசை!"

"ரிவால்வரையெல்லாம் தொட ஒரு தகுதி வேணும்!"

"என்ன ஸார் செய்யணும்? மூணு நாள் பட்டினி கிடந்து, ரெண்டு நாள் கண் முழிச்சு, ஒருநாள் பூரா பத்திரகாளியை 'பூஜை பண்ணணுமா?"

"உன் பாப்பா புத்தியை கொஞ்ச நேரமாவது மூட்டை கட்டி வைக்க மாட்டியா?"

"ஊஹூம்! என்னால முடியாது ஸார். அதுவும் உங்களை நேரிலே பார்த்துட்டா உற்சாகம் பிய்ச்சுக்கிட்டுப்



போகுது. வேகப்பட்ட ஆளா நீங்க! ஸி.பி.ஐ.! இண்டர்போல்! ஜேம்ஸ் பாண்டும் ஷெர்லாக் ஹோம்ஸூம் கலந்து வந்த அவதாரம்!"

'ஆமாம், பெண்டாட்டியைக் கூடக் காப் பாற்றத் தெரியாத 007' என்று நினைத்தான்.

"காப்பி ரஜினியா இருக்கா ஸார்? ஸூப்பரா, சூடா..."

"ஓ! ஏ கிளாஸ்" என்றான் நிஜமான ரசனை யுடன்.

"தினம் இதே மாதிரி காப்பி போட்டுத் தரேன் ஸார்! நீங்க சரின்னு சொல்ல வேண் டியதுதான்."

"உன் அசட்டுத்தனத்துக்கு ஒரு முடிவே இல்லையா?"

"அப்பா அம்மா கூட ஆட்சேபிக்க மாட்டாங்க. யார் தலைல என்னை கட்டறதுன்னு அவங்களுக்கு ஒரே கவலை!"

"உனக்குன்னு ஒருத்தன் பிறக்கா மலா இருப்பான்?"

"சந்தேகம்தான் ஸார். ஒரு முஸ்லிம் அம்மாவுக்கும் ஹிந்து அப்பாவுக்கும் பிறந்தவளுக்கு வரன் தேடி கல்யாணம் பண்ணி வைக்கிறது பகீரதப் பிரயத் தனம். அதனால அவங்களை மாதிரியே நானும் லவ் மேரேஜ் செய்துகிட்டா சந்தோஷப்படுவாங்க."



"காதல் கல்யாணத்துக்கு ஆணும் பெண்ணுமா இரண்டு பேரோட சம்மதம் தேவை. இதுக்கு என்னோட ஒப்புதல் இல்லே."

"ஏன் ஸார் பயந்து ஒதுங்கறீங்க? உங்க மனசு என்னை லவ் பண்றதை தைரியமா ஒப்புக் கொள்ளுங்களேன்."

"லவ் என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்திலே ஏகப்பட்ட அர்த்தம் இருக்கு. காதலுக்கும் அது தான்; காமத்துக்கும் அதுதான்; தாய் பாசத்துக்கும் சகோதர அன்புக்கும் கடவுளின் கருணைக்கும் கூட, அதே வார்த்தைதான்."

"ஜூனியர் காலேஜ்ல ஏகப்பட்ட லெக்சர் கேட்கிறேன் ஸார். வீட்டிலே வேற வேண்டாம்."

அவன் எழுந்தான், "நானும் என் நேரத்தை வீணடிப்பதற்காக இங்கே வரவில்லை" என்றான்.

"நேரம் என்ன ஸார், உங்க வாழ்க்கையே வீணாகிட்டு இருக்கு. ஓ.கேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க. கல்யாணம் முடிஞ்சு ஒரே வருஷத்திலே ரெண்டு கைகளுக்கும் ரெட்டைக் குழந்தைகளா பெற்றுத் தரேன்!"

பலவீனமான இடத்தில் அடித்தாள். பற்களை நறநறத்து, கோபத்தை அடக்கிக் கொண்டான். "ரஸியா" என்று பொறுமையாக அழைத்துப் பேசினான்; "பருவ மாற்றம் உன்னை ரொமாண்டிக்கா பேச வைக்கிறது. நாவல்களைப் படிச்சுட்டு கற்பனைகளில் இறங்கறே. இது அசட்டுத்தனம். வாழ்க்கையை மேம்போக்கா பார்க்கிறதும் காதலைக் கனவு போல பாவிக்கிறதும் தப்பு. படிப்பிலே தீவிர கவனம் செலுத்து. நாளடைவில் மனசு தெளியும். உனக்கேற்ற ராஜகுமாரனை சமயம் வரும் போது இனம் கண்டுகொள்வே."

அவன் கோபமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. அதனால் இன்னும் சொன்னான் : "எனக்குக் குழந்தை இல்லேன்ற வருத்தம் இருக்கத் தான் செய்யுது. அதை மறைக்கலே. ஆனா சாயா மூலம்தான் நான் புத்திரபாக்கியத்தை அடைய விரும்பறேன். அதுக்காக எத்தனை காலம் வேணும்னாலும் ஏக்கத்தோடு காத்திருப்பேன். அது ஒரு தவம். அதுதான் காதல்."

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். கண்களில் நீர் தளும்பி கன்னங்களில் வழிந்தது. அந்த ஒரு கணத்தில் அவள் சிறுபிள்ளைத்தனம் மாறி மனமுதிர்ச்சி பெற்று விட்டது போல் காணப்பட்டாள்.

"ரொம்ப லக்கி ஸார் உங்க சாயா" என்ற போது குரல் தழுதழுத்தது. "உங்களைக் கணவனா அடைஞ்சிருக்காங்களே!"

'அவ அதிர்ஷ்டத்தையும் என்னோட வீரத்தையும் நீதான் மெச்சிக்கணும்' என்று முணுமுணுத்துக் கொண்டான். சாயாவை இழந்து



நிற்பதால் ஏற்பட்ட டென்ஷன் முன்னிலும் அதிகமாயிற்று.

"ஒருநாள் அவங்களை வந்து சந்திக்கணும் ஸார்."

"ஓயெஸ். அவளைத் தேடி கண்டுபிடிச்சதுக்கப்புறம் அழைச்சிட்டுப் போறேன்."

"தேடி கண்டுபிடிக்கிறதா?" புருவ வில்கள் வளைந்து கொடுக்க, புதிரான பார்வை சந்தேக அம்புகளைச் செலுத்தின.

"ஆமாம். பேப்பர்ல கூட அவ படம் வந்திருக்கே! நீ ஒருவேளை கவனிச்சிருக்க மாட்டே. அவ இப்போ என்னோட இல்லாததுக்கு நீதான் காரணம்!"

"ஸார்!" – பதறினாள்.

"பயப்படாதே! உன்னை அறியாமலேயே நீ காரணமாகியிருக்கே" என்று புகைப்படங்கள் விஷயம் விளக்கினான்.

"என்னை மன்னிச்சுடுங்க ஸார்" என்று விரல்களால் தன் கண்களையும் கன்னங்களையும் துடைத்துக் கொண்டே சொன்னாள்.

"போகட்டும், என்னை எதுக்குக் கூப்பிட்டே, அதைச் சொல்லு சீக்கிரம்."

பக்கத்து அறைக்குள் போய் பார்சலை எடுத்து வந்தாள். அதைத் தாறுமாறாகக் கிழிக்காமல் ஒட்டப்பட்டிருந்த இடத்தில் லேசாகக் கீறி, பிரித்திருந்தாள். மேலே ஸ்டாம்பு ஒட்டி அவள் பெயர் விலாசம் எழுதிய தாள் சுற்றியிருந்தது. உள்ளே அட்டைப் பெட்டி.

திறந்தான். அருவருப்பில் முகம் சுளித்தான்.

உள்ளே ஒரு கரப்பான் பூச்சி. கனமான அட்டை மீது மல்லாக்கப் படுக்க வைத்து நகர முடியாமல் இரு இடங்களில் ஊசி குத்தியிருந்தது. இன்னும் உயிருடன் இருந்தது. வேதனையில் கால்களையும் மீசையையும் இயந்திர கதியில் அசைத்துக் கொண்டிருந்தது.


"இது என்ன அக்கிரமம்? சிலுவையில் அறையப்பட்ட ஏசு மாதிரி? இப்படி ஒரு பூச்சியை வதைப்பவன் மனுஷனையும் கொடுமைப்படுத்தத் தயங்கவே மாட்டான்."

"அப்பவே இதுக்கு விடுதலை கொடுத்திருப்பேன்; நீங்க பார்க்கணுமேன்னுதான்..."

பெட்டியை மூடினான். "நீதான் எனக்கு பெஞ்ஜமினை அடையாளம் சொன்னே. என்னை அடிக்கடி சந்திக்கிறே. அவனோட கட்டளையை மீறி நடந்துக்கறே. அதனால உன்னை எச்சரிக்கிறான்!"

"ஐயோ!"

'நீ ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும், ரவியா. நாங்க வி.ஐ.டிக்கள் மூணு பேரை ஷிஃப்ட்டுல போடலாம். ஆனா, அவங்களை விட உன்னைக் காப்பாத்தக் கூடியது உன்னோட நடத்தைதான். சாமர்த்தியமா, சமர்த்தா நடந்துக்க."



புறப்பட்டான். வீதியில் கரப்புக்கு விடுதலை தந்து, வீட்டை அடைந்த போது அந்த கரப்பான் போலவே மனம் காயமடைந்து உடலும் சோர்வுற்றிருந்தது.

அப்பா பிலஹரி ராகத்தில் ஹிந்து நாளிதழ் செய்தி ஒன்று படித்துக் கொண்டிருந்தார். அவன் வந்து ஷூ கழற்றி, ஸாக்ஸ் உருவிய போதும் தொடர்ந்து பாடினார். 'சூரியா சுவாமி' என்று பெயர் அடிபடவே காது தீட்டினான்.

"குருஜி அமெரிக்கா போறாரா! சக்கை போடு! கிளின்டன் காட்டிலே மழைதான்!" என்றான் உற்சாகமாக.

"மீனம்பாக்கம் விமான நிலைய பேட்டி" என்றார் அதே ராகத்தில்.

"என்ன சொல்லியிருக்கார்?"

"ஹிந்து மதம்தான் எல்லா மதங்களையும் மதிச்சு மரியாதை செலுத்தறதாம். அதனால தான் ஹிந்து மதத்துக்கு உலகெங்கும் வரவேற்பாம். அதன் ஒரு வெளிப்பாடுதான் இவர் அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டிருப்பதாம்."

"எத்தனை நாள்?"

"தெரியலே. முதல்ல ஒரு மாசம் ஐரோப்பிய நாடுகள்ல சுற்றுப்பயணம். அப்புறம் அமெரிக்கா. போற இடமெல்லாம் மத இணக்கம், ஒற்றுமைக்குப் பாடுபடுவேன்னு சொல்லியிருக்கார். 'குண்டு வெடிக்கிறதுக்குப் பதிலா பூக்கள் மலரணும்'னு ஒரு இயக்கம் ஆரம்பிச்சிருக்கார். அதன்படி ஒவ்வொருத்தனும் தினம் ஒரு மலரை வேற்று மதத்தைச் சேர்ந்த ஒருவனுக்குக் கொடுக்கணும்!"

"அருமையான ஐடியா! குருஜிக்குத்தான் இப்படி தோணும்" என்று சிலாகித்தான்.

"சாயா இல்லாம சாப்பிடப் பிடிக்கவேயில்லே. ஆனாலும் வயத்தை ரொப்பணுமே! நானும் சின்னியுமா சேர்ந்து உப்புமா கிளறியிருக்கோம். டேஸ்ட் பண்ணிப் பாரு."

"ஆகட்டும்பா" என்று வருத்த தொனிக்கு மாறி, கை கால் கழுவி வந்து அமர்ந்தான். சின்னி பரிமாற, அப்பா, "கேஸ் என்னாச்சு?" என்றார். "ஏதாவது முன்னேற்றம் உண்டா?"

"விசேஷமா ஒண்ணுமில்லேப்பா. பெஞ்ஜமின் பற்றி வெனிஸ்லேர்ந்து தகவல் வந்துச்சு. அங்க போலீஸ் ரிகார்டுல பதிவாகி இருக்கான். ஆனா குண்டு வைக்கிறவனாயில்லே. போதை மருந்து கடத்தறவனா..."

"அதனால...?"

"ஒரு பேட்டர்ன் இல்லியே? பெஞ்ஜமின் பற்றி சின்னி சொன்னது பொருந்தி வருது. ஆனா அதே பெஞ்ஜமின் எதுக்கு அகில பாரத ஹிந்து பரிவார் கட்டடத்துக்குக் குண்டு வைச்சு தகர்க்கணும்?"

"குற்ற இயல்லயும் ஒழுங்குமுறை உண்டுன்னு நீ பாடம் படிச்சிருக்கறது அவங்களுக்கும் தெரிஞ்சிருக்கலாமில்லையா?"

அவன் சாப்பிடுவதை நிறுத்தி ஏறிட்டான்.

"என்ன சொல்றீங்க?"

"குண்டு வெடிப்பை ஒரு திரையாக அவன் பயன்படுத்தியிருக்கலாம்... உன் கவனத்தை சிதற அடிப்பதற்காகவே..."

உப்புமாவுக்காகத் திறந்த வாய் வியப்பில் திறந்தபடியே இருக்க, கரம் செயலிழந்தது. "அப்பா, வி.பி.ஐ. சீஃபா உங்களைத்தான் போடணும்" என்றான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லேடா. அகதா கிரிஸ்டில ஆரம்பிச்சு ராபர்ட் லூட்லும், டாம் கிளான்ஸி வரை ஏகப்பட்ட கிரைம் ஃபிக்ஷன் படிக்கிறேனா..."

"சாயந்திரம் இன்னொரு சந்தேகத்தையும் எழுப்பினார்" என்றான் சின்னி. "என்ன தாத்தா அது?"

"பிரமாதமா ஒண்ணுமில்ல. பர்மாரிக்கு ஒரு ஆளை குருஜி அனுப்பியிருக்கிறதா ஊட்டில சொன்னாங்கல்ல...? அது நிஜம்தானான்னு ஊர்ஜிதப்படுத்திக்க நீ மெஸ்ஸேஜ் அனுப்பாமலா இருந்திருப்பே..."

கை உதறி எழுந்தான். "குருஜியின் பேச்சுத் திறமையே என்னைக் குருடாக்கியிருக்கு அப்பா" என்று வாஷ்பேஸினை அணுகினான்.

"டேய்! டேய்! தட்டுல இருக்கிறதையாவது சாப்டுட்டுப் போடா" என்ற அவர் கூப்பாடு செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. யமாஹா சத்தம் சில நொடிகளில் கேட்க,

"தாத்தா! உங்க மகன் உங்களுக்கு ஒரு தேங்க்ஸ் கூடச் சொல்லாமல் போறார் பாருங்க" என்று குற்றம் சாட்டினான் சின்னி.

"இதுக்கு நன்றி ஒரு கேடா! அவனை மேற்கொண்டு புதிய ஆபத்துக்கள்ல சிக்க வைச்சதுக்கு என்னை நானே ஜோட்டால அடிச்சுக்கணும்" என்றார் தாத்தா, கைகளைப் பிசைந்தவாறு. விரல்களில் "மளக், மளக்'கென்று சொடுக்கு விழுந்தன.

(தொடரும்)

வயசு

கிளாசுக்குப் போகப் பிடிக்கவில்லை. காலேஜ் லைப்ரரிக்கு வந்து பேருக்கு ஒரு புத்தகம் எடுத்து விரித்துக் கொண்டேன். கண்கள் கலங்கி எழுத்துக்கள் அசைந்தன.

அம்மா, என்னை நீ புரிந்து கொண்டது இவ்வளவுதானா? பத்தொன்பது வருடங்களாகக் கூடவே இருந்து வளர்த்தும் உனக்கு என் மனசு மட்டும் எப்படித் தெரியாமல் போனது?

வேறு யாராவது சொல்லியிருந்தால் தாங்கிக் கொள்ளலாம். அலட்சியப்படுத்தலாம். நீயா அம்மா அப்படிச் சொன்னாய்? உன் பையன் மேல் அத்தனை அவநம்பிக்கையா? உன் மனத்தில் எனக்கு மரியாதை அவ்வளவுதானா? எத்தனைக் கேவலமாக என்னை எடை போட்டு வைத்திருக்கிறாய்!

தினம் கட் அடித்து விட்டு ஒரு கும்பல் மோசமான படங்களாகத் தேடித் தேடிப் போய்ப் பார்க்கும். நான் போயிருக்கிறேனா? சைட் அடிப்பதற்காகவே சாயங்காலத்தில் கடைத் தெருவில் ஸ்டைலாக அலைவார்கள். கூப்பிட்டிருக்கிறார்கள். நான் போயிருக்கிறேனா? வரது வீட்டில் நடந்ததைப் போல நம் வீட்டுக்கு வந்து, 'சார், உங்க பையன் என் பொண்ணுக்கு லவ் லெட்டர் கொடுத்திருக்கான்' என்று எந்த அப்பனாவது கத்தியிருக்கிறானா?

அப்படிப்பட்ட என்னைப் போய் சந்தேகப்பட்டு ஒரு வார்த்தை சொல்லி விட்டாயே அம்மா! சாட்டையால் விளாசின மாதிரி இருக்கிறதே! நினைக்க நினைக்க வலிக்கிறதே!

ராத்திரி தண்ணீர் குடிப்பதற்காக எழுந்து வந்தவன், அறைக்குள் நீயும் அப்பாவும் பேசுவதைக் கேட்டு நின்றிருக்க மாட்டேன் – பேச்சில் என் பெயர் அடிபடாமல் இருந்திருந்தால்.

"சிவா குழந்தைடி" என்றார் அப்பா.

"வாஸ்தவம்தான். ஆனா வயசுன்னு ஒண்ணு இருக்கில்லே? பஞ்சையும் நெருப்பையும் தெரிஞ்சே பக்கத்தில வைக்கிறது சரியில்லைங்க" என்றாய் நீ.

பஞ்சு? நெருப்பு? என்ன சொல்கிறாய் என்றே புரியவில்லை.

"என்ன செய்யலாம்னு சொல்றே?"

"சுமதியோட அப்பா தபால் போட்டுருக்கான். சும்மா பார்த்துட்டுப் போறதுக்காக அடுத்த வாரம் வர்றானாம். வந்ததும் அவனோட அனுப்பி வெச்சிட வேண்டியதுதான்."

"இனிமே இவ உங்கப் பொண்ணு சார்னு சொல்லி ஒப்படைச்சுட்டுப் போனான் மங்களம். அவன்கிட்ட என்னன்னு சொல்லச் சொல்றே?"

"அவன் ஒரு பேச்சுக்கு சொன்னா அதுக்காக அவளை காலம் பூரா வெச்சிருக்க முடியுமா? ஒம்போது வயசில கொண்டாந்து விட்டப்ப அப்படிச் சொன்னான். இப்ப வயசு பதிமூணாச்சு. வயசுக்கு வந்து ஒரு மாசமாச்சி. நல்ல வளர்த்தி வேற. நாளைக்கு ஒண்ணு கிடக்க ஒண்ணு நடந்திடுச்சின்னு வைங்க, அவன் எல்லாம் கிராமத்து ஆளு. மானஸ்தன். பெரிய விவகாரமாய்டும்."

"அப்ப நமக்கெல்லாம் மானம் இல்லங்கறியா?"

"மழுப்பாம ஒரு முடிவுக்கு வாங்க!"

"வயசுக்கு வந்துட்டாளே ஒழிய, என்ன தெரியும் அவளுக்கு? உன்னை அம்மான்னு தான் கூப்புடறா. என்னை அப்பான்னுதான் கூப்புடறா. அவனை சிவாண்ணான்னுதான் கூப்புடறா. குடும்பத்தில ஒருத்தியா பழகிட்டு இருந்தா, ஏன் நீ இப்படி விகல்பமாய் பார்க்கறே?"

"அய்யோ! நான் சொல்றது உங்களுக்குப் புரியவே மாட்டேங்குது. இன்னைக்கு விகல்பமா எதுவும் இல்லை. நாளைக்கு விகல்பமா எதுவும் நடந்துடக் கூடாதுன்றதுதான் என் கவலை!"

"அளவுக்கு மீறி கற்பனை பண்ணிக்கிட்டு கவலைப்படறியோன்னு எனக்குப் படுது."

"நீங்க எதுலயும் அலட்சியம்! எல்லாமே மேம்போக்குதான் உங்களுக்கு. காலம் அப்படி

பட்டுக்கோட்டை பிரபாகர்

இருக்குங்க. சின்னஞ்சிறுசுங்க. அவங்க சும்மா இருந்தாலும் வயசு சும்மா இருக்க விடாது!"

"சரி சரி. சுமதியை அனுப்பிச்சிரலாம். ரெண்டு செட் பாவாடை, தாவணி வாங்கி, ரெண்டாயிரம் பணம் வைச்சிக் கொடுத்து அனுப்பிச்சிரலாம்."

"ரெண்டாயிரம் என்ன, மூவாயிரம் வேணாலும் கொடுங்க. அதெல்லாம் நான் வேணாம்னு சொல்லவே இல்லை. சம்மதிச்சிங்களே, இப்பதான் எனக்கு நிம்மதியா இருக்கு" என்றாயே, அந்த நிமிடத்திலிருந்து எனக்கு நிம்மதி போய் விட்டது அம்மா!

அப்பா என்னைப் [illegible] வைத்துள்ள



அளவுக்கு நீ என்னைப் புரிந்து வைத்துக் கொள்ளவில்லையே...

சுமதி யார்? இத்தனூண்டு குட்டி. 'சிவாண்ணா, சிவாண்ணா' என்று பேசும் போது இன்னும் கூட மழலை இருக்கிறது. அவளைப் போய்... நான்?

என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. நீ எப்படியம்மா நினைத்துப் பார்த்தாய்?

இது ஒரு பெரிய அவமானம் எனக்கு! யோக்யன் என்று ஊரிலும், உறவினரிடமும் நண்பர்களிடமும் பெயர் வாங்கி என்ன பிரயோஜனம்? பெற்ற தாய் - நீ என்னை சந்தேகப்பட்டு விட்டாயே...

லைப்ரரியை மூடப் போகிற நேரத்தில் புறப்பட்டு, பஸ் ஸ்டாப் போகாமல் பக்கத்துப் பூங்கா போய் இருட்டிப் போன கறுப்பு ஆகாயத்தை ரொம்ப நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மிகத் தாமதமாக வீட்டுக்குத் திரும்பின போது மணி எட்டரையோ, ஒம்பதோ ஆகி விட்டது.

"என்னடா இவ்வளவு லேட்டு?" என்றார் டி.வியிலிருந்து திரும்பிய அப்பா.

"ஆமாம். லேட்டாயிடுச்சி" என்று விட்டு என் அறைக்கு வந்தேன்.

உடனே அம்மா உள்ளே வந்து, "என்ன சிவா, என்ன பதில் இது? காலேஜ் விட்டு எங்க போயிருந்தே?" என்றாள்.

திரும்பி அம்மாவை லேசாக முறைத்து, "ம்? ஊர் மேயப் போயிருந்தேன்" என்றேன்.

அம்மா அதிர்ந்து போய், "சிவா, நீதானா பேசறது?"

பதில் பேசாமல் ஷூ கழற்றிப் போட்டு, லுங்கிக்கு மாறினேன்.

"காலேஜ்ல புரொபசர் எதுவும் திட்டிட்டாரா?"

"யாரும் திட்டலை. எல்லாரும் என்னை நல்லாத்தான் புரிஞ்சி வெச்சிருக்காங்க. போதுமா?" என்று வெடித்தேன்.

"இப்படி எல்லாம் பேச மாட்டியே, என்னடா ஆச்சு உனக்கு?"

"யார் யார் எப்போ எப்படிப் பேசுவாங்கன்னு யாருக்குத் தெரியும்?" என்று கட்டிலில் விழுந்தேன்.

அம்மா நெற்றியில் தொட்டுப் பார்த்து, "உடம்பு சரியில்லையா? சுடற மாதிரி இருக்கே. ஜுரம் வருதா? என்னடா சிவா? சொல்லேன். கஷ்டமா இருக்கில்லே? ஃப்ரண்ஸோட எதாச்சும் தகராறா? யாராச்சும் உன்னைத் தப்பாப் புரிஞ்சுகிட்டு கோவிச்சுக்கிட்டாங்களா?"

"ஃப்ரண்ட்ஸ் தப்பாப் புரிஞ்சுக்கிட்டா போய்ட்டுப் போகுதுன்னு விட்டுடலாம்!"

"பின்னே யாரு உன்னை என்ன சொன்னாங்க?"

என்னால் அதற்கு மேல் அடக்கி வைக்க முடியாமல் பொங்கி விட்டேன்.

"நேத்து தண்ணி குடிக்க எழுந்து வந்தப்போ நீயும், அப்பாவும் பேசிட்டிருந்ததை யதேச்சையாக் கேட்டுட்டேன்மா!"

"என்ன பேசினோம்? என்ன கேட்டே நீ?"

"அந்த சுமதியை நீ ஊருக்கு அனுப்பி வை, அனுப்பாமப் போ. எனக்குக் கவலை இல்லை. ஆனா ஊருக்கு அனுப்பறதுக்குக் காரணம்னு ஒண்ணு சொன்னியே... நொந்துட்டேம்மா,

"ச்சே! என்னம்மா என்னைப் புரிஞ்சிட்டிருக்கே நீ? எத்தனை கேவலமா நினைச்சுட்டே? கூசிப் போயிட்டேம்மா!"

அம்மா ஆடிப் போய் நின்றாள்.

"சொல்லும்மா. எப்படிம்மா நீ என்னை மோசமா நினைக்கலாம்? என்னைப் பத்தி ஏதாச்சும் ஒரு சின்ன புகார் உண்டா? எதை வெச்சு என்னை அப்படி எடை போட்டே? பளார்னு அறை வாங்கின மாதிரி இருக்கும்மா. என் மனசு கிடந்து துடிக்கிதும்மா."

அம்மாவால் பதில் எதுவும் பேச முடியவில்லை.

அறை வாசலில் நின்று அத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த அப்பா, மெதுவாக உள்ளே வந்தார்.

"மங்களம், உலகத்தில எங்கயோ யார் வீட்லயோ ஒரு தப்பு நடந்தா, அந்த மோசமான விஷயத்தை முன்னுதாரணமா எடுத்து வச்சிக்கிறது ரொம்பத் தப்பு. புருஷன் பொண்டாட்டிக்குள்ளே சண்டை வந்து சில பேர் டைவர்ஸ் வரைக்கும் போயிடறாங்க. அந்த சில பேரை உதாரணமா எடுத்துக்கிட்டு கல்யாணம்னு செஞ்சாலே டைவர்ஸ் வரும்னு நம்பறது சரியா? அவனோட குமுறல் ரொம்ப நியாயமானது. பதில் சொல்லு அவனுக்கு" என்றார்.

கிட்டே வந்த அம்மா என் கையைப் பிடித்துக் கொண்டு, "உன் வேதனை புரியுதுப்பா. நான் உன்னை இப்பவும் தப்பா நினைக்கலைடா. சின்ன வயசாச்சேங்கிறதால முன்ஜாக்கிரதை பண்றதா நினைச்சுக்கிட்டு ஏதோ சொல்லிட்டேன். வருத்தப்படாதே. இதை இத்தோட விட்டுட்டு எப்பவும் மாதிரி இருடா. ஏங்க, சுமதி இங்கேயே இருக்கட்டுங்க" என்றாள்.

ஆனாலும் நான் அன்று முழுக்க கொஞ்சம் பிகுவிலேயே இருந்தேன். இரண்டு நாளில் எல்லாம் சரியாகிப் போய் அன்று காலேஜில் முத்தமிழ் மன்றத்திற்காக மேடையேறி புல்லாங்குழல் வாசித்து ஏராளமான பாராட்டுக்களுடன் வீட்டுக்குத் திரும்பிய போது இருட்டி மணி ஏழரையாகி விட்டது.

கதவு திறந்த சுமதியின் முகத்தில் சோகம் பார்த்து, "என்ன? என்ன ஒரு மாதிரியா இருக்கே?" என்றேன்.

"விழுப்புரம் மாமா இல்லே? அவருக்கு ஆக்ஸிடெண்ட் ஆய்டுச்சாம். தந்தி வந்துச்சி சிவாண்ணா. அம்மாவும் அப்பாவும் உடனே புறப்பட்டுப் போனாங்க!"

"அடப்பாவமே! முப்பது வயசுதான் ஆகுது அவருக்கு. பெரிய அளவுல காயமாமா?"

"அதெல்லாம் தெரியலை!"

"அப்பா என்ன சொல்லிட்டுப் போனார்? நானும் இப்ப புறப்பட்டுப் போகணுமா?"

"வேணாம்னு சொல்லிட்டாரு. காலைல வந்துடுவோம்னு சொன்னாரு."

"சரி, முகம் கழுவிட்டு வர்றேன். தட்டெடுத்து வை. செமப் பசி."

முகம் கழுவி, உடை மாற்றி வந்து திவ்யமாக சாப்பிட்டேன். சுமதியும் சாப்பிட்டு எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு வந்து, "சொல்லவே இல்லையே? இன்னைக்கு காலேஜ்ல புல்லாங்குழல் வாசிக்கப் போறதாச் சொன்னீங்களே, வாசிச்சீங்களா சிவாண்ணா?" என்றாள்.

"அட்டகாசம் பண்ணிட்டேன் சுமதி. என்ன கைத்தட்டல் தெரியுமா? 'ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப் போல் மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ'ன்னு உருக்கோ உருக்குன்னு உருக்கிட்டேன்!"

"எங்கே, எங்கே எனக்காக ஒரு தடவை வாசிக்கக் காட்டுங்களேன். ப்ளீஸ்... சிவாண்ணா!"

நான் புல்லாங்குழல் எடுத்து வந்து தரையில் சப்பணங்கால் போட்டு அமர்ந்து காலேஜில் வாசித்த மாதிரியே வாசித்தேன்.

"அய்யோ! ரொம்ப நல்லா வாசிக்கிறீங்கண்ணா. நான் வாசிச்சுப் பார்க்கட்டுமா?"

"ம். பாரேன்?"

அவள் புல்லாங்குழலைத் தப்பாகப் பிடித்து அடுப்பூதுவது போல உஸ்ஸ், உஸ்ஸ் என்று ஊதியது சிரிப்பை வரவழைத்தது.

"மண்டு. அப்படியில்லை. கத்துக்கணும்னு ஆசையா இருக்கா சொல்லு. கத்துத் தர்றேன்!"

"ஆசையாத்தான் இருக்கு!"

"இப்படி வந்து உக்காரு."

அருகில் வந்து உட்கார்ந்த அவள் கைகளைப் பிடித்து புல்லாங்குழலின் ஓட்டைகளில் விரல்களை அமைத்து உயர்த்தி அவள் உதட்டில் வைத்து, "ம். வாசி" என்ற போது, அவளிடமிருந்து சோப்பு வாசனை வந்தது.

என்னுள் ஏதோ ஜிலீரென்று உணர்ந்தேன். என் முழங்கை ரொம்ப யதார்த்தமாக அவள் மார்பில் உரசிக் கொண்டிருப்பதை இப்போது தான் உணர்ந்து... ஆனால் கையை நான் ஏன் விலக்கிக் கொள்ளவில்லை?

"என்ன சிவாண்ணா அப்படிப் பார்க்கறீங்க?" என்றாள் சிரித்து.

சரேலென்று விலகி, "அப்புறம் கத்துத் தர்றேன். தூக்கம் வருது" என்று அவசரமாக அறைக்கு வந்து படுத்துக் கொண்ட நான் பதட்டமாக இருந்தேன். எவ்வளவு நல்ல பையன் நான்? திடீரென்று என்ன ஆயிற்று எனக்கு?

தன்னிகரில்லா கோலி!

இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயம்.

1939-41 ஆம் வருடங்களில் ராணுவத்தினருக்குத் தேவையான உணவுப் பொருட்கள், துணி போன்ற சாமான்கள் சப்ளை செய்வதற்கு நிறைய காண்ட்ராக்ட்கள் விடப்பட்டிருந்தன.

மிகப் பெரிய அளவில் பல பொருட்கள் சப்ளை செய்யப்பட்டதில் ஆங்காங்கே ஊழல் நடப்பதாகப் பேச்சு எழுந்தது. பொருட்களில் தரக் குறைவு, காண்ட்ராக்ட் வழங்குவதில் தில்லுமுல்லு, நிறைய பணம் கைமாற்றம் என்றெல்லாம் புகார் கிளம்பவே, அரசு விழித்துக் கொண்டது.

உடனே Government War Department இன் கீழ் ஒரு சிறிய சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது. அந்தக்குழு ராணுவ சப்ளையில் நடப்பதாகச் சொல்லப்பட்ட ஊழலைப் புலன் விசாரிக்க ஆரம்பித்தது.

மிகக்குறுகிய காலத்தில் வெகு சிறப்பாகச் செயல்பட்டு, ஊழல்களைக் கண்டறிந்து அடக்கிய அந்தப் புலனாய்வுக் குழுவை, அரசாங்கம் ஒரு நிரந்தரமான அமைப்பாக ஆக்க முடிவு செய்தது.

இதற்காக 1946ல் 'Delhi Special Police Establishment Act' என்றொரு சட்டத்தையே கொண்டு வந்து நிறைவேற்றினார்கள்.

ஒரு சிறப்புப் போலீஸ் குழுவை, மைய அரசின் கட்டுப்பாட்டில் இயங்க அனுமதி தந்த அந்தச் சட்டம், தில்லி போன்ற யூனியன் பிரதேசங்களில் மட்டும், சில வகைக் குற்றங்களை மட்டும் விசாரிக்க அனுமதி அளித்தது.

அதே சமயம், மாநில அரசுகள் கேட்டுக் கொண்டால், மாநிலங்களில் நடக்கும் குறிப்பிட்ட குற்றங்களையும் இந்த சிறப்புக்குழு விசாரிக்க அந்தச் சட்டம் வழி செய்தது.

சுதந்தரத்துக்குப் பின்னால் நிரந்தரமாக்கப்பட்ட இந்த அமைப்பு 1950-51 வரை சிறியதொரு அமைப்பாகவே இருந்து செயல்பட்டு வந்தது. பின்னால் இந்த SPE (Special Police Establishment) தான் நாடு முழுவதும் பேசப்படக் கூடிய பல சாதனைகளைப் படைக்கப் போகும் CBI ஆகப்போகிறது என்று அப்போது யார் எண்ணிப் பார்த்திருப்பார்கள்?

அதற்கு வித்திட்டு, உரமேற்றி வளர்த்தவர்கள், அப்போது உள்துறை அமைச்சராக இருந்த கோவிந்த வல்லப பந்தும் அவருக்குப் பின் வந்த லால்பகதூர் சாஸ்திரியும்தான். இவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர், எல்.பி. சிங் என்ற ஐ.சி.எஸ். அதிகாரி.

உத்தரப்பிரதேச ஐ.பி.எஸ். ஆபீசரான டி.பி. கோலி (D.P.Kohli) என்பவரைக் கூப்பிட்டு, SPE யைச் சீரமைத்து, ஒரு பலம் வாய்ந்த அமைப்பாக ஆக்கச் சொன்னார் பந்த்.

கோலி மாதிரி ஒரு போலீஸ் ஆபீசரை நான் பார்த்ததில்லை! கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் சி.பி.ஐயின் தன்னிகரில்லாத் தலைவராக செயல்பட்டு 'சி.பி.ஐ விடம் கேஸ் போனால் சந்தேகமில்லாமல் உண்மை வெளிவந்துவிடும்' என்று நாடே நம்பும்படிச் செய்து காட்டியவர் கோலி.

தனது பணியைத் தவிர வேறெது பற்றியும் எப்போதும் யோசிக்காதவர் அவர். உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு உணர்வு - இந்த மூன்றுக்கும் ஒரு மனித உருவம் கொடுத்தால் அது 'கோலி'யாக உயிர் பெறும்!

SPEக்கு ஐ.ஜி. ஆகப் பொறுப்பு ஏற்றதும் கோலி நாடு முழுவதும் மாநிலம் மாநிலமாக, பயணம் மேற்கொண்டார். அவரது லட்சியம் - எங்கெல்லாம் சிறந்த போலீஸ் ஆபீசர்கள் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் SPE க்கு டெபுடேஷனில் கொண்டு வந்து, பயிற்சி அளித்து பலப்படுத்துவது தான். (ராமநாதபுரம் மாவட்டத்தில் எஸ்.பி. ஆக இருந்த என்னை, எஸ்.பி.இக்கு அவர் இழுக்க முனைந்தபோது நடந்த ரசமான சம்பவங்கள் பற்றி அடுத்த இதழில் சொல்கிறேன்.)

அதுவரை மாநில போலீஸ் சட்டதிட்டங்களின் கீழ் வழக்கப்படி இயங்கி வந்த என்போன்ற போலீஸ் ஆபீசர்கள் கோலியின் தலைமையின் கீழ் செயல்

சி.வி. நரசிம்மன்

பட ஆரம்பித்ததும் உடனே பெரிய வித்தியாசத்தைக் கண்டோம்.

வழக்குகளில் அவரது அணுகுமுறை மிக வித்தியாசமாக இருந்தது. சி.பி.ஐக்கு அவர் வகுத்து அளித்த சில சட்டதிட்டங்கள், நெறிமுறைகள் மிக நூதனமாக, அபார பலன் தரக் கூடியவையாக இருந்தன.

உதாரணமாக, ஒரு ஆபீசர், அவரது கேஸில் ஈடுபட்டிருக்கும் போது, அடுத்தவர் அந்தக் கேஸில் தலையிடக் கூடாது; அது பற்றிக் குறுக்கே விசாரிக்கக் கூடாது என்றொரு ஒழுங்கு முறையைத் தீவிரமாக செயல்படுத்தினார். இது அனைவரும் மிகச் சுதந்தரமாக, நேர்மையாக செயல்பட உதவி புரிந்தது.

இன்னொரு ஒழுங்குமுறை.' ஒரு கேஸ் நடந்து கொண்டிருக்கும்போது, அந்த கேஸ் தொடர்பாக வெளி ஆட்கள் அல்லது அரசு அதிகாரிகள், அமைச்சர்கள் யாராவது "என்ன ஆயிற்று?'' என்று நடுவில் விசாரித்தால், உடனே யார் விசாரித்தார், என்ன கேட்டார், எப்போது கேட்டார், எதற்காகக் கேட்டார் என்று ரெக்கார்ட் செய்து விடவேண்டும்.

இப்படிப் பதிவாகிற விஷயங்களை அவர் தவறாது படித்துப் பார்ப்பார். அதன் மூலம், எந்த கேஸிலாவது வெளியார் அக்கறை காட்டுகிறார்கள் என்று தெரிந்தால் அந்த கேஸின் விசாரணையை வெளியார் குறுக்கீடுகளிலிருந்து பாதுகாத்து அதை விசேஷமாக கண்காணிக்கச் செய்வார்.

'இப்படி விசாரிப்பது சி.பி.ஐயில் பதிவாகிறது' என்ற விஷயம் பரவிய உடன், பலர் விசாரிப்பதையே நிறுத்தி விட்டார்கள் என்பதுதான் இத்திட்டத்துக்குக் கிடைத்த வெற்றி.

கோலி கொண்டு வந்த ஒழுங்குமுறைகளும், இயங்கும் விதிகளும் அவரது ஜூனியர்களுக்கு மட்டுமல்ல; அவரும் அவைகளைத் தீவிரமாகக் கடைபிடித்தார்!

பிரசித்தி பெற்ற 'ரோடு ரோலர்' கேஸை இதற்கு உதாரணம் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

உத்தரபிரதேசத்தில் ஒரு கம்பெனி. ரோடு ரோலர் வண்டிகள் தயாரிக்கும் பெரிய நிறுவனம்.

மத்திய பொதுப்பணித்துறை (PWD) அந்தக் கம்பெனியுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதன் அடிப்படையில் PWD க்கு நூற்றுக்கு மேற்பட்ட புதிய ரோடு ரோலர்கள் சப்ளை செய்ய அந்நிறுவனம் ஒப்புக் கொண்டது.

ஆனால் ஆசை யாரை விட்டது? இந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டிருந்த இன்ஸ்பெக்ஷன் ஆபீசரை 'சரி கட்டி', ஒரே ஒரு ரோடு ரோலரை மட்டும் சப்ளை செய்து, நம்பர் பிளேட்டை மட்டும் மாற்றி மாற்றிக் காட்டி, சுமார் நூறு ரோடு ரோலர்களைச் சப்ளை செய்து விட்டதாக பொய் ரிகார்டு தயாரித்து மொத்த பணத்தையும் வாங்கிக் கொண்டு விட்டது.

எத்தனை நாளைக்கு இதை மறைக்க முடியும்? ஒரு கணக்கெடுப்பில் பல ரோடு ரோலர்கள் குறைவதைக் கண்ட PWD, விழித்துக் கொண்டு விட, விஷயம் வெளியே வந்து விட்டது!

வழக்கு, சி.பி.ஐ.யிடம் விசாரணைக்குக் கொடுக்கப்பட்டது. இது சம்பந்தப்பட்ட அடிப்படை விவரங்கள் கோலி முன் விசாரணை உத்தரவுக்காக வைக்கப்பட்டன.

அவற்றைப் படித்துப் பார்த்த கோலி, அந்நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவர், பல ஆண்டுகளுக்கு முன் எப்போதோ தான் ஒரு மாவட்ட எஸ்.பி. ஆக இருந்த போது வேறு ஏதோ விஷயத்தில் தமக்கு அறிமுகமானவர் தான் என்பதை தற்செயலாக நினைவு கூர்ந்தார்.

உடனே அந்த ஃபைலில் விறுவிறுவென ஏதோ எழுதி, அதைத் தன்னுடைய துணை ஐ.ஜி.யாக இருந்த டி. சென் என்பவருக்கு அனுப்பி விட்டார். அந்த நோட்டில் அவர் எழுதியது இதுதான்:

"சி.பி.ஐ. விசாரிக்கும் இந்த ரோடுரோலர் கேஸில் சம்பந்தப்பட்ட.......... என்பவர்,......... ஆண்டில் தற்செயலாக எனக்கு ஒரு தரம் அறிமுகமானவர். ஆகவே, இந்தக் கேஸை நான் மேற்பார்வை செய்வது சரியல்ல. இந்த கேஸ் தொடர்பான எந்த ஃபைலும் எப்போதும் என் பார்வைக்கு வரக் கூடாது. 'சி.பி.ஐ. துணை

• லால்பகதூர் சாஸ்திரியின் இடது புறம் இருப்பவர் கோலி





“ரொம்ப கவலையா இருக்கியே, உன் ஜாதகத்தைப் பார்த்துட்டு ஜோசியர் அப்படி என்னதான் சொன்னார்?”

“கொஞ்ச நாளாவது ஜி.எச்.-ல ஏ.சி. ரூம்ல இருப்பேன்னாரே!”

— அ. சிங்காரவேலு

இயக்குநர் இந்த கேஸைக் கவனித்து, விசாரணையின் முடிவான அறிக்கையை அவரே அரசுக்கு நேரடியாக அனுப்பி விடலாம்!”

கோலியின் நேர்மைக்கு இது ஒரு அழுத்தமான சான்று.

மாநில காவல் துறைக்கு, புலனாய்வை விட சட்ட-ஒழுங்கு நடவடிக்கைகள்தாம் அதிக பிரச்னை தரக்கூடியவை.

அடிக்கடி ஊர்வலம், கதவடைப்பு, மறியல், வி.ஐ.பிக்களுக்குப் பாதுகாப்பு இது போன்ற நடவடிக்கைகளிலேயே அவர்கள் நேரம் பெரிதும் கரைந்து விடும்.

ஆனால் சி.பி.ஐ.க்கு சட்டம் ஒழுங்கு சம்பந்தமான தலைவலிகள் ஏதும் கிடையாது. அவர்கள் நேரம் முழுதும் புலனாய்வுக்கென்றே காத்து இருப்பதால் இடையூறுகள் ஏதும் இன்றி துப்புத் துலக்கலில் ஈடுபட முடிகிறது. சி.பி.ஐ. கேஸ்களில் எல்லாம் உண்மைக்கு வெற்றி என்பது நிச்சயமாக இருக்கும்.

இதனோடெல்லாம் திருப்தி அடையாமல் சி.பி.ஐ.யை மேலும் மேலும் செம்மைப்படுத்த ஆண்டு தோறும் தில்லியில் சி.பி.ஐ. கான்ஃபரன்ஸ் கூட்டுவார் கோலி.

நாடு முழுவதிலுமிருக்கும் சி.பி.ஐ.யின் மாநில அலுவலகங்களிலிருந்து உயர் அதிகாரிகளைக் கூட்டி மேலும் சிறப்பாகச் செயல்பட என்ன வழி என்று கலந்து ஆலோசிப்பார்.

1957 - 1962 இல் நான் சி.பி.ஐ.யின் சென்னைப் பிரிவில் எஸ்.பி. ஆக இருந்தபோது இந்த கூட்டங்களுக்குச் சென்று வந்தேன். தில்லியில் கூடும் மற்ற மாநில சி.பி.ஐ. எஸ்.பிக்களைச் சந்தித்துப் பேச, எங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள முடிந்தது. இது தவிர, ‘டெல்லி பிரான்ச் சி.பி.ஐ. எப்படி இயங்குகிறது என்பதையும் நேரில் கண்டு அறியலாமே’ என்று எனக்கு ஆசை.

போனேன்.

ஒருபுறம் கான்ஃபரன்ஸில் கலந்து கொள்வதும், மறுபுறம் டெல்லி பிரான்ச்சுக்குப் போய், அங்குள்ள அதிகாரிகளுடன் பேசிப்பார்ப்பதும் அவர்கள் வழக்குகளை விசாரிக்கும் முறையை அறிந்து கொள்வதுமாக இருந்தேன்.

எனக்கு அங்கே கிடைத்த அனுபவம் மிக வித்தியாசமாக இருந்தது. வியப்பு கலந்த ஏமாற்றம் அடைந்தேன்.

காரணம் -

தனிப்பட்ட முறையில் கேஸ்கள் சரியாக விசாரிக்கப்பட்டிருந்த போதிலும், பிராஞ்சின் நிர்வாக விஷயங்கள் பல ஏனோ, தானோ என்று விடப்பட்டிருந்ததைப் பார்த்தேன். கான்ஃபரன்ஸ் நடந்த போது கூட, தில்லி பிராஞ்ச் எஸ்.பி.யிடம் கோலி அதிக கேள்விகளையோ, விளக்கங்களையோ கேட்கவில்லை.

கோலியின் தலைமையின் கீழ், தில்லியிலேயே இப்படி ஒரு பிரான்ச் இயங்குவது எனக்கு பெரிய வியப்பாக இருந்தது.

காரணம், சி.பி.ஐ. நடவடிக்கைகளில் அவர் எத்தனை துல்லியம் எதிர்பார்ப்பவர் என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டவன் நான்.

சென்னை பிரான்ச் எஸ்.பியாக நான் இருந்த சமயம், இரண்டு, மூன்று முறை அடுத்தடுத்து இன்ஸ்பெக்ஷனுக்காக வந்த கோலி, துருவித் துருவி கேள்விகளால் என்னை வாட்டியிருக்கிறார்!

அவர் குறை சொல்லும் படியாக எந்த விஷயத்தையும் நான் விட்டு வைத்திருக்கவில்லையெனினும் தனக்குப் பூரண திருப்தி வரும் வரை அவர் என்னைப் பரீட்சை செய்ததை விடவில்லை! அப்படிப்பட்டவர், எங்களை ஒரு தராசிலும் தில்லி பிரான்ச்சை வேறு ஒரு தராசிலும் நிறுத்தி எடை போடுவது ஏன்?

தில்லி போய் வந்த பின்பும் இந்தக் கேள்வி என்னைத் துளைத்துக் கொண்டிருந்தது.

கோலியிடமே நேரில் கேட்டுவிட ஒரு வாகான சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்படி ஒரு சந்தர்ப்பமும் வந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்தவர் - திருப்பதி வெங்கடாசலபதி!

(அடுத்த வாரம்)


காண்ட்ராஸ்ட் கதாநாயகர்கள்!

ரஜினியின் முத்துவும் சரி; கமலின் குருதிப் புனலும் சரி – வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற கட்டாயச் சூழல் ஏற்பட்டிருக்கிறது. இரண்டு கதாநாயகர்களுக்குமே வெற்றி இன்றியமையாததாகிறது.

முத்து, வியாபார ரீதியில் வெற்றியடைவது அநேகமாக உறுதிதானென்றாலும் சமீபத்திய அரசியல் நிகழ்வுகள் காரணமாக இந்தப் படத்தின் அரசியல் ரீதியிலான வெற்றியும் – ரஜினியைப் பொறுத்தவரை அத்தியாவசியமாகிறது.

குணா, மகாநதி, பாசவலை போன்ற கமல் படங்கள் தொடர்ந்து தோல்வியடைந்திருக்கின்றன – வியாபார ரீதியில். தரமான படங்கள் என்று அவை பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் பொழுதுபோக்கை எதிர்பார்த்து, தியேட்டருக்கு வரும் ரசிகர்களை அவை திருப்திப்படுத்தவில்லை. எனவே இந்த ரசனைக்குரியோரையும் திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயம் குருதிப் புனலுக்கு.

இதை மனத்தில் கொண்டே, குருதிப்புனல் விளம்பரங்கள் அமைந்துள்ளதாகத் தெரிகிறது. 'இது ஒரு கமர்ஷியல் படம்' என்பதை அழுத்தம் திருத்தமாக வெளிக்காட்டத் தொடங்கி விட்டார்கள்.

அதிரடிக் காட்சிகள் கொண்ட ட்ரெய்லரும் துப்பாக்கியுடன் கமல் நிற்பது போன்ற புகைப் படங்களுமாக பார்வைக்கு வந்திருக்கின்றன.

இதையெல்லாம் தூக்கிச் சாப்பிடும்படியாக கமல் – கௌதமி இருவரும் ஹாலிவுட் பாணியில் உதட்டு முத்தமிடும் புகைப்படம் ஒரு பத்திரிகை விடாமல் (கல்கி தவிர!) இடம் பெற்று மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது!

இந்த வகையில் இவ்விரு நட்சத்திரங்களின் படங்களை, அவர்களின் தனிப்பட்ட இமேஜோடு சேர்த்துச் சற்று ஆராய்ந்து பார்த்தால் சில சுவாரஸ்யமான ஒற்றுமை – வேற்றுமைகள் காணக் கிடைக்கின்றன.

இரண்டு பேரும் பாலசந்தரின் சீடர்கள். திரையுலகில் நுழைந்தது வேறு வேறு சமயங்களில் என்றாலும் ஹீரோக்களானது ஏறக்குறைய ஒரே காலகட்டத்தில்.

தனித்துவம் வாய்ந்த 'ஸ்டைல்' மூலம் மக்களிடம் ஓர் அடையாளம் தேடிக் கொள்ள முடியும் என்று நிரூபித்தவர் பாலசந்தர். அதை அப்படியே மனத்தில் வாங்கி, தமக்கென ஒரு 'ஸ்டைல்' உருவாக்கி அதன் மூலமே சூப்பர் ஸ்டார் ஆனார் ரஜினிகாந்த்.

இந்த விஷயத்திலேயே கமல் வேறுபடுவதைப் பார்க்கலாம். அவரது கவனம் முழுவதும் தொழில்நுட்பம், நூதனம் சார்ந்தே














• 'டாக்ஸி டாக்ஸி' என்ற பதின்மூன்று வாரத் தொடர் சென்னை தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகப் போகிறது. டாக்ஸி டிரைவரின் அனுபவங்களைப் பற்றியது. ஹீரோ : எஸ். வி. சேகர்.

இருந்து வந்திருக்கிறது - ஆரம்பம் முதலே. கனமான கதை, மாறுபட்ட திரைக்கதை, புதிய உத்திகள், நவீன தொழில் நுட்பம், புதுப்புது தோற்றங்கள் என்று தமது படங்களின் 'இமேஜை'யே தமது இமேஜாக ஆக்கிக் கொண்டார்.

குறிப்பாக நாயகனுக்குப் பின்னால் வந்த கமல் படங்களில் புதுப்புது 'செட்-அப்'பில் அவர் தோன்ற ஆரம்பித்திருப்பதைக் கவனிக்கலாம்.

முகத்தைக் கறுப்பாக, விகாரமாக ஆக்கிக் கொள்வதோ, தலைமுடி, மீசையைத் தியாகம் செய்வதோ, கதைப் போக்கினையொட்டி அடி வாங்கிச் சுருண்டு விழுவதோ... எதற்கும் அவர் தயங்குவதில்லை. கதைப்படி என்ன வேண்டுமோ அதைத் தருவதுதான் முக்கியமென்கிற முடிவுக்கு வந்து விட்டிருக்கிறார்.

ஆனால் ரஜினி விஷயம் நேர் மாறுதல்! கதை, அவருக்காகச் 'செய்ய'ப்படுகிறது. அவரது இமேஜுக்குத் தகுந்தாற்போல வடிவம் பெறுகிறது. ஒரு குறிப்பிட்ட காலம் வரை அடிதடி மட்டுமே பிரதானமான அம்சமாக இருந்த ரஜினி படங்கள், 'தில்லு முல்லு'க்குப் பிறகு நகைச்சுவைக்கும் கொஞ்சம் இடமளிக்கும் படியாக மாறியிருப்பதைக் காணலாம்.

ரஜினி எது செய்தாலும் எடுபடும் என்கிற சூழல் உருவாக, அவர் தம் கேரக்டரை மெல்லிய நகைச்சுவை முலாம் தடவித் தர ஆரம்பித்தார். 'நகைச்சுவை டிராக் என்று ஒன்று இனி ரஜினி படத்திற்குத் தேவையில்லை' என்று ரசிகர்கள் கருத ஆரம்பிக்கிற அளவுக்கு வேலைக்காரன், வீரா, அண்ணாமலை போன்ற சமீபகாலப் படங்களில் அசத்த ஆரம்பித்திருக்கிறார் ரஜினி.

ஆரம்பத்தில் காதல் இளவரசனாகவும் பின்னால் சீரியஸான கதாநாயகனாகவும் இனம்காணப்பட்ட கமலின் 'நகைச்சுவை', ரஜினியிடமிருந்து முற்றிலும் மாறுபட்டது.

அவர் சாப்ளின் செல்லப்பாவாக வந்த புன்னகை மன்னனாகட்டும், காமேஸ்வர ஐயராக வந்த மை.ம.கா. ராஜனாகட்டும் சோகம் அல்லது நையாண்டி முலாம் பூசிக் கொண்ட செலுலாயிடு சித்திரங்கள்!

இன்னும் பல விஷயங்களிலும், இருவருக்குமுள்ள வேறுபாடு சுவையான கான்ட்ராஸ்டாக வெளிப்படுகிறது.

உதாரணமாக கமல் படங்களில் வழக்கமாகி விட்ட முத்தக் காட்சி... கதையோட்டத்தோடே அவை கலந்து வருவதால் (அல்லது வருவது போல் அமைக்கப்படுவதால்) சென்சார் சடங்குகளில் சிக்காமல், ரசிகர்களுக்கு விருந்தாகியிருக்கின்றன.

ஆனால் இதுவரை ரஜினி படங்களில் இது போன்ற மேற்கத்திய படப்பாணி காட்சிகள் இல்லை.

இரண்டு மூன்று பெண்களால் காதலிக்கப்படும் ஹீரோவாக வந்தால் கூட ரஜினி ரசிகர்கள் ஏற்பார்கள். ஆனால் சோகம் இழையோடும் மென்மையான காதல் உணர்வுகளின் வெளிப்பாட்டை நிராகரித்து விடுவார்கள்!

இந்த வகையில் ரஜினியை எம்.ஜி.ஆரின் தொடர்ச்சியாகவும் கமலை, சிவாஜியின் தொடர்ச்சியாகவும் வைத்துப் பார்க்க வேண்டும்.

எளிய கதை, கொஞ்சம் நீதி, எப்போதும் நல்லதே செய்யும் ஹீரோ, நிறைய பொழுது போக்கு, லேசாக செண்ட்டிமென்ட், மங்களமான முடிவு - இது எம்.ஜி.ஆர். ஃபார்முலா. விரும்பியோ விரும்பாமலோ இதுவே ரஜினியினுடையதாகவும் ஆகியிருப்பது சற்றுக் கூர்ந்து பார்த்தால் புரியும். எம்.ஜி.ஆரின் பாத்திரங்களை அடியொற்றி - சற்று கூட்டியும் குறைத்துமே ரஜினிக்கான பாத்திரங்கள் உருவாக்கப்படுகின்றன. அதில் முத்தக் காட்சி, காதலை வெளிப்படுத்தும் தவிப்பு, நுணுக்கமான உணர்ச்சிகளின் வெளிப்பாடு போன்றவற்றுக்கு இடமில்லை. ஆக்ஷன் இருக்கும் இடத்தில் இவற்றுக்கெல்லாம் என்ன வேலை?!

சிவாஜியின் எக்ஸ்டென்ஷனாக ஆரம்பித்து, வேறு சில தளங்களிலும் முத்திரை பதித்திருக்கும் கமல், பலரும் செய்யாத, செய்யத் தயங்குகிறவைகளைத் தாம் செய்ய வேண்டும் என்று தீவிரமாகச் செயல்படுவதாகத் தெரிகிறது.

நாயகனில் சிவப்பு விளக்குப் பகுதிக்கு, ஹீரோ போவதாக ஒரு காட்சி வரும். தொடர்ந்து அந்த புரட்சித் திருமணம்; அவ்வளவே. அதையே விஸ்தாரமாக - சிவப்பு விளக்குப் பகுதியினரின் இருப்பிடத்தையே

‘சுருக் நறுக்’ என்று ஒரு சொல்லோவியம் – 3

நேசம் என்பது....

– என்ன என்று ‘சுருக்’ விளக்கம் எழுத வேண்டியது இந்த வார ‘சுருக் நறுக்’ போட்டி.

கீழுள்ள கூப்பனில் எழுதி, பெயர் – முகவரியைத் தவறாமல் குறிப்பிட்டு 6.11.95க்குள் எங்களுக்குக் கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள்.

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு ‘சுருக் நறுக்’ விளக்கமும் ரூ. 50 பரிசு பெறும். தவிர இன்னும் 23 வாரங்களுக்குத் தொடரப் போகும் இப் போட்டியில் மிக அதிகமான போட்டிகளில் பரிசு பெறும் ஓர் அதிர்ஷ்டசாலிக்கு ஒரு மெகா பரிசும் காத்திருக்கிறது.

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

— ஆர்

நேசம் என்பது ....

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

தம் கதையின் தளமாக குணாவில் ஆக்கிக் கொண்டார். மகாநதியிலும் ஒரு பாதி, இது வரவே செய்கிறது.

இந்த வகையில், ‘இதையெல்லாம் ரசிகர்கள் ஏற்பார்களா?’ என்று கமல் யோசிப்பதில்லை. தம் கதைக்கு எது தேவையோ – அது முதலில். ஏற்பதும் ஏற்காததும் இரண்டாம்பட்சம் அவருக்கு.

ரஜினி, இதிலும் மாறுபடுகிறார்.

அவரது படங்கள், முற்றிலும் அவரது ரசிகர்களுக்காகவே உருவாக்கப்படுபவை. ஜனரஞ்சகம் தாண்டி, பாமர ரஞ்சகத்தின் வேர் வரை ஊடுருவி நிற்பவை. Total entertainment.

ஆனால், இரண்டு பேருக்கும் ஒரு விஷயத்தில் மட்டும் அபார ஒற்றுமை இருப்பதையும் சொல்ல வேண்டும்!

அது –

கதாநாயகி விஷயம்!

தமிழ் சினிமாக்களில் கதாநாயகிகள் வெறும் அழகுப் பொம்மைகளாக வந்து போவதற்குத் தான் என்பது என்றோ முடிவாகிவிட்ட சோகம்! இவர்கள் இருவரின் படங்களும் இதில் விலக்கல்ல! ஒரு கனவுக் காட்சி, ஒரு சோகக் காட்சி, இரண்டு மூன்று காதல் காட்சிகள் தவிர க்ளைமாக்ஸில் கட்டி அணைப்பதற்கு மட்டும்தான் ஹீரோயின்கள் பயன்படுகிறார்கள்!

கமலின் குணா, மகாநதி போன்ற படங்களில் ஹீரோயின்களுக்கு கதை ரீதியாக முக்கியத்துவம் இருப்பினும், குறைத்தே வேலை தரப்பட்டிருப்பதை கவனிக்கலாம்.

கமல் – ரஜினி இருவரும் சேர்ந்து நடித்த சில படங்கள் வெற்றியடையாமலே போயிருக்கின்றன. அலாவுதீனும் அற்புத விளக்கும் போன்ற fantasy படங்களாகட்டும் நினைத்தாலே இனிக்கும் போன்ற ஜனரஞ்சக மசாலாவாகட்டும் – எதுவானாலும் எடுபடவில்லை.

இந்தச் சூழ்நிலையில், ‘மறுபடி இருவரும் இணைந்து நடிப்பார்களா?’ என்ற பேச்சு சமீபத்தில் எழுந்ததுதான் ஆச்சர்யம்.


ஒரு நல்ல டைரக்டரால் இந்த இரு நடிகர்களின் சிறப்பையும் முற்றிலுமாக வெளிக்கொணர முடியும். ஆனால் இருதரப்பு ரசிகர்களும் அதை ஏற்கும்படி செய்ய ஒரு நல்ல டைரக்டர் போதாது; மகா டைரக்டர் தேவை!

— ஔரங்கசீப்

அட்டையில் : ‘முத்து’வில் ரஜினி,

(நன்றி : ரஜினி ரசிகன்)

‘குருதிப்புனலி’ல் கமல்





1995 அக்டோபர் 29
யுவ ஐப்பசி 12
மலர் : 54
இதழ் : 13

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பி.ஜே.பி.யின் மாயா(வதி) ஜாலம்!


மாயாவதி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதன் மூலம், பி.ஜே.பி. தானும் ஒரு சந்தர்ப்பவாதக் கட்சியே என்பதை நிரூபித்து விட்டது.

ஆறு மாதங்களுக்கொருமுறை ஆட்சி மாறுவதும் புதிய முதல்வர் வருவதும், அவரவர் இஷ்டத்துக்கு ஆட்சி நடத்துவதும் எந்தவொரு மாநில மக்களுக்கும் பெரிய கொடுமை.

உ.பி.யில் இந்த நிலை ஏற்பட பொறுப்பானதன் மூலம் பி.ஜே.பி. தனது செல்வாக்கில் வெகுவாகத் தாழ்ந்து விட்டது.

கட்டுப்பாடும் உட்கட்சி ஜனநாயகமும் கொண்ட அமைப்பு; தனி நபர் பிரபையைப் பயன்படுத்தி வோட்டு வாங்காத கட்சி; தேச பக்திக்கும் சுயமரியாதைக்கும் இடமளிக்கும் தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையை உடைய கட்சி என்றெல்லாம் பி.ஜே.பியின் சிறப்புக்களை அடுக்கி, காங்கிரஸுக்கு வலுவான ஒரு தேசிய எதிர்க்கட்சி இருப்பதாக மக்கள் மகிழ்ந்த காலம் ஒன்று உண்டு.

ஹிந்துத்வா கொள்கையையும் தீவிரவாத அமைப்புகளுடனான உறவையும் மட்டும் கைவிட்டு விட்டால் நாட்டை நம்பிக்கையுடன் பி.ஜே.பியிடம் ஒப்படைக்கலாம் என்ற கருத்துக் கூட நிலவியது.



அவையெல்லாம் சமீபத்திய குஜராத், உ.பி. சம்பவங்களுக்குப் பிறகு தவிடுபொடியாகி விட்டன.

குஜராத் குளறுபடிகள், பி.ஜே.பி.யின் கட்டுப்பாடும் உட்கட்சி ஜனநாயகமும் உளுத்துப் போய் விட்டதையே காட்டுகின்றன.

உ.பி.யைப் பொறுத்தவரை, கொள்கை அளவில் பெரிதும் மாறுபட்ட ஒரு கட்சிக்கு பி.ஜே.பி. ஆதரவு அளித்ததானது காங்கிரஸைப் பழிப்பதற்குத்தான்.


ஒரு தலித் முதல்வருக்கு ஆதரவு அளித்து தனது உயர்ஜாதி இமேஜைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கமும் பி.ஜே.பிக்கு இருந்தது. ஆனால் இப்போது ஆதரவை விலக்கிக் கொண்டதன் மூலம் அந்த நோக்கம் நிறைவேறாததோடு, உயர்ஜாதியினர் கட்சி என்ற இமேஜே மேலும் வளர்ந்துள்ளது.

காங்கிரஸில் உட்பூசல்களும் பிளவுகளும் தினந்தோறும் பெருகி வருகின்ற காலத்தில் பி.ஜே.பி. மட்டும் தனது அமைப்பைத் திருத்தியும் பலப்படுத்தியும் மக்கள் முன் வைத்திருக்குமானால், இன்னும் சில மாதங்களில் வரவிருக்கும் தேர்தலில் வெற்றிகளைக் குவிக்கும்.

ஆனால், அதைச் செய்யத் தவறியதன் மூலம் தங்கள் கட்சிக்குப் பின்னடைவை மட்டுமின்றி, நாட்டு மக்களுக்கும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறார்கள் பி.ஜே.பி. தலைவர்கள்.

சாத்தூர் சோகம்!

காமராஜர் மாவட்டம், சாத்தூரில் விஷம் கலந்த சாராயம் அருந்தி 22 பேர் இறந்து போனது மிகப் பெரிய சோகம். இதனினும் பெரிய சோகம் ஒன்று இருக்க முடியுமானால்,



சென்னை செக்ரடேரியட் குடியிருப்பில் மழைநீர் தேங்கி நின்ற ஒரு குட்டையில் நீந்தச் சென்ற இரண்டு சிறுவர்கள், சேற்றில் சிக்கி மூழ்கி இறந்து போனதுதான்!

இத்தகைய துயரச் சம்பவங்கள் ஏன் நிகழ்கின்றன?

செக்ரடேரியட் குடியிருப்புப் பகுதியில் மழைநீர், நீச்சலடிக்கும் அளவுக்குக் குட்டையாகத் தேங்கியிருந்திருக்கிறது! இவ்வாறு தேங்க விடாமல் தடுப்பதும் வடிகால்கள் அமைப்பதும் உள்ளாட்சி அமைப்புகளின் கடமை. ஆனால் உள்ளாட்சித் தேர்தல்களே வருடக்கணக்காக நடத்தப்படாத நிலையில் இதுபோன்ற பிரச்னைகளை யார் கவனிக்கப் போகிறார்கள்?

மிகுந்த தாமதத்துக்கும் யோசனைக்கும் பிறகு இப்போது ஒரு கட்டாயத்தின்பேரில் தமிழக அரசு உள்ளாட்சித் தேர்தல்களை அறிவித்துள்ளது. அதிலும் மாநகராட்சிக்கு இப்போதைக்குத் தேர்தல் கிடையாது!

சாத்தூர் சம்பவமும் அரசின் அலட்சியத்தையே காட்டுகிறது. காவல் துறையின் மது விலக்கு அமுலாக்கப் பிரிவு கள்ளச் சாராய உற்பத்தியையும் வியாபாரத்தையும் தடுக்க வேண்டும். ஆனால் அப்பிரிவினர் ஏதாவது ரெய்டு நடத்தி ஊரல் பானைகளை உடைத்ததாகவும் கடத்தல் சாராய பாக்கெட்டுகளை ரோட் ரோலர் கொண்டு நசுக்கியதாகவும் செய்தியும் போட்டோவும் வெளியிட்டுக் கொள்வதுடன் சரி. அந்த போட்டோக்களைப் பார்க்கும் போதே, அதைப் போல் பல்லாயிரம் மடங்கு சரக்கு தினம் தினம் தமிழகத்தில் வியாபார மாகிறது என்ற உண்மை நமக்குத் தெரிகிறது.

இந்தக் கள்ளச் சாராயத் தொழில் தழைப்பதற்குக் காரணம் லஞ்ச - ஊழல்தான் என்பதும் புரிகிறது.

காவல் துறையின் லஞ்ச ஊழலைத் தட்டிக் கேட்டு, கட்டுப்படுத்த இயலாத அளவுக்கு ஆட்சியாளர்களிடமும் லஞ்ச ஊழல் பெருகியிருக்கிறது!



சஞ்சய்தத் வழக்கு :

'தடா'வின் இன்றைய நிலை என்ன?

பதினொன்கு மாத கால சட்டப் போராட்டத்துக்குப் பின்னர் ஒருவழியாக சஞ்சய் தத் ஜாமீனில் விடுதலை செய்யப் பட்டிருக்கிறார். தந்தை சுனில் தத், தங்கை பிரியா தத், காதலி ரியா பிள்ளை ஆகியோர் நாடு முழுவதும் போகாத கோயி லில்லை. தர்க்காக்கள், சர்ச்சுகள் என்று எல்லா இடங்களிலும் கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டார்கள். அதனால் தானோ என்னவோ ஜாமீனில் வந்தவுடன் சஞ்சய்தத் சொன்ன முதல் வாக்கியம் : "God is great!"

ஏ. கே. 56 ரக துப்பாக்கி வைத்திருந்ததற்காகவும், பம்பாய் குண்டு வெடிப்புகளுக்குக் காரணமான குற்றவாளிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் சொல்லி, போலீஸார் அவரை 1993-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கைது செய்தார்கள்.

மனிதர் பிழைக்கத் தெரியாதவர். நகத்தில் வலி, நாக்கில் புளிப்பு என்று ஏர்கண்டிஷன் ஜெயிலுக்கு (அதுதான் ஆஸ் பத்திரி ஸ்பெஷல் வார்டு) செல்லத் தெரியாதவர். அதனால் தான் ஒருமுறை உடல் கோளாறு காரணமாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட போது கூட பொது வார்டிலேயே சேர்க்கப் பட்டார். அங்கும் சங்கிலியால் அவரைப் பிணைத்திருந் தார்கள். இத்தனைக்கும் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கிய நடிகர் மட்டுமல்ல, பிரபலமான சுனில்தத்தின் மகன். அப்பா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்.

சஞ்சய்தத்தின் பாஸ்போர்ட் பம்பாய் தடா கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டு விட்ட நிலையில், வாரத்தில் ஐந்து நாட் கள் காலையிலிருந்து மாலை வரை தடா கோர்ட் விசாரணைக்குச் செல்ல வேண்டும். தவிர, சுப்ரீம் கோர்ட் போடாத கண்டிஷன் ஒன்றை தடா கோர்ட் போட்டிருக்கிறது. அதாவது சஞ்சய் பம்பாய் பெரு நகர எல்லை தாண்டிப் போவதாக இருந்தால் அனுமதி வாங்கிக் கொண்டுதான் போக வேண்டும். அதாவது சட்டம் அவருக்காக எந்தவிதமான சலு கையையும் காட்டவில்லை.

சில மாதங்களுக்கு முன்பு தடாவை நீட்டிப்பதற்கான முயற்சிகளைப் பாராளுமன்றம் மேற்கொள்ளாத தால் அது தானாகவே காலாவதியாகிவிட்ட சூழ்நிலை யில், தடாவில் கைது செய்யப்பட்டிருக்கும் சஞ்சய்தத் போன் றோர் பற்றிய வழக்குகளின் நிலை என்ன? மூத்த வழக்கறிஞர் பி.ஹெச். பாண்டியனிடம் கேட்டோம்.

"தடா சட்டம் காலாவதியாகி விட்டால் கூட, பல மாநிலங்களில் தடாவுக்கென்று தனி கோர்ட்டுகள் ஏற்படுத் தப்பட்டு, அந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு கள் நடந்து வருகின்றன. அதில் எந்த மாறுதலும் இருக்காது. ஏற்கெனவே போடப்பட்ட தடா வழக்குகளில் இன்னமும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாத நிலையில், குறிப்பிட்ட வழக்குகளுக்காகத் தேடப்படும் குற்றவாளிகளைத் தடாவி லேயே கைது செய்யலாம்.

"இனி புதிதாக நடைபெறும் குற்றங்களுக்காகத்தான் தடா வழக்கின் கீழ் யாரையும் கைது செய்து ஜெயிலில் அடைக்க முடியாது; ஏற்கெனவே இருக்கின்ற கிரிமினல் சட்டங்களைத் தான் பயன்படுத்த வேண்டும்.

"தடா சட்டப்படி பதிவு செய்யப்படும் வழக்குகளில் குறிப் பிடத்தக்க விஷயம் என்னவென்றால், கைது செய்யப்படும் போது சம்பந்தப்பட்டவன் குற்றவாளி என்று ஊர்ஜிதப்படுத் தப்பட்டுத்தான் கைது செய்யப்படுகிறான். 'தான் குற்றவாளி அல்ல' என்று கோர்ட்டில் நிரூபிக்கும் பொறுப்பு அவனுடை யது. ஆனால் இ.பி.கோ. பிரிவின் கீழ் வரும் வழக்குகளில் குற்றவாளி குற்றம் புரிந்தான் என்பதை நிரூபிப்பது அரசு வக்கீலின் பொறுப்பாகும். தாம் நிரபராதி என்று சஞ்சய்தத் நிரூபிக்க முடியாவிடில் குறைந்தபட்சம் ஐந்து வருடம் சிறைத் தண்டனை உண்டு!"

- ப்ரியன்

தொடர்ந்து வெற்றிப்பாதையில் !

எல்டிசி மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்து 100 சதவிகித வளர்ச்சியைக் கண்டுள்ளது.

கேட்பதற்கு இனிமையான செய்தி. இந்த இனிமைக்கு ஒருமித்துத் துணை நிற்பவை:

டெபாசிட்டுகள் உயர்வு	:	133.65%
லீஸிங் மற்றும் தவணை முறை நிதியுதவி அளிப்பதில் உயர்வு	:	182%
ரொக்க லாப உயர்வு	:	119.70%
சொத்துகள் உயர்வு	:	125.20%
மொத்த வருமான உயர்வு	:	100.50%
நிகர லாப உயர்வு	:	77%

டெபாசிட்டுகள் பெருக்க விழா







லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 624, அண்ணா சாலை, சென்னை - 600 006. போன்: 8276646/8270311.

கார்ப்பரேட் அலுவலகம் : 37/1, கதீட்ரல்சாலை, சென்னை 600 006. போன் : 8281826 / 8281930.

கிளைகள்: சென்னை நகரம்: குரோம்பேட்டை, போன்: 401267; நங்கநல்லூர், போன்: 2348593/2346056; மேற்கு மாம்பலம், போன்: 4830150; அண்ணா நகர் மேற்கு, போன்: 6212047; கே.கே. நகர், போன்: 4833917; அம்பத்தூர், போன்: 681860; விருகம்பாக்கம், போன்: 4830846; மடிப்பாக்கம், போன்: 2346586. கோயம்புத்தூர், போன்: 443576; திருச்சி, போன்: 25323; மதுரை, போன்: 30626; காரைக்குடி, போன்: 22023; வேலூர், போன்: 21902; திருநெல்வேலி, போன்: 322073,337559; காஞ்சிபுரம், போன்: 23408; பாண்டிச்சேரி, போன்: 31859. பெங்களூர் சிடி: மல்லேஸ்வரம், போன்:366433; இந்திரா நகர், போன்: 556 9397; செகந்தராபாத், போன்: 819488.

ADWAVE/LTC/5036 TAM B

ஸ்ரீ காஞ்சி பூஜ்ய ஸ்ரீ பரமாச்சார்யாள் அவர்கள்
அத்வைத வித்யாசார்யாள் மஹாராஜா ஸாஹேப் பகவான்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களின் வம்சத்தில் உதித்தவர்களே.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 130 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 500/-, ரூ. 750/- அல்லது ரூ. 1000/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 5000/-, ரூ. 7500/- அல்லது ரூ. 10,000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
42, காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

......இந்த நன்கொடைக்கு **80-G** விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு......

குறிப்பு : எம்மிடம் வேத, வைதீக, ப்ரயோக நூல்கள் யாவும் கிடைக்கும். Rs. 3/- க்கு தபால் தலை அனுப்பி எமது Catalogue ஐ பெற்றுக் கொள்ளலாம்.


நெல்லை பெனிபிட் பண்ட் லிமிடெட்

26, ரங்கநாதன் தெரு, முதல் மாடி, தி.நகர், சென்னை-17.
4345178

பரிசு! பரிசு! பரிசு!
14 கிராம் தங்க செயின்

1. பிக்சட் டெபாசிட் 21% + 3% போனஸ்
2. பென்ஷனர் டெபாசிட் 21% + 3% போனஸ்
3. கல்வி உதவி டெபாசிட் 24% + 4% போனஸ்
4. சுரேகா டெபாசிட்


செலுத்தும் தொகை ஒரு தரம் மட்டும்	காலம்	முதிர்வு தொகை
ரூ. 1000	23 வருடம்	ரூ. 1,00,000



5. பிறந்த நாள் டெபாசிட்

செலுத்தும் தொகை ஒரு முறை மட்டும்	வருடம் தோறும் பிறந்த நாள் அன்று	திருமணத்தின் போது கிடைக்கும் தொகை
ரூ. 4250	ரூ. 1000	ரூ. 5000


வீடு	நிலம்	தங்க நகை	பேரில் கடன் வழங்கப்படும்



• வைர மோதிரத் தோற்றம்

பூரணசூரிய கிரகணம் 19-ஆம் நூற்றாண்டில் ஒரு முறை மட்டுமே இந்தியாவில் காணப் பட்டது. அதே போல் 21 - ஆம் நூற்றாண்டிலும் ஒரு முறைதான் காணப்படும். ஆனால் இந்த நூற்றாண்டிலோ 1980 - ஆம் ஆண்டு ஒரு முறை நிகழ்ந்து, சமீபத்தில் தீபாவளிக்கு மறுநாள் இரண்டாவது முறையாக நிகழ்ந் துள்ளது. மீண்டும் 1999-ல் இந்தி யாவில் காணப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சூரியனைப் பூமியும், பூமியை அதன் துணைக்கோளான சந்திர னும் சுற்றி வருகின்றன என்பது தெரிந்ததே. இவற்றின் சுற்றுத்தளங்கள் (planes of revolution) ஒன்றாக இருப்பதில்லை. ஆனால் சில நேரத்தில் மட்டும் ஒரே தளப் பாதையில் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சந்திரன் வந்து சூரியனை மறைக்கிறது. இந்நிகழ்ச்சியே சூரியகிரகணம். அத்தகைய நிலை அமாவாசையன்று மட்டுமே வர சாத்தியமாதலால் சூரிய கிரகணம்



அமாவாசையன்றுதான் நிகழ முடியும்.

சந்திரன், பூமிக்கும் சூரிய னுக்கும் இடையே ஒரே தளப் பாதையில் (planar axis) இருக் கையில், சந்திரனிலிருந்து கூம்பு வடிவ நிழல் (கரிய பகுதி) பூமி யில் விழுகிறது. இதை 'அம்ப்ரா' (umbra) என்பர். இதைச் சுற்றி 'பெனம்ப்ரா' (penumbra) எனப்படும் 'சார்ந்த நிழல்' பகுதியும் உள்ளது. அம்ப்ரா பகுதிதான் முழு சூரிய கிரகணம் காணப்படும் பகுதி யாகும். பெனம்ப்ரா, நிழல் விழும் இடங்களில் 'பார்கவ' அல்லது 'குறைக் கிரகணம்' தென்படும்.

24 அக்டோபரன்று காணப்பட்ட பூரண சூரிய

1. சூரியன், 2. சந்திரன், 3. பூமி.

■ அம்ப்ரா எனப்படும் பூரண கிரகணப் பகுதி

□ பெனம்ப்ரா அல்லது சார்ந்த நிழல் பகுதி (குறைக் கிரகணம்)

கிரகணப்பகுதி, இந்தியாவில் சில இடங்களில்தான் தெரிந்தது. சென்னையில் அன்று சுமார் 65 சதவீத குறைக்கிரகணம் நிகழ்ந்தது.

சூரிய மற்றும் சந்திர ஈர்ப்புச் சக்தியை வைத்துக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒருமுறை சூரிய கிரகணம் நடந்தால் அதற்கு பதினெட்டு வருடம், 11.3 நாட்கள் கழித்து பூமி, சூரியன் மற்றும் சந்திரன் ஆகியவை கிட்டத்தட்ட மீண்டும் அதே நிலைக்கு வரும். எனவே மீண்டும் ஒரு கிரகணம் அன்று வரும் என எதிர்பார்க்கலாம். இதையே வான் இயலாளர்கள் 'சுரோஸ் சுற்று' (Saros cycle) என்பர். ஆக சூரிய கிரகணம் நிகழ்தலை முன்னறிவிக்க இம்முறை பயன்படுகிறது. இந்த காலகட்டத்திற்கு இடையே வேறு கிரகணங்களும் நிகழ வாய்ப்புண்டு.

கிரகணத்தை அனேகம் பேர் பார்த்திருக்க மாட்டார்கள். வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடாது என்ற நியாயமான எச்சரிக்கை தவிர, பலவிதமான தோஷங்கள் குறித்த ஆதாரமில்லாத பயமும் இதற்குக் காரணம். ஆனால் முறையாக, பாதுகாப்புடன் பூரணகிரகணத்தைக் காண்பதே ஒரு சுவைமிகு அனுபவம். சிறிது சிறிதாக சூரியன் மறைக்கப்பட்டு, பூரணமாய் மறைவதற்கு முன் ஓர் ஒளி விடும் மணி மாலையைப் போன்ற வட்டம் காணப்படும். சந்திரனின் மேற்பரப்பில் உள்ள மேடுபள்ளங்களே இதற்குக் காரணம். அதன் ஊடே வெளிவரும் ஒளியை நாம் காண, அது மணி மாலை போல ஒரு தோற்றத்தை உண்டு பண்ணுகிறது. இதை 'பெய்லி மணிகள்' (Bailey Beads) என்பர். அது சில மணித்துளி நேரத்தில் மறைந்து ஒரு வைர மோதிரம் போன்ற காட்சியைத் தோற்றுவிக்கும். சந்திரன் சூரியனைப் பூரணமாய் மறைக்கும் நிகழ்ச்சியின் இறுதிக் கட்டம் இது. இது கண்ட சில நொடிகளில் சூரியனின் ஒளிக்கற்றை முழுதும் மறைக்கப்படும். அப்பொழுது இருள் சூழும். நட்சத்திரங்களையும், சுக்கிரன், சனி முதலிய கிரகங்களையும் முன்னிரவில் காண்பது போல காணலாம். சூரியன் முழுவதும் மறைக்கப்பட்டிருக்கும் நேரம் அதிகபட்சம் எட்டு நிமிடங்களே இருக்கும்.

சூரிய கிரகண காலம் பல அறிவியல் ஆய்வுகளுக்கு ஏற்ற காலமாகும். சூரியனின் அண்டவெளி ஒளிப்பகுதி (photosphere), குரோமோப் பகுதி (chromosphere), கரோனா (Carona) என மூவகைப்படும். கரோனா பற்றிய ஆய்வுகள் நடத்த பூரண சூரிய கிரகணம் ஓர் அரிய வாய்ப்பு. மற்றும் புதன், சுக்கிரன் முதலிய கோள்கள் சூரியனுக்கு அருகே உள்ளன. இவைகட்கும் சூரியனுக்கும் இடையே துணைக்கோள்கள் அல்லது வான்பொருள்கள் உள்ளனவா, இருப்பின் அவற்றின் நிலை என்ன என்பதை அறிய முடியும். கிரகண காலத்தில் சூரிய ஓசையில் (Solar noise) ஏற்படும் மாற்றங்கள் மின்காந்த அலையியல் ஆராய்ச்சியில் உதவும். இது தவிர, சூரிய ஒளிக்கற்றையில் ஏற்படும் வீழ்ச்சி, அதனால் வானிலையியல் அலகுகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகளும் கிரகண காலத்தில் நடத்தப்பெறும். பறவை, மிருகங்கள் போன்ற உயிரினங்களின் செய்கை, போக்குகளில் மாறுதல்கள் உள்ளனவா எனவும் கிரகண காலத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

- டாக்டர் டி. ஆர். சிவராமகிருஷ்ணன்


(இயக்குனர், இந்திய வானவியல் துறை)

சரியான தலைவலி!

“அந்த மாநாட்டிற்குப் போய் வந்தேன். ஒரே தலைவலி, போர் அடித்துவிட்டார்கள்!” - இப்படி எவரேனும் உங்களிடம் கூறி இருப்பார்கள். ஆனால் தலைவலிக்காகவே ஒரு மாநாடு கனடாவில் அண்மையில் நடந்து முடிந்திருக்கிறது! அகில உலக ஏழாவது தலைவலி மாநாடு!

இந்த மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடந்து வருகிறது. தலைவலி மனிதனுக்கு ஏன் வருகிறது? அது எத்தனை வகைப்படும்? விளக்குவது எப்படி என்பதை ஆராய்வதே இந்த மாநாட்டின் நோக்கம்.

தகவல் : வீ.எஸ். ராஜகோபால்



ஆபீஸ் விஷயமாக ஒரு வாரம் டெல்லி சென்றிருந்த சமயம், அப்ரண்டிஸ் இண்டர்வியூ முடிந்திருந்தது.

"பாலச்சந்தர்..." ரங்காச்சாரி அழைத்தார்.

"மூணு கேண்டிடேட் செலக்ட் பண்ணியிருக்கோம். ரெண்டு பேர் ஜெண்ட்ஸ்!"

"எங்கள் செக்ஷனுக்கு அந்த மூன்றாவது கேண்டிடேட்ட அனுப்பிடுங்க..." என்றேன்.

"நிச்சயமா.. உங்களுக்கும் பேச்சுத் துணைக்கு ஒரு பொண்ணு வேணும் இல்லையா...?" சாரி சிரித்துக் கொண்டே சொன்னார்.

வாஸ்தவம்தான். இதுவரை– கல்யாணத்தைத் தள்ளிப் போட்டாயிற்று. முப்பத்தெட்டு வயது வரை! கிராமத்தில் விவசாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் அப்பாவும் சலித்துப் போய் தம்பிக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டார்.

மனசுக்குப் பிடித்தவள் அமையவில்லை. உடன் வேலை பார்த்து, எட்டாண்டுகள் நட்பாகப் பழகிய நண்பனின் மனைவி தற்கொலை செய்து கொண்ட பின், பெண்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யவே பயமாகத்தான் இருக்கிறது.

இத்தனை வருட உழைப்பில் ஊருக்கு நடுவே வீடு, வந்து போக பைக், கணிசமான பேங்க் பேலன்ஸ், காசுக்குக் கவலை இல்லாத வாழ்க்கை. வேறு என்ன வேண்டும்?

கடவுள் எல்லாமே நிறையத் தந்திருப்பது போல திருப்தி–

உஷாவை சந்திக்கும் வரை.

பத்து பத்துக்கு அலுவலகத்துக்குள் நுழையும் அவள்–

குற்றவாளி மாதிரி நடுங்கிக் கொண்டிருந்தாள்.

"சாரி சார்... பத்து நிமிஷம் லேட்..." என்றாள், இமைகள் படபடக்க.

"நீ...?"

"உஷா."

"உஷான்னா?"

"புது அப்ரண்டிஸ். முதல் நாளே லேட்டு..."

"ஓக்கே... சீட்டுக்குப் போ... சரவணன்னு ஒரு கிளார்க்குக்கு அஸிஸ்ட் பண்ணு. நான் சில சமயம் கூப்பிடறப்போ வந்து லெட்டர்ஸ் எடுத்துக்கோ."

சாரி இன்டர்காமில் வந்தார்.

"என்ன பாலச்சந்தர் சார். கேண்டிடேட் ஓகேயா?"

"டபுள் ஓகே..." என்றேன் ஜாலியாக.

அதிக மேக்-அப் இல்லை. கைகளில் வெறும் சங்கு வளையல்கள். கழுத்தில் ஓர் ஆபரணம்.

திருத்தமான முகம். ஒரு பரு இல்லாமல். எல்லாவற்றையும் கொஞ்சம் அதிசயத்தோடு பார்க்கிற குழந்தைப் பார்வை... பனிச்சென்ற சிரிப்பு. ஒருவாரத்தில் வேலை முழுக்க கற்றுக் கொண்டாள்.

மற்றவர்கள் கேண்டீனில் அரட்டை அடிக்கும் பொழுது இவள் மட்டும் வராந்தாவில் காப்பி குடித்துவிட்டு ஏதாவது ஃபைலைப் புரட்டிக் கொண்டிருப்பாள். லஞ்ச் டயம் முடிந்து, ஆங்கிலப் பத்திரிகையின் கட்டுரைகளை கவனமாகப் படித்துக் கொண்டிருப்பாள்.

ஒருநாள் மதிய இடைவேளையில் வலியச் சென்று பேசினேன்.

"உஷா..."

திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"சார்...."

"என்ன படிக்கறே?"

"எம்.எஃப். உசேன் ஓவியம் பற்றி ஒரு கட்டுரை..."

"உனக்குப் பிடிக்குமா?"

"ரொம்ப...." என்ற போது விழிகள் விரிந்ததை ரசித்தேன்.

"வேறென்ன பிடிக்கும்?"

"கவிதைகள்..."

சரஸ்வதி பூஜையின் போது கலர் பொடி கொண்டு அழகாகக் கோலமிட்டாள்.

பழமை, புதுமை இரண்டையும் அவள் சமமாகத் தெரிந்து வைத்திருப்பது ஆச்சரியமாக இருந்தது.

பூஜை முடிந்து பைக்கில் பிரசாத பையை மாட்டி, உதைத்துக் கிளம்பும் பொழுது உஷா வருவது தெரிந்தது. 'ஒரு நிமிஷம் நிறுத்தி அவளை அவள் ரூமிலோ, வீட்டிலோ ட்ராப் பண்ணி விடலாம்' என்று நினைத்தேன். அப்பொழுதுதான் அவள் மற்றொரு அப்ரண்டிஸ் பையனுடன் சிரித்தபடி வருவது தெரிந்தது.

'யார் இவன்...?' சாரியிடம் விசாரிக்க வேண்டும். 'எத்தனை நாள் பழக்கம்?' நாளை உஷாவிடம் கேட்க வேண்டும். மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு [illegible]

இல்லாதது

இல்லாத வேலையை வைத்துக் கொண்டு காதலா!

அந்தப் பையன் ஒல்லியாக இருந்தான். உயரம் கூட உஷாவை விட கம்மிதான். கண்ணாடி அணிந்திருந்தான். அவன் பேசிய எல்லாவற்றுக்கும் அவள் சிரித்தபடி வந்தாள்.

என்னுள் என்னவோ பற்றிக் கொண்டது. என்ன இருக்கிறது இவனிடம்?

அவர்கள் கேடிசி பஸ்ஸிற்கு எதிர்த் திசையில் திரும்பி நடந்ததால் என்னைக் கவனிக்கவில்லை.

வீட்டுக்குப் போனதும் முதல் தடவையாக போரடித்தது. யாரிடமாவது பேச வேண்டும் போல் இருந்தது. அப்பாவிடம் கல்யாணத்தை நடத்திவிடச் சொன்னால் என்ன - உஷாவுடன்?

வரதட்சணை வாங்காமல்...

நாமே நகை போட்டு...

கல்யாணச் செலவையும் ஏற்று...

உஷாவின் பெற்றோருக்குக் கசக்கவா செய்யும்?

என்ன இல்லை என்னிடம்...?



அடுத்த நாள் கிளம்பும் பொழுது மற்ற நாட்களை விட இன்னும் கொஞ்சம் அக்கறை எடுத்து ட்ரெஸ் செய்து கொண்டேன்.

அவளிடம் நளினமாகக் கேட்க வேண்டும். பெற்றோரின் விலாசத்தை விசாரிக்க வேண்டும்.

உடுப்பி ஹோட்டலில் டிபனை விரைவாக முடித்து விட்டு, பத்து நிமிஷம் முன்னாலேயே அலுவலகம் வந்தாயிற்று.

லிஃப்டைத் தவிர்த்து விறுவிறுவென்று படியேறினேன். வேகம், துடிப்பு.

கடைசிப் படியில் கால் வைத்தபோது கால் சுளுக்கிக் கொண்டது.

மூட்டு மடங்கி, அப்படியே உட்கார்ந்து விட்டேன். வலி உயிர் போனது. காலை நீட்ட முடியவில்லை.

"சார்..." தூரத்தில் பார்த்துவிட்ட உஷா, அவசரமாக வந்தாள்.

'சீனு' என்று அவள் நண்பனையும் கூப்பிட்டு, கைக்கு ஒருவராக பிடித்துக் கொண்டு, "மெதுவாக, எழுந்திருங்க சார்... உங்க ரூமுக்குப் போயிடலாம்..." என்றாள். அவர்கள் ஓடி வந்தபோது என் இயலாமை புரிந்தது.

காலைத் தூக்கி வைக்க முடியவில்லை.

சீனு என் ஷூவைக் கழற்ற, அவள் தன் ஹேண்ட் பேகில் இருந்த அமிர்தாஞ்சனை எடுத்துக் காலில் அழுந்தத் தேய்த்தாள்.

நிமிடத்தில் செய்தி பரவி, ஒவ்வொருவராக நேராக என் ரூமிற்கே வந்து விட்டனர்.

''ஐம் ஓகே...''- போலியாகச் சொல்லி அவர்களை அனுப்பி வைத்தேன்.

உஷாவும் சீனுவும் இன்னும் என் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தனர்- உண்மை புரிந்த மாதிரி.

பஸ்ஸரைத் தட்டி ப்யூனை அழைத்து மூன்று காப்பி- அவனுக்கும் சேர்த்து ஆர்டர் செய்தபோது ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"சார்... இது... சீனு... சீனிவாசன் எம்.காம். என்னை மாதிரியே கவிதைப் பித்தன்.

"ஹலோ... உஷா சொன்னது கொஞ்சம் அதிகம். நமக்குக் கவிதை படைக்க வராது! படிக்க வரும்!"

''எனக்குக் கவிதை படிக்கக் கூட பொறுமை கிடையாது சீனு..."என்றேன். அவன் மையமாகச் சிரித்தான்.

"யு ஆர் லக்கி" என்றேன் அவனைப் பார்த்து. விரட்ட முயன்ற வருத்தம் என் குரலில் கொஞ்சமாகத் தலைகாட்டியதை அந்த கவிதைப் பித்தர்கள் இருவருமே கவனிக்கவில்லை....

நா. நாகராஜன்

கொட்டும் மழை சீசன். சூடான டீ குடித்தபடி ஜன்னல் வழியே தெரியும் மழைக் கம்பிகளை ரசிக்கலாம்... எல்லாம் தலைக்கு மேலொரு கூரை இருக்கும் தைரியத்தில்தான். அதில்லாத பிளாட்பாரவாசிகளின் நிலை என்ன...? விசாரிக்கக் கிளம்பினோம் - மழை பெய்யாத ஒரு நாளில்...

வளர்ப்பு மக
செலவழிச்ச ப
கட்டித் தரல

“**கா**த்து, வெயில், மழை - எல்லாமே பழகிப் போச்சு... இரண்டு தலைமுறையா பிளாட்பாரம்தான் சார். “இங்கேதான் நான் பொறந்து, வளர்ந்து, கல்யாணம் கட்டிக்கிட்டது எல்லாம்.”

சர்வசாதாரணமாய் பிளாட்பாரக் கல்லில் உட்கார்ந்து கொண்டு பேசத் தொடங்கினார் சங்கர். சென்னை, ஐஸ்ஹவுஸ் பஸ் ஸ்டாண்டை ஒட்டி உள்ள பிளாட்பாரம்தான் இவரது வசந்த மாளிகை!

இந்தப் பக்கம் கூவ மணம் வீசும் சாக்கடை. அந்தப் பக்கம் வாகனப் பேரிரைச்சல். கார்ப்பரேஷன் சுவரை ஒட்டி, சங்கரின் ஆஸ்திகள் நாலைந்து பாத்திரம். இரண்டு மூன்று டப்பாக்கள். பிதுங்கித் தெரியும் அழுக்குத் துணிகள்.

“மொதல்ல எல்டாம்ஸ் ரோட்ல இருந்தோம். அப்புறம் இங்க வந்துட்டோம். அந்தக் காலத்துல எங்கப்பா கைவண்டி இழுத்தாரு. இப்ப நான் டிரை சைக்கிள் ஓட்டறேன்.

“வண்டிக்குப் பதினைஞ்சு ரூபா வாடகை. சவாரி கெடைச்சாலும் கெடைக்காட்டாலும் குடுத்துடணும். சில நாள் அம்பது - அறுபது ரூபா வரும். சில நாள் ஒண்ணுமே வராது...”

படிப்பு கிடையாது. அனுபவம் மட்டுமே அறிவு தந்தது. சங்கருக்கு வயது 26.

“படிக்கணும்னுதான் ஆசை. எங்கப்பா பத்து வயசுலேயே வண்டி ஓட்டச் சொல்லிட்டாரு. அண்ணன் எட்டாவது வரைக்கு



படிச்சிருக்காரு."

அண்ணன் ராஜேந்திரன். அவரும் பிளாட் பாரவாசிதான். எட்டு குழந்தைகள்!" சங்கருக்கு மூன்று. இரண்டு பையன்; ஒரு பெண் இந்த மூன்றாவது தலைமுறையாவது தலைக்கு மேல் கூரை பார்க்குமா...?

சாவதானமாய் பூ கட்டியபடி சங்கரின் மனைவி புஷ்பா சொன்னார் :

...வக்கு ...த்துல, வீடு ...ரில்ல?

"யாரு ஆட்சிக்கு வந்தா இன்னா சார்? ஒண்ணும் புண்ணியமில்ல! இப்போ வளர்ப்பு மகன் கல்யாணம் பண்ணியிருக்காங்களே, அந்தத் துட்டுல எங்கள மாதிரி எத்தினி பேருக்கு ஊடு கட்டிக் குடுத்திருக்கலாம்?"

எப்படித்தான் வாழ்கிறார்கள்?



"பழகிப் போச்சு சார்... யாரும் பாக்காத சமயத்துல... ராத்திரி ஒண்ணு, இரண்டு மணிக்குக் குளிச்சுடுவேன். அப்புறம் காசு இருந்துச்சுன்னா மீனு, கறி. இல்லைன்னா கஞ்சித் தண்ணி..." - புஷ்பாதான் மீண்டும் சொல்கிறார்.

வீடு இவர்களது முக்கிய ஆசை. அதற்கு ஒரு நிலையான உத்யோகம் அவசியம்.

"ஆயிரம் ரூபாயில ஒரு வேலை கெடைச்சாப் போதும் சார். முன்னுக்கு வந்துடுவேன். யாரு குடுக்கறாங்க? ரேஷன் கார்டு கூட வச்சிருக்கேன். என்ன பிரயோஜனம்? புள்ளைங்கள படிக்க வெக்கணும்னு ஆசை இருக்குது. ஒண்ணுத்துக்கும் வழியில்லையே!

"இப்படியே மழை வந்தா இங்க அங்க ஓடிக்கினு, வெயில் காஞ்சா மரத்தடியில குந்திக்கினு காலம் போவுது!"

வெள்ளம் வந்தால் இன்னும் மோசம். பாத்திரம் பண்டம் எல்லாம் அடித்துக் கொண்டு போய் விடும். தண்ணீர் வடிந்தவுடன் மீண்டும் கடன் வாங்கி, மீண்டும் புதுப் பாத்திரங்களோடு அதே பழைய வாழ்க்கை.

"வருஷக் கணக்கா இருக்கறதால, போலீஸ் கண்டுக்கறது இல்ல. எப்பவாச்சும் திடீர்னு வந்து, இருக்கற சாமானுங்களையெல்லாம் விசிறிக் கடாசவாங்க. மறுபடியும் திரும்பி வந்துக்க வேண்டியதுதான்" - ஞானி போல் புஷ்பா.

"இங்க ரவுடிப் பசங்க எல்லாம் உண்டு. அவனுங்க அடிச்சிக்கினாங்கன்னா துண்டக் காணும், துணியக் காணும்னு ஓட வேண்டியதுதான். நான் எந்தக் கட்சியிலும் இல்ல. அதனால சண்டைக்கும் போறதில்ல. நமக்கெதுக்கு அந்த வம்பெல்லாம்?"

அரசு நிறைய வீடு கட்டித் தருவதாக நாளும் பேப்பரில் வருகிறதே?

"அதுக்கெல்லாம் துட்டு கேக்கறாங்க. அஞ்சாயிரம், பத்தாயிரம்னு பணம் வேணுமாம். நாங்க எங்க போறது? இப்படியே இருக்க வேண்டியதுதான்."

பக்கத்தில் சங்கரைப் போல் ஐம்பது பேருக்கு மேல் கல்யாணம், பேறுகாலம், வளர்ப்பு எல்லாம் நீண்டு கிடக்கும் பிளாட்பாரத்திலேயே...

யாரோ வந்து இளநீர் ஏற்றிப் போக அழைக்க, பரபரவென்று சங்கர் ஓடினார். தலைநிமிர்ந்து விட்டு மீண்டும் புஷ்பா பூ தொடுக்க ஆரம்பித்தார்.

- **துளசி**

படம் : **ராஜநாராயண்**

கவலைக் கடலும் கருணைக் கடலும்!

ஓ வென்ற இரைச்சலுடன் கட்டிப் புரண்டு ஓடி வந்து தரையில் மோதி சிலீர் என்று திரும்பி ஓடும் அலைகள் நிறைந்தது அந்தக் கடற்கரை. கன்னத்தில் கைவைத்தபடி கரையில் உட்கார்ந்திருந்தார் பெரியவர் ஒருவர்.

"ஏன் சுவாமி இப்படி உட்கார்ந்து இருக்கிறீர்?" என்று நயந்து கேட்டார் இன்னொரு பெரியவர்.

"கடலில் குளிக்க வேண்டும். கொஞ்சம் அலைகள் அடங்கி அமைதியானதும் குளிக்கலாம் என்றுதான் காத்திருக்கிறேன்" என்றார் பெரியவர். நடக்கிற காரியமா இது!

பழைய கதை என்றாலும் இது சத்தியமான விஷயம். 'அலை எப்போ ஓயறது.. தலை எப்ப மூழ்கிறது' என்ற பழமொழி வாழ்க்கையின் ரத்தினச் சுருக்கம். இந்தக் கடல் அலைகள் பிறவிப் பெருங்கடலான சம்சார சாகரத்தின் அடையாளங்கள். இந்தக் கரு(ங்)கடலைக் கடப்பதற்கு என்றே தம் திருவடியாகிய தெப்பங்கள் உடன் கால் கடுக்க நிற்கிறார் ஒரு சுவாமி! அவர்தான் செந்தில் ஆண்டவர் என்று அழைக்கப்படும் சுப்ரமணியர்.

தம் தந்தையாருக்கு உரிய கைலாசத்தில் தங்காது, தாயாருக்கு உரிய மணித்வீபத்தில் இல்லாது, தமக்கே உரிய ஸ்கந்தகிரியிலும் வசிக்காது, உப்புக் காற்று வீசும் திருச்செந்தூர் தலத்தில் குடியிருக்கிறாராம் சுவாமி! எதற்கு?

"யதா ஸந்நிதானம் கதா மாநவாமே
பவாம் போதிபாரம் கதாஸ்தே ததைவ"

என்கிறார் ஆதிசங்கரர், தம் சுப்ரமண்ய புஜங்கம் என்கிற தோத்திரப் பாடலில். பாம்பு நெளிகிற பாணியில் பாடும் புஜங்கம் ஒன்றை வயிற்றுவலியால் துடித்தபோது பகவத் பாதர் பாடினார் என்று சொல்வார்கள். சம்சாரமாகிய கடலைக் கடக்க நான் இருக்கிறேன் என்பதை விளக்கவே சமுத்ரக் கரையில் சந்நதி அமைத்துக் கொண்டார் சுவாமி என்பது சுப்ரமண்ய புஜங்கத்தின் நான்காம் பாட்டின் பொருள்.

சுகி சிவம்

அலைவாய், திருச்சீர் அலைவாய் என்று அழகுத் தமிழில் அழைக்கப்படும் திருச்செந்தூர் ஆறுபடை வீடுகளில் ஒன்று. "திருமணி விளக்கின் அலைவாய்ச் செருமிகு சேஎய்" என்று அகநானூறும் "வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்" என்று புறநானூறும் பாடும் பழைய தலம் செந்தில்.

'சூரபதுமன் என்கிற ஆணவ அசுரனை வென்றபின் ஜயம் குறித்த ஜயாபிஷேகம் செய்த ஜயந்திபுரம் செந்தி என்று ஆகி, செந்தில் ஆனது' என்பது சிலரது கருத்து. 'இங்கு இறைவனைத் தரிசிப்பது கயிலை மலையில் சிவனைத் தரிசித்த புண்யத்திற்கு நிகர்' என்ற அடிப்படையில் சற்குரு அருணகிரிநாதர், "கயிலை மலையனைய செந்தில்பதி" என்று பாடியருளினார். தீபாவளிக்கு மறுநாள் முதல் தொடங்கி ஆறுநாள் விரதமிருந்து, சூரசம்ஹாரத்தைக் கண்டு, கடலில் நீராடி விரதத்தை நிறைவு செய்யும் கந்தர் சஷ்டிப் பெருவிழா இத்தலத்தில் நடக்கும் தனிப்பெரும் விழா.

ஸ்ரீ வைகுண்டத்தில் சைவ வேளாள மரபில் பிறந்து பெரும் புகழ் பெற்ற ஸ்ரீ குமரகுருபரர் ஐந்து வயது வரை பேசாநிலையில் இருந்தார். ஊமை என்றே உலகம் நினைத்தது. செந்தில் ஆண்டவர் சந்நிதியில் பிள்ளையை இட்டுப் பெற்றோர் அழுத போது "பூமேவு செங்கமலம்" என்று குழந்தை பேசியது! ஊனப் பேச்சாக இன்றி ஞானப் பேச்சாகக் கந்தர் கலிவெண்பா பாடினார் குமரகுருபரர்.

பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்று சிவபெருமானால் கிள்ளப்பட்டது என்று ஒரு வரலாறு உண்டு. அப்படி பிரமன் இழந்த தலையை இங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மீண்டும் பெற்றான். மற்றும் அங்க சுந்தரி என்ற பாண்டிய அரசன் திருமகள் ஒருத்திக்குச் சாபத்தால் குதிரை முகம் வந்தது. இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி அழகு முகம் பெற்றாள். இதன் காரணமாக இங்குள்ள தீர்த்தம், 'வதனாரம்ப தீர்த்தம்' எனப் பெறும். கோயிலுக்குத் தெற்கே கடலோரத்தில் உள்ள நாழிக் கிணறு புண்ய தீர்த்தம். இது உட்பட கோயிலைச் சுற்றி காயத்ரி மந்திரத்தின் இருபத்து நாலு எழுத்துக்களைக் குறிக்கும் வகையில் இருபத்து நாலு புண்ய தீர்த்தங்கள் உள்ளன

என்பது ஐதீகம்.

கந்தர் சஷ்டி காலத்தில் லட்சக்கணக்கான மக்கள் விரதம் இருந்து முருகப் பெருமானை வணங்குவது கண்டுணர வேண்டிய ஞான அநுபவம். சஷ்டிக் கவசம் படித்தபடி எங்கு பார்த்தாலும் மக்கள் தங்கி இருந்து, ஜபம் செய்து, ஒருவித கதகதப்பு கோயில் முழுவதும் பரவி இருப்பது உணர வேண்டிய ஒரு நிலை. 'மகாபுனிதம் தங்கிய செந்தில்' என்பார் அருணகிரிநாதர்; உண்மை இது. திருப்பனந்தாள் மடத்தின்

கிறார் சுவாமி. மேலும் மூலவருக்குப் பின்னால் வடமேற்கு மூலையில் பஞ்சலிங்கங்கள் உண்டு. அனுமதி பெற்று உள்ளே சென்று பார்க்க வேண்டிய காட்சி அது. மூலவருக்குத் தீபாராதனை செய்து பஞ்சலிங்க மூர்த்திகட்கும் காட்டும் வழக்கம் உண்டு. மூலவர் ஒரு முகத்துடன், அபயம், வரதம், பூ, செபமாலை ஏந்திய நான்கு கரத்துடன், கிழக்கு நோக்கிய நிலையில் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

உற்சவர் திருப்பெயர் ஆறுமுகநயினார். அவர் இருக்கும் இடம் ஷண்முக விலாசம் என்றே அழைக்கப்படுகிறது. ஆறுமுகம், பன்னிரு கரங்கள் உடன் காட்சி தருகிறார். கடலுக்குள் சென்று மீண்டும் கிடைத்த திருமேனி அவர் என்று ஒரு செய்தி உண்டு.



அதிபர் சஷ்டியின் போது இங்கு மௌன விரதம் மேற்கொள்வது வழக்கம்.

இங்குள்ள மூலமூர்த்தி, 'ஜெயந்தி நாதர்' என்று அழைக்கப்படுகிறார். சிலர் அவர் உக்ர மூர்த்தி என்பர். அது பிழை. சூரசம்ஹாரம் முடிந்து, கடற்கரையில் தங்கிய சுப்பிரமணியர், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து சிவபெருமானை வணங்கினார். அது போது ஆனந்த மிகுதியால் தேவர்கள் 'முருகா' என அழைக்க, 'என்ன துயரோ' எனக் கருதி கருணை பாலிக்கத் திரும்பிப் பார்க்கிறார், முருகப் பெருமான். அதனால் இவர் கருணைக்கடல்; கோபாக்கினி அல்ல.

சிவபூஜையில் திரும்பிய வடிவம் என்பதால் தான் ஒரு கையில் தாமரையுடன் காட்சி தரு

மாசியிலும் ஆவணியிலும் திருவிழாக்கள் நடைபெறும் போது ஏழாம் நாள் திருவிழாவில் ஆறுமுக நயினார் திருவீதி உலா வருவது வழக்கம். பச்சை சாத்தி, வெள்ளை சாத்தி என்று ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வண்ணப் பூவில் அலங்கரித்தபடி சுவாமி வருவது இத்திருக்கோவிலின் தனிச்சிறப்பு.

'இலை விபூதி' திருச்செந்தூரின் இன்னொரு சிறப்பம்சம். விபூதி பிரசாதத்தை பன்னீரிலையில் மடித்துத் தருவார்கள். அந்த இலையில் பன்னிரு நரம்புகள் ஓடுவதால், பன்னிருகரத்தால் ஆறுமுகன் தருகிற அருட்பிரசாதம் அது என்று விசேஷமாகக் கருதப்படுகிறது. திருச்செந்தூரில் சந்தனப் பிரசாதமும் தனிச்சிறப்புடையது. ஏது காரணத்தினாலோ திருக்கோவில் 'சந்தன சைவம்' என்று அழைக்கப்படுகிறது.

மேளதாளங்கள் முழங்க, பக்தி ஆவேசத்தோடு பால்காவடி ஏந்தி வருகிற பக்தர்கள் வெளிப்படுத்தும் ஆனந்தநிலையும், அங்கப் ரதட்சணம் செய்யும் அன்பர்கள் அநுபவ நிலையும் உணர்ந்து உருக வேண்டியவை.

தமிழின் பழைய இலக்கியமாகிய திருமுருகாற்றுப்படையில் செந்திலம்பதியில் அறுமுகத்துடன் கூடிய இறைவர் திருப்புகழே பேசப்படுகிறது. இருள் படர்ந்த உயிர்களுக்கு ஒளிதரும் ஒருமுகம், வேண்டி வருவோர் வேண்டுவது வழங்கும் வரம் தரும் ஒருமுகம், அந்தணர் வேள்வியை ஆதரித்து அருளும் ஒருமுகம், விளங்க முடியாதவற்றை விளங்க வைக்கும் ஞானகுருவாக ஒருமுகம், எதிரிகளை வீழ்த்தும் வெற்றித் திருமுகமாக ஒருமுகம், வள்ளியின் மொழி கேட்டுப் புன்னகை புரியும் காதல் மலர்ந்த ஒருமுகம் என்று ஆறுமுகங்களை வர்ணித்தார் நக்கீரர். இப்படியே முருகப் பெருமான் தோள்கள், திருமார்பு, தொடைகள் என்று திருவுருவ அழகைத் திருமுருகாற்றுப்படை 90-வது வரி தொடங்கி 125-வது வரி வரை வர்ணிக்கிறது.

இந்தத் தலத்தின் இறைவர் மீது பிரபந்தங்கள் பல உண்டு எனினும் நேயர் விருப்பமாக முருகனே வலிந்து கேட்ட நூல் ஒன்று உண்டு! அது திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ். பகழிக் கூத்தர் என்ற பரம வைணவரை பாடுபடுத்தி பாட்டு வாங்கிக் கொண்டார் செந்தில் ஆண்டவர். திருமாலை அன்றி வேறு தெய்வம் தொழுதறியாத பரம வைணவர் பகழிக்கூத்தர். பாட்டு வல்லார். அவர் தமிழ் மீது தனிக்காதல் முருகனுக்கு. அவர் மூலம் தன் புகழ் கேட்க அவா. ஆனால் வைணவர் மசிவதாக இல்லை. வயிற்றில் வலியை வரவழைத்து, திருமாலைத் தனக்காகப் பரிந்துரை செய்யச் சொல்லி இறுதியில் பிள்ளைத் தமிழ் பாடவைத்தான் செந் தமிழ்ச் செந்திநாதன்.


தொட்டிலில் உறங்கும் முருகனுக்குப் பசி வந்து விட்டது! என் அளவு பசி! சின்ன வயிற்றை எக்கி எக்கிக் குழைத்து அழுதான். (குழந்தைகள் அழுதால் கூட அழகாக இருக்கும்). மாணிக்க உதடுகளைக் குவித்து விரித்து அழுது, துள்ளினான்; துடித்தான்; வெளியில் விழுந்தான். சிறைவைத்திருந்த தொட்டிலை எட்டி உதைத்தான். மீன் போன்ற காதணி தோளைத் தழுவ தவழ்ந்து தாயைத் தேடி வந்தான்.

வருகிற போது அழுகை மறைந்து ஆனந்தம் தோன்றி அழகாகச் சிரித்தான். அம்மா மடியில் அமர்ந்ததும் அதுவரை மறந்திருந்த அழுகையை ஞாபகப்படுத்துக் கொண்டு விம்மி, பொருமி அழுதானாம் முருகன். குழந்தைகள் இயல்பை இதைவிட அழகாக யாரும் படம் பிடிக்க முடியாது! அழுகையை விட்டு விட்டு அம்மாவைப் பார்த்ததும் சிரிப்பதும் அம்மாவிடம் துக்கத்தை வெளிப்படுத்த, விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து அழுவதும் குழந்தைகள் ஸ்பெஷாலிட்டி.

"மெள்ளத் தவழ்ந்து குறுமூரல் விளைத்து
மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம்பார்த்து"

என்று 'எள்ளத்தனை' எனத் தொடங்கும் பாட்டில் எழுதினார் பகழிக்கூத்தர். அது சரி.. அழுகைக்கும் சிரிப்புக்கும் அதிக இடைவெளி இல்லை என்பது குழந்தைக்குப் புரிகிறது நமக்கு?...

ரஜினிக்கு உடன்பாடில்லையாம்!



● ரஜினியை, பா.ஜ.க.வில் சேரச்சொல்லி, இந்தி நடிகர் சத்ருகன்சின்ஹா கேட்டுக் கொண்டிருக்கிறார். அவரைத் தொடர்ந்து தமிழக பா.ஜ.க.வினரும் ரஜினியிடம் 'எங்கள் கட்சியில் சேர்ந்து விடுங்கள்' என்று வேண்டுகோள் விடுக்க, "பா.ஜ.க.வின் கொள்கைகளில் எனக்கு உடன்பாடு இல்லை" என்று ரஜினி மறுத்துவிட்டாராம்.

– இல்லப்பா

● சந்தனக் கடத்தல் விரப்பனும் ஹீரோவாகியிருக்கிறார்! 'வாண்டட் விரப்பன்' என்று ஒரு படம் வருகிறது. விரப்பனாக கன்னட நடிகர் தேவராஜ். கோபிநத்தத்திலேயே போய் 42 நாட்கள் படம் எடுத்திருக்கிறார்கள். கன்னடத்திலும், தெலுங்கிலும் இந்தப் படம் நூறு நாட்கள் ஓடியிருக்கிறதாம். சென்சார் பிரச்னைக்குப் பின் வந்திருக்கும் 'வாண்டட் விரப்பன்' பற்றி அதன் இயக்குநர் ரவீந்திரநாத் சொல்லும்போது,


"நான் விரப்பனை ஹீரோவாக்கிப் புகழவில்லை. உள்ளது உள்ளபடி கூறியிருக்கிறேன். மூன்று மாதங்கள் அவனைப்பற்றி முழுவிவரங்கள் சேகரித்து உருவாக்கப்பட்ட கதை. இதில் போலீசையும் நாங்கள் குறை கூறவில்லை. வால்டர் தேவாரமும், விஜயகுமார் (sic) —

விரப்பன் பார்த்தாச்சா?

– துளசி



இல்லத்தரசிகளுக்கு
இனிய செய்தி
3
cello
காற்றுப்புகாத கன்டெய்னர்கள்
ஒவ்வொரு
கேதான்
பிரஷ்ஷர் பேனுடன்
கேதான்
உங்கள் இல்லத்தில் ஒன்று இல்லாமல் இருக்க முடியாது.
சலுகை அக்டோபர் 30, '95 அல்லது சரக்குகள் தீரும் வரை.
இச்சலுகை இல்லாமலும் பேன்கள் கிடைக்கும்
மேற்கு வங்காளத்தில் இச்சலுகை இல்லை.



நவஜோதி இன்வெஸ்ட்மென்ட்ஸ்
192, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, மயிலாப்பூர்,
சென்னை - 600 004. Ph: 4993809, 4990161
குறைந்த பட்ச முதலீடு ரூ.5000/- மட்டுமே.
ஒவ்வொரு ரூ.5000/-க்கும் ஒரு பரிசு கூப்பன் உண்டு
வைப்பு நிதித் திட்டங்கள்
காலம் | வட்டி விகிதம் | ஊக்கத் தொகை
1 ஆண்டு | 24% | 2%
2 ஆண்டுகள் | 25% | 2%
3 ஆண்டுகள் | 26% | 2%
2% ஊக்கத்தொகை அனைத்து முதலீட்டிற்கும்
1. Rs. 10,000/- ஒரு வருட முதலீட்டிற்கு 24% வட்டி
2. Rs. 10,000/- 35 மாதங்களில் Rs. 20,000/- ஆகிறது.
3. Rs. 10,000/- 55 மாதங்களில் Rs. 30,000/- ஆகிறது.
குலுக்கல் நாள் 15.12.95
முதல் பரிசு
16 கிராம் தங்க நாணயம்
மற்றும்
'35' தங்க நாணயம்
பரிசாக வழங்கப்படும்
ரூ.25000/- முதலீடு செய்து ஒரு 'வெள்ளி காமாக்ஷி விளக்கு' பரிசாக பெறுவீர்

காப்பி, டிபன், மட்டன் சிக்கன் + நெஞ்சுவலி!

பாஸ்கரன் கொஞ்சமும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார், தாம் ஒரு விசாரணைக் கைதியாக சென்ட்ரல் ஜெயிலுக்குப் போவோம் என்று. கடந்த மாதம் 22-ம் தேதி, அவரை ஜெயிலுக்கு கூட்டிச் சென்ற காவல் அதிகாரிகளுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. காரணம், கண்காணிப்பாளர் அறையிலேயே உட்கார்ந்து கொண்டார் பாஸ்கரன். கண்களில் கண்ணீர். போயஸ் தோட்டத்துக்குத் தகவல் பறக்க, முதல்வரின் தனிச் செயலாளர் ஜவஹர் பாபு மூலம் சில ஆலோசனைகள் செயல்படுத்தப்பட்டன. 'நெஞ்சு வலி' என்று தீவிர மாரடைப்பு நோய்ப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அங்கு ஒன்றிரண்டு நாட்கள்தான். அதன் பின் இரண்டாவது மாடியில் உள்ள 42வது ஸ்பெஷல் வார்டுக்கு கொண்டு செல்லப்பட்டு, ஏ.ஸி. அறையில் சகல வசதிகளோடு வைக்கப்பட்டார். வேளா வேளைக்கு வீட்டிலிருந்து காப்பி, டிபன், மட்டன், சிக்கன் என்று வகை வகையான சாப்பாடு. டீ.வி., வீடியோ டெக். சில ஜெ.ஜெ. டீ.வி நிகழ்ச்சிகளை ஆஸ்பத்திரியிலிருந்தே கிளியர் செய்தார். ஆர்.பி.ஜி. கம்பெனிக்காரர்கள் முதல்வருக்கு அன்பளிப்பாகக் கொடுத்த செல்லுலார் போன், பாஸ்கரனுக்கு மிகவும் வசதியாகப் போயிற்று.

இடையில் ஆயுத பூஜை கொண்டாட அவரது அலுவலகத்துக்குப் போய் வந்தார் என்று ஆஸ்பத்திரி குருவி ஒன்று சொல்கிறது. ஆஸ்பத்திரியில் பெயருக்கென்று ஒரே ஒரு போலீஸ் தான் இருக்கிறார்.



உத்தரவுகள் வருகிறதாம்!

அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் கோர்ட்டின் அனுமதியைப் பெற்று விசாரிக்கப் போகிறார்கள் என்றதும் ஸ்பெஷல் வார்டை விட்டு விட்டு முதல் மாடியில் உள்ள 25 ஏ வார்டுக்கு வந்து விட்டார். 'ரொம்பவும் தகராறு செய்யாமல் ஒத்துழைத்தால், காவலை நீட்டிக்க வலியுறுத்த மாட்டோம்' என்று அதிகாரிகள் 'எச்சரித்திருப்பதால்' இரண்டாம் நாளிலிருந்து ஓரளவு ஒத்துழைப்புக் கொடுக்கிறார் பாஸ்கரன். நீதிமன்றத்தைத் தவிர தமிழக அரசின் கீழ் செயல்படும் காவல் துறை, ஜெயில் துறை, டாக்டர்கள் ஆகியோர் கொஞ்சம் கூட விசாரணை அதிகாரிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் எப்படி ஒத்துழைப்புக் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்று போயஸ் தோட்டத்திலிருந்தே

விசாரணைக் கைதி எண் 89950, (அது தான் பாஸ்கரன்) ஜெயிலில் இருந்திருந்தால் எப்படி இருந்திருப்பார்?

"ஏ வகுப்புக் கைதியாக இருந்திருப்பார். காரணம் அவர் கட்டாயம் வருமான வரி கட்டுபவராக இருக்க வேண்டும். ஏ வகுப்புக் கைதி என்றால் காலை இரண்டு சப்பாத்தி – பருப்பு, கொஞ்சம் அவித்த வேர்க்கடலை, மதியம் தண்ணி சாம்பார் சாதம், ஒரு பொரியல், மாலை சுண்டல், வேர்க்கடலை என்று கொடுப்பார்கள். வாரத்திற்கு இரண்டு முறை தான் அசைவம். மாலை ஆறு மணிக்கு மேலே செல்லுக்குள் போய் விட வேண்டும். இப்படி இருந்திருக்க வேண்டிய பாஸ்கரன் எப்படி இருக்கிறார் பார்த்தீர்களா?" என்று கேட்கிறார் வழக்கறிஞர் ஆலந்தூர் ஆர்.எஸ். பாரதி. இது

தவிர ஆஸ்பத்திரியில் உடல்நலம் சரியில்லை என்று அட்மிட் ஆனால், டாக்டர்கள் சொல்லும் ஆகாரம்தான் சாப்பிட வேண்டுமாம்.

பொது மருத்துவமனையின் இருதய நோய் சிகிச்சைப் பிரிவில் பாஸ்கரனை கவனித்து வரும் டாக்டர் பிரம்மானந்தத்தை அணுகிய போது, "என் நோயாளிகளைப் பற்றி நான் எதுவும் சொல்லக் கூடாது. மேலும், ஒரு அரசு டாக்டராக இருப்பதால் ஒழுங்கு விதிகள்படி பத்திரிகைகளுக்கு தகவல் சொல்லக் கூடாது" என்று நம்மிடம் சொன்னார். ஆனால் ஆஸ்பத்திரி வட்டாரங்களில் விசாரித்த போது, முதல் இரண்டு நாட்கள் குறைந்த வீரியமுள்ள ரத்தக் கொதிப்பு மாத்திரைகள் கொடுக்கப்பட்டு குளுகோஸ் ஏற்றப்பட்டதாம், பாஸ்கரனுக்கு. அதன் பிறகு பி.காம்ப்ளக்ஸ் மாத்திரைகள், மல்டி வைட்டமின் ஊசிகள் என்று 'சிகிச்சை' தொடர்கிறது.

பாஸ்கரன் ஜாமீன் மனு விசாரணையின் போது அமுலாக்கப் பிரிவு வக்கீல், பாஸ்கரனுடைய உடல்நிலையைப் பற்றிய தமது சந்தேகத்தை வெளியிட்டார். "நன்றாக இருந்தவர் ஜெயிலில் அடைக்கப் போகிறார்கள் என்று தெரிந்ததும் நெஞ்சுவலி என்று கூறுவது விந்தையாக இருக்கிறது. எனவே, வெளிமாநில டாக்டர் குழு அவரைப் பரிசோதிக்க வேண்டும்" என்றார் அமுலாக்கப் பிரிவு வக்கீல். ஆனால் மாஜிஸ்திரேட் அவரது கோரிக்கையை ஏற்கவில்லை. "இந்த விஷயத்தில் இரண்டு பாயிண்டுகள் இருக்கின்றன. ஒன்று, வெளிமாநில டாக்டர்கள் குழு நியமிக்கப்பட்டால், நம்ம ஊர் டாக்டர்களின் பெயர் ரிப்பேராகிப் போகும். மற்றொன்று திகார் ஜெயிலில் ராஜன் பிள்ளை மரணமடைந்த பிறகு பெரும்பாலான நீதிபதிகள், குற்றவாளிகள் உடல்நிலை சரியென்றால் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுகிறார்கள். சமீப காலங்களில் எந்த வழக்கிலும் வெளிமாநில டாக்டர்கள் குழு குற்றவாளிகளைப் பரிசோதித்ததாகச் சான்றுகளும் இல்லை" என்கிறார் ஆர்.எஸ். பாரதி.

"இங்கேயிருக்கிற மாநில அரசைச் சார்ந்த அமைப்புகள் மீது அமுலாக்கப் பிரிவுக்கு நம்பிக்கையில்லையென்றால், வழக்கையே வேறு மாநிலத்துக்கு மாற்றிக் கொள்ளலாம். பல வழக்குகள் அப்படி நடந்திருக்கின்றன" என்று யோசனை சொல்கிறார் ம.தி.மு.க.வின் செய்தித் தொடர்பாளரும், வழக்கறிஞருமான கே. எஸ். ராதாகிருஷ்ணன்.

இதற்கிடையில் 42-ம் வார்டில் மற்றொரு அறை சீர்செய்யப்பட்டு ஏ.ஸி. பொருத்தப்பட்டிருக்கிறது. இது பல ஊகங்களைக் கிளப்பி விட்டிருக்கிறது. சம்மன் அனுப்பியும் விசாரணைக்கு வராத சசிகலா, சுதாகரன், தலைமறைவாகவுள்ள தினகரன் என்று அந்த அறைக்கு வரக்கூடியவர்களின் பெயர்கள் அலசப்படுகின்றன. அதிகாரிகளின் விசாரணைக்குப் பிறகு, தம் தம்பியின் தலை தீபாவளி ஆதலால் தம்மை ஜாமீனில் விட வேண்டும் என்று கோர்ட்டில் மறுபடியும் மனுதாக்கல் செய்ய இருக்கிறாராம் பாஸ்கரன். ஆனால் அமுலாக்கப் பிரிவு அதிகாரிகளோ, "சசிகலாவும் சுதாகரனும் ஆஜரானால்தான் ஜாமீனை எதிர்க்க மாட்டோம், இல்லையேல் தொடர்ந்து அவரை காவல் கைதியாக வைக்கச் சொல்லி விடுவோம்" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்களாம்.

— கௌசல்யா

"இதய ஜாடியில் ஏலம் மணக்க வைத்த பாலகுமாரன்!"

• அருமையான கதை. அடர்த்தியான கதை ஓட்டம் ஏலக்காய் மணத்தோடு ஆரம்பித்த தொடர் இருபத்தியெட்டு வாரங்களுக்குள் முடிந்து விட்டாலும் என்றும் அந்த மணம் இதயஜாடியில் இருந்து கொண்டே இருக்கும் விதமாய்த் தந்த பாலகுமாரனைப் பாராட்ட வார்த்தையில்லை!
இலால்குடி, ஆங்கரை பைரவி.


• "என்னுயிரும் நீயல்லவோ" சிறப்பாகத்தான் இருந்தது. ஆனால் 'மெர்க்குரிப் பூக்கள்', 'இரும்பு குதிரைகள்' பாலகுமாரனை எதிர்பார்த்துப் படித்த போது மிஞ்சியது என்னவோ ஏமாற்றமே!
வேலூர் - 7, பா.வை. சுவாமிநாதன்.



• கணவன்-மனைவி உறவு, தாய்-மகன் உறவு இவைகளுக்கு நல்லதோர் விளக்கம் தந்த நாவல்.... "என்னுயிரும் நீயல்லவோ" என் உயிரை, உணர்வைத் தட்டி எழுப்பி, இனிய சுகம் தந்த படைப்பு. ஸ்யாமின் தூரிகை, பாலகுமாரனின் மாந்தர்களுக்கு உயிர் கொடுத்தது.
திருவண்ணாமலை,

என். சண்முகம்.


• 'எல்லாம் எனக்குத் தெரிகிறது. ஆனால் என்னை எனக்கு தெரியவில்லை' என்பார்கள். அந்தத் தன்னையறிதல் கடினம்தான். தன்னையறிந்து நேசிப்பது சாத்தியமானால் பிறரை நேசிப்பது சுலபம். அப்படிப்பட்ட நேசிப்பை ஒருமுறை தெரிந்து கொண்டால் போதும். அது வாழ்க்கை முழுக்க தொடர்ந்து வரும் என்பதைத் தெளிவாக விளக்கி, உணர்வுகளின் வெளிப்பாட்டையும் துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கிறார் பாலகுமாரன். பாராட்டுக்கள்.
வேப்பங்காடு, வி.ஆர். ரவிச்சந்திரன்.



ரூ 500/- செலுத்தி ஒரு மாருதி
கார் பரிசாக வெல்லுங்கள்
24%
36
1001
பரிசுகளையும்
பெற்றிட
ஒரு அரிய
வாய்ப்பு
ராஜராஜன் நிதி
F-43A, ஸ்பென்ஸர் பிளாசா
அண்ணாசாலை சென்னை – 600 002
போன் :–8521852, 8521891, 8550851, 4872682

மும்பாய்

நொறுக்ஸ்



ஒரு கிலோ தயிர் இருபது ரூபாய்!

நன்னாருக்கா?

'மினி மெட்ராஸ்' என்று சொல்லப்படும் மாதுங்காவில், காய்கறி மார்க்கெட் மிகப் பிரபலம். சற்றுக் கூடுதல் விலை என்றாலும் எல்லா காய்கறியும் கிடைக்கும். கடைப் பையன்கள், காய்கறி வாங்க வருபவர்களைப் பார்த்து 'நன்னாயிருக்கா? நன்னாயிருக்கா?' என்று கூவுவது ஒரு வேடிக்கை. கூடவே 'லேலோ, லே லோ' (வாங்குங்கள்!)

புதிதாக பம்பாய் வருபவர்கள், 'இவர்கள் ஏன் தம்மைப் பார்த்து, 'நன்னாயிருக்கா?' என்று கேட்கிறார்கள் என்று புரியாமல் விழிப்பார்கள்.

'நல்லா இருக்கு; வாங்குங்க' என்பதைத்தான் அவர்கள் 'நன்னாயிருக்கா லேலோ' என்பார்கள்! இது புரிந்ததும் 'நல்ல வேடிக்கை' என்று சிரிப்பார்கள்.

– ஜெயகாமாட்சி, மாதுங்கா.


பிழைக்க ஒரு வழி

பம்பாயில் பிழைக்க வழிகளுக்கா பஞ்சம்? இதோ ஒரு நூதன வழி. கோவில் வாசல்களில், சிலர் வாடகைக்குப் பசுக்களை எடுத்து வந்து கட்டி வைப்பார்கள். அருகிலேயே சின்னச் சின்ன புல்லுக் கட்டுகள். கோவிலுக்கு வரும் மார்வாரிகள், குஜராத்திகள், காக கொடுத்து புல்லுக்கட்டை வாங்கி, பசுவிற்குப் போட்டு வணங்கிப் போவார்கள். இப்படியாக ஒரு நாளைக்கு இங்கே 100-150 ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள் சிலர்! (பசுவிற்கு சப்பாத்தி கொடுப்பவர்களும் உண்டு.)

– லலிதா பிரபாகர், பம்பாய் – 90.

25%

வெடிகுண்டு சம்பவத்துக்குப் பிறகு, பம்பாயில் இரவு நேரங்களில் வாடகைக் காரில் பயணம் போகிறவர்கள் மிகவும் குறைந்து விட்டார்கள். சவாரி இழந்த டாக்ஸி டிரைவர்கள் போராட்டத்தில்



இறங்கி னார்கள். வேறெதற்கு? மீட்டர் ரேட் உயர்த்தத் தான்! சமீபத்தில்தான் மகாராஷ்டிர அரசு இதற்கு மசிந்திருக்கிறது. அதாவது கட்டணத் தில் 25% கூடுதலாக வசூலிக்க அனுமதி கிடைத் திருக்கிறது. (இரவு 12 முதல் காலை 5 வரை மட்டும்)

- வைஷாக், பம்பாய் – 90.

வெந்நீர் ஊற்று

பம்பாயில் வஜ்ரேஷ்வரி என்னும் இடத் தில் வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. பிணி தீர்க் கும் நீர் என்று நம்பப்படுகிறது.

● "ஏகப்பட்ட செலவு பண்ணிப் படம் எடுத்தேன்னீங்களே... டைட்டில் என்ன வெச்சீங்க?"

"வளர்ப்பு மகன்!"



எடைக்குத் தயிர்!

பம்பாயில் பால், தயிர் மட்டும் விற்பனை செய்யும் கடைகள் பல உண்டு. இங்கு எல்லா நேரத்திலும் பால் கிடைக்கும். தயிரை எடைக் குத்தான் விற்கிறார்கள். கிலோ இருபது ரூபாய்.

அது போலவே வெண் கரும்புகளை தோல் சீவி, துண்டுகளாக வெட்டி, நிறுத்தி விற்கி றார்கள்!

– எம். மதனகோபால், பம்பாய் – 18.

இதர் ஆவோ!

ஹிந்தி தெரியாத என் நண்பன் ஒருவன் பம்பாய் வந்தான். அவனுக்கு, 'இங்கே வா' என்பதற்கு ஹிந்தியில் 'இதர் ஆவோ' என்று தெரியும். ஆனால் 'அங்கே போ' என்பதற்கு தெரியாது. நான் அவனிடம் ஒருநாள், 'அங்கே போ' என்று இந்தியில் 'எப்படிச் சொல்வாய்?' என்று கேட்டேன், கிண்டலாக.


அதற்கு அவன், "எங்கே போக வேண் டுமோ போய் விடுவேன். பின், அங்கிருந்து 'இதர் ஆவோ' (இங்கே வா) என்று கூப்பிட்டுக் கொள்வேன்" என்றானே பார்க்கலாம்!

– வி. ரகுராமன், டோம்பிவிலி.

நீங்கள் கேட்டவை



• யார் எழுப்புவது?



• சரிதானா..?

● எம்.எம். ஆனந்தன், வந்தவாசி

? போலீசாருக்கு ஜெயலலிதா ஆட்சிதான் பொற்காலம் என்கிறாரே டி.ஜி.பி. தேவாரம்?

! போலீசாருக்கு வேண்டுமானால் 'பொற்கால'மாக இருக்கலாம்.... ஆனால் பொதுமக்களுக்குப் போதாத காலம்.

● எம். ஜெயகுமார், ரிஷிவந்தியம்.

? கிராமங்களில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மகளிர் இயக்கம் ஆரம்பிக்கப்படும் என்கிறாரே ராமதாஸ்...?

! ஆந்திராவில் மகளிர் அமைப்புகள் சாராய ஒழிப்புக்காகப் போராடியதைக் காட்டிலும் தமிழகத்தில் கள்ளச் சாராயத்தை எதிர்ப்பது மிகவும் கஷ்டமான வேலை. வெற்றி பெற்றால் பெரிய சாதனைதான்!

● மா. நளினி, திருச்சி-8.

? கலைஞரை முன்பு எதிர்த்துப் பேசிய டி. ராஜேந்தரை மீண்டும் கொ.ப.செவாக நியமித்துள்ளது சரியா?

! பைபிள் கூட 'பிராடிகல் ஸன்'னைத் தானே போற்றுகிறது என்று நினைத்தாரோ என்னவோ...

● எஸ். மதியழகன், காரைக்கால்.

? அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொண்டால்தான் காங்கிரஸ் வெற்றி பெறும் என்று சீதாராம் கேசரி கூறியுள்ளாரே?

! 'ஜெ' வீட்டுக் கல்யாணச் சாப்பாடு செரிக்க வேண்டாமா?... ஏவ்....!

● கே. விஜயன், கோவை. ☐

? ஜனங்களைத் தட்டி எழுப்ப வேண்டியது எழுத்தாளர்களின் கடமை என்கிறார் நமது பிரதமர் நரசிம்ம ராவ்... முதலில் இவரை யார் தட்டி எழுப்புவதாம்...?

! எழுத்தாளர்கள் ஜனங்களைத் தட்டி எழுப்பினால், அதன் பிறகு ஜனங்கள் இவரைத் தட்டி எழுப்பி விடுவார்களல்லவா...!

● ப. இராம் முருகன், சிவகங்கை.

? 'இப்போதெல்லாம் மகா மட்டமாகப் படம் எடுக்கிறார்கள்... என் மகள்களை நடிக்க அனுமதிக்கமாட்டேன்...' என்று ஹேமமாலினி சொல்கிறாரே...?

! இன்றைய சூழலில், அவரது மகள்கள் தற்கால சினிமாக்கள் மட்டமானவை என்று ஒப்புக் கொள்ள வேண்டுமே!

● எஸ். சிவகுமார், தஞ்சாவூர்-9.

? 'தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை முதல்வர் பதவியில் அமர்த்துவதே இலட்சியம்' என்று சொல்லி வந்த டாக்டர் ராமதாஸ், அண்மையில் தி.மு.க. தலைவர் மு.க. அவர்களை முதல்வராக்குவேன் என்று கூறியிருக்கிறாரே...?

! ஓஹோ! இதற்குத்தான் கலைஞரே தம்மை அடிக்கடி 'சூத்திரன்' என்று குறிப்பிட்டுக் கொள்கிறாரோ...!

● ஜெ.ரா.சிரத்சின்னான், மணக்காடு.

? புதிய நடிகைகள் எந்த வகையில் சிறப்பானவர்கள்?

! புதியவர்கள் என்ற வகையில் நிச்சயம் சிறப்பானவர்கள்தான்!

● என். ஜெயராமச்சந்திரன், கோவில்பட்டி.

? போலீஸுக்குப் பதக்கம் அளிக்கும் விழாவில் தேச விரோத குற்றவாளிகளான சசி, சுதாகரன் பங்கேற்றது குறித்து...

! தேசவிரோதிகள் போலீஸுக்குப் பதக்கமே அணிவிக்கும் போது, பார்வையாளராய் அமர்ந்திருப்பதா தவறு!

● சா. கு. இலக்கியன், சென்னை-52.

? அமெரிக்க ஃபுட்பால் வீரர் ஓ.ஜே. சிம்ஸன், இரட்டைக் கொலை வழக்கில் விடுதலையாகிவிட்டாரே...? இந்த நிகழ்ச்சி கறுப்பர்களின் வெற்றி என்று கூறப்படுகிறதே...?

ஜெ. ஆட்சி போலீஸுக்குப் பொற்காலமாமே?

! ஓ.ஜே.வுக்கு எதிராகச் சாட்சியங்கள் சமர்ப்பித்த போலீஸ்காரருக்கு இன வெறி உண்டு என்பதை உணர்த்தும் ஆதாரங்கள் கிடைத்தன. இன வெறியர் என்பதால், கறுப்பருக்கு எதிராக அவர் சொல்லும் சாட்சியங்களை ஏற்க முடியாது என ஜூரி கூறிவிட்டது. இப்போது அமெரிக்க நீதி முறையே குற்றம் சாட்டப்பட்டு நிற்கிறது.

● **கண்மணி சுப்பு வேதையா சித்தரவேலு, கருப்பம்புலம்.**

? மத்தியிலும் ஆட்சியைப் பிடிப்போம் என்கிறாரே மாயாவதி...?

! 'உள்ளதும் போச்சே நொள்ளைக் கண்ணா' கதையாக, இருந்த முதல்வர் பதவியையும் இழந்து நிற்கிறாரே...! குறுக்கு வழியில் முன்னேற நினைப்பவர்களுக்கு இந்தக் கதிதான்.

● **ஆர். சுவர்ணசுபா, திருநெல்வேலி-11.**

? முதலில் 'ஃப்ரண்ட்லைன்' ஆசிரியர் ராம், பின்னர் ஒவ்வொருவருக்கும் வரிசையாக வக்கீல் நோட்டீசு வருமா?

! அப்படிப் பார்த்தால் வருமான வரித் துறைக்கல்லவா ஜெ. முதலில் நோட்டீசு அனுப்பியிருக்கணும்...!

● **ஜி. இந்திரா, திருச்சி-14.**

? முதல்வர் ஜெயலலிதா யாரைக் கைகாட்டுகிறாரோ அவர்தான் அடுத்த பிரதமர் என்று அமைச்சர் ரகுபதி கூறியுள்ளது பற்றி...?

! சசிகலாவுக்கு இப்படியெல்லாம் அனாவசிய ஆசை காட்டி, அம்மாவுக்குப் பிரச்னையை வளர்க்காதீங்க ரகுபதி சார்...!

● **கே. விஸ்வநாத், பெங்களூர் - 38.**

? சில பத்திரிகைகளில் ஒவ்வொரு வாரமும் லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பரிசுகளைக் குலுக்கலில் தருவதாகப் போட்டி வைக்கிறார்களே...?

! பத்திரிகைகள் மட்டுமின்றி தனியார் தொலைக்காட்சியும் கடைப்பிடித்து வரும் இந்த 'வியாபார யுக்தி'யை இப்போது தூர்தர்ஷனும் அறிமுகப்படுத்தி விட்டது! வியாபாரத் தந்திரமாக இவர்கள் நினைத்துச் செய்வது வியாபார தர்மம் அல்ல... இதைத் தட்டிக் கேட்க வேண்டிய அரசாங்கமே லாட்டரி நடத்தி சம்பாதிப்பதால் தார்மீக பலமின்றிப் பேசாமல் இருக்கிறது.

● **ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.**

? ரயில்வே துறை பொறுப்பை இழந்துவிட்ட ஜாபர் ஷரீஃப் பாத யாத்திரை புறப்படுகிறாரே?

! இலாகா இல்லாத அமைச்சர் என்பவர் இதர அமைச்சர்களுக்கெல்லாம் உதவி, அறிவுரையும் அளிப்பவராக இருப்பது முன்பு மரபு. ஆனால் பிரதமர், ஷரீஃபின் மிரட்டலுக்குப் பயந்து, அவர் மந்திரி பதவியைப் பறிக்காமல் இலாகா பறிப்பு மட்டும் செய்திருப்பதானது அந்த உயரிய பதவியையே கொச்சைப்படுத்தி விட்டது. ஷரீஃபும் தமக்கு அளிக்கப்பட்டது 'தண்டனையே' என்பதை உணர்ந்துள்ளதால்தான் பாத யாத்திரை புறப்பட்டிருக்கிறார்.

❒ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கே. விஜயன்
Q/59, கோவைபுதூர் அஞ்சல்,
கோவை – 641 042.

● **கிரிஜா, வேடந்தாங்கல்.**

? கே.பி.எஸ். கில்லை விசாரணைக்கு உட்படுத்தலாம் என்று உச்சநீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பு குறித்து...?

! 'உயர் அதிகாரி என்பதாலேயே ஒருவர் சட்டத்துக்கு அப்பாற்பட்டவராக முடியாது. அவர் மூலம் அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறும் ஒரு பெண்ணுக்குத் தமது வாதத்தை முன் வைக்க வாய்ப்புத் தரப்பட வேண்டும்' என உச்சநீதி மன்றம் கூறியுள்ளது வரவேற்கத்தக்க தீர்ப்பு. இதனைப் பெறுவதற்காக ஏழு ஆண்டுகள் பொறுமையுடன் போராடிய ரூபன் பஜாஜ் பாராட்டுக்குரியவர்.



• கல்யாண விருந்து!




• பிள்ளையார் சுழி?




• "நடிக்கவிட மாட்டேன்..."

• அதோகதி!



• புதிய யாத்ரா சர்வீஸ்!



பொட்டில் அறைந்த மாதிரி.....

☐ கவர் 'ஸ்டோரி' என் இதயம் கவர்ந்த ஸ்டோரியாக இருந்தது. வையவனுக்குப் பாராட்டுக்கள்!

விழுப்புரம், ஆனந்த ரவிபாலன்.

☐ தீபாவளி சிறப்பிதழில் மிக நன்றாக இருந்த அயிட்டங்கள் : 1) சுஜாதாவின் 'தற்செயலாக' கதையில் நடைமுறையில் அரிதாகப் பயன்படுத்தப்படும் 'குறக்களி'யை நினைவூட்டியிருப்பது. 2) ம.பொ.சியாரின் பிரிவைப் பற்றி தலையங்கத்தில் மிக நன்றாக இன்றைய தலைமுறையினருக்கு அறிவுரைத்த பாங்கு. 3) நகைச்சுவை மிளிரும் 'ஒரு நிஜமான கற்பனை நிகழ்ச்சி'. 4) மத்தளத்துக்கு இருபுறமும் இடி என்பதை கே.ஜி. ஸ்ரீதுரையின் சிறுகதையில் சொல்லியுள்ள விதம். 5) ஜெய் ஜனநாயகம் கதைக்கு உயிரோட்டமாக ஓவியம் படைத்த நடனத்தின் திறமை.

திருநெல்வேலி - 5, கனகா மணாளன்.

☐ சுஜாதாவின் 'தற்செயலாக' சிறுகதை சிறப்பாக இருந்தது. அதில் அவர் சிலாகித்து எழுதியுள்ள 27 வது வரிசை சீட்டின் விசேஷத் தன்மைகள் தற்போது 25வது வரிசை என மாற்றப்பட்டு விட்டது! இந்த மாற்றம் வந்து ஒரு வருடம் ஆகிறது.

கோவை, வி. துரைக்கண்ணன்.

☐ ம.பொ.சி. அவர்களைப் பற்றிய தலையங்கம் படித்தேன். பல தலைமுறைகளைக் கண்ட மாமனிதர் பற்றி, பல்வேறு அம்சங்களைச் சுட்டிக் காட்டி பெருமை பொங்க எழுதியுள்ளது நிறைவைத் தருகிறது.

சென்னை - 5, எஸ். சங்கரன்.

☐ அ.தி.மு.க. ஆட்சியின் வன்முறை கட்டவிழ்ப்பு அணுகுமுறையை இவ்வளவு 'பளிச்' சென்றும் பொட்டில் அறைந்த மாதிரியும் வேறு எந்த இதழிலும் இதுவரை கார்ட்டூன் பார்த்ததில்லை.

மணக்காடு, ஸ்ரீவஹிதா மேரி.

☐ முதல் பக்கத்தில் வெளியாகியிருந்த கிச்சாவின் ஜோக், மற்ற எல்லா ஜோக்குகளையும் தூக்கிச் சாப்பிட்டு விட்டது!

மொராட்டுப்பாளையம்,

கந்தசாமிநாகம்மா இராஜேஸ்வரன்.

☐ அகல்விளக்கின் ஒளியில், நங்கையர்களின் அழகு முகம் கண்ணைக் கவரும் வகையில் சிறப்பாக அமைந்திருந்தது!

சென்னை - 78, சி. பூங்கோதை குப்புசாமி.

☐ ரொம்ப நாளா 'கல்கி'யில் போட்டி எதுவும் காணோமேன்னு தவிச்சிட்டிருந்தோம். அப்பாடா! போட்டி துவங்கிடுச்சு. இனி எங்களுக்குக் குஷி தான்!

நெய்வேலி -3, ப. உத்தண்டராமன்.

ரூ. 20/- பரிசு பெறும் கடிதம்:

☐ கல்கி 8.10.95 இதழில் எங்கள் தொகுதி எம்.பி. மாரியூரில் STD, ISD வசதி வந்து பல மாதங்கள் ஆகிவிட்டன என்று கூறியிருந்தார். கூப்பிடு தூரத்தில் இருக்கின்ற கடலாடிக்கு ஆத்திர அவசரத்துக்கு லோகல் 'கால்' மூலம் பேசுவதற்கே முடியவில்லை. இந்த லட்சணத்தில் இங்கிருந்து வெளிநாட்டுக்கு பேசுவது எப்படி? இந்த கடிதத்துக்கும் எம்.பி. மறுப்புச் சொல்லிக் கொண்டிருக்காமல் தயவு செய்து உண்மை நிலையை அறிய விஜயம் செய்ய வேண்டும். அல்லது சம்பந்தப்பட்ட தொலைபேசி அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு எங்கள் ஊருக்கு போன் அளிக்க ஆவன செய்ய வேண்டும்.

டி. மாரியூர், ஏ. அசன்மைதீன்.

☐ கல்கி 24.9.95 இதழில் ''ஒரு தலம், ஒரு பாடல், ஒரு நயம்'' என்ற தலைப்பில் திருமாலிருஞ்சோலை மலையை பழமுதிர்ச்சோலை என்றும் அதை திருமால், முருகன் இருவரும் உறைவிடமாகக் கொண்டுள்ளனர் என்றும் பொருள் தொனிக்கும்படி எழுதியுள்ளார் கலிசிவம். இது வைணவ விரோதச் செயலாகும்.

முருகபக்தர்கள் திருமாலிருஞ்சோலை மலையை முருகனுக்கு உறைவிடமாக்க முயற்சி செய்ததன் விளைவாக, சுமார் முப்பது வருடங்களுக்குள் அரசாங்க பலத்தில், அழகருக்குச் சொந்தமான மண்டபத்தில் நூதன முருகன் கோயில் கட்டப்பட்டது. அதை எதிர்த்து வைணவர்கள் வழக்குத் தொடுத்தனர். அது சென்னை உயர்நீதி மன்றம் வரை வந்து, நூதன முருகன் கோயில் நிலைநாட்டப்பட்டு பழமுதிர்சோலை என்று அழைக்கப்படக்கூடாது என்ற தீர்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது. எனவே முருக பக்தர்கள் ஆக்கிரமிப்பு, கோர்ட்டு தீர்ப்பு மூலம் நன்கு நிலை நாட்டப்பட்டது. இந்நிலையில் திருமாலிருஞ்சோலை மலைஙய முருகனுக்கும் உறைவிடமாகக் கொள்ளலாம் என்று எழுதுவது சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும்.

அந்தணல்லூர், எஸ். முரளி.

நீங்களும் சேர்ந்து விட்டீர்களா?

காமதேனுவின்

எண்ணெய்க்காரன்

உங்கள் மாதாந்திர எண்ணெய் தேவை
நல்லெண்ணெயா? சன்பிளவர் ஆயிலா? தேங்காய் எண்ணெயா?
எதுவானாலும்... உங்கள் இல்லம் நாடி....
கற்பக விருட்சகமாக இலவசமாக தருகிறது காமதேனு...

வாடிக்கையாளர் சேவையை 4-வது ஆண்டாக வெற்றிகரமாகத் தொடரும் 'காமதேனு ஹாலிடே ரிசார்ட்ஸ்' நிறுவனம் வழங்கும் சீரிய திட்டம்.

10ஆண்டுகளுக்குஎண்ணெய் விலையேற்றத்திலிருந்துபரிபூரண பாதுகாப்புத்தரும்
OIL SAFE UNITS

திட்டம்	யூனிட்டு விலை	மாத எண்ணெய் அளவு
COMPACT	Rs. 3,000/-	மாதம் 1 லிட் பாக்கெட்
MEGA	Rs. 5,800/-	மாதம் 2 லிட் பாக்கெட்டுகள்

★ முதலீட்டுத் தொகை முழுவதுமாக உங்களுக்கே திரும்பக் கிடைத்திடும்.
★ தீபாவளிக்கு போனஸ் பாக்கெட்டுகள்.
★ எண்ணெய்க்கு பதில் ரொக்கமாகப் பெறும் வசதி (Eqvt. Cash)
★ சுத்திகரிக்கப்பட்ட உயர்தரமான எண்ணெய் "சாஷே" பாக்கெட்டுகளில்

விவரங்களுக்கு:

காமதேனு அக்ராயில்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

A Division of காமதேனு ஹாலிடே ரிசார்ட்ஸ் (பி) லிமிடெட்
பதிவு அலுவலகம்: "ஹாங்காங் காம்ப்ளெக்ஸ்" ராமநாதன் தெரு, தி.நகர்,
(மாம்பலம் ரயில்நிலையம் அருகில்) சென்னை - 600 017. போன்: 423019.
கார்ப். அலுவலகம் : (விரைவில்) 108, சேமியர்ஸ் சாலை, சென்னை - 18.

Kamadhenu

எண்ணெய்க்காரன் திட்ட உறுப்பினர்களுக்கு சிறப்புக் குலுக்கல் பிரபல நீதிபதிகள் முன்னிலையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் பரிசு LML வெஸ்பா
2-வது பரிசு ONIDA 14" Colour T.V.
3-வது பரிசு TVS வாஷிங் மெஷின்
4-வது பரிசு பட்டர் பிளை சீனியர் பிரெஷர் குக்கர்,
மற்றும் 36 ஆறுதல் பரிசுகள்:
எமர்ஜென்சி லாம்ப்-9, பர்சனல் ஸ்டீரியோ-9, டைடன் வாட்ச்-9, சிட்டிசன் காபி பில்டர்-9.

கிளை சென்னையில் துவங்கிவிட்டது

அலுவலகத்தில் நேரில் வந்து அட்வான்ஸ் செலுத்தி 2 லிட்டர் 'கிப்ட் பாக்கெட்' உடன் பெற்றிடுங்கள்.

மாலை மயங்குகின்ற நேரம் 3

மாறுவதுதான் மனம். அவரவர் வாழ்வில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு, சந்திக்கும் மனிதர்களுக்குத் தக்கவாறு, நல்லவன் கெட்டவனாவது, கெட்டவன் நல்லவனாவது, ஒருவரிடம் அன்பு கொள்வது, வெறுப்படைவது என்று மாறுவதுதான் மனித இயற்கை. உதயரேகா கூட அப்படி ஒரு சம்பவத்தினால் சற்று மாறிவிட்டவள்தான்.

ஆனால், என்னதான் மாறினாலும், அடிப்படைக் குணம் அடியோடு வேறாவது இல்லை என்பது அவளது அபிப்பிராயம். எனவே, ஒரு காலத்தில் நல்லவனாகவும் பண்பும் பாசமும் உடையவனாகவும் இருந்த கிருஷ்ண சந்திரன், இப்போது ஒரேயடியாகத் திருத்த முடியாத கொடியவனாகி இருப்பான் என்று அவள் நம்பவில்லை. அவன் திருந்தி, பழைய மாதிரி நல்லவனாகி விடுவான் என்பதிலும் அவளுக்குச் சற்றும் சந்தேகமே கிடையாது. ஆனால், இந்த நல்ல குடும்பத்தை, வெகுகாலம் நோகடிக்காமல், விரைவிலேயே அவன் திருந்தி வர வேண்டும் என்பதுதான் இறைவனிடம் அவளது கோரிக்கை.

ஆனால், நாளுக்கு நாள் கிருஷ்ணசந்திரனின் போக்கு மோசமாகிக் கொண்டே செல்லவும், அவளது நம்பிக்கையும் ஆட்டம் காணத் தொடங்கி விட்டது.

"உங்கள் மகனை நன்றாகத் திட்டி, அதட்டி, அடக்க வேண்டியதுதானே, ஆன்ட்டி. அங்கிள் இரண்டு போடு போட்டால் அடங்கி விட மாட்டாரா?" என்று ஒரு நாள் உதயரேகா ஐடியா கொடுத்தாள்.

ஆனால் ஒரு வேதனைச் சிரிப்போடு, "முயன்று பார்த்து விட்டோமே, உதயா. அதன் பயனாக அவன் வீட்டை விட்டே போய் விட்டான்" என்று பெருமூச்சு விட்டார் காந்திமதி.

"என்..னது?"

"ஆமாம், அம்மா! ஒருநாள்... அன்று குடித்து விட்டு வந்திருப்பான் போல. நடையெல்லாம் தள்ளாட்டம். ஒரே நெடி வேறு. பொதுவாக சாந்த சொரூபியான அவன் அப்பாவுக்கே பொறுக்க மாட்டாமல், 'இந்தக் குடும்பத்துப் பிள்ளையாடா நீ? மானம் போகிறது. மட்டுமரியாதையோடு ஒழுங்காக இரு. அல்லது முகத்தில் விழிக்காதே!' என்று கத்தி விட்டார். அதுதான் சாக்கென்று வீட்டை விட்டே கிளம்பி விட்டான். 'இப்படி மிரட்டினால் பயந்து நல்லபடியாக இருப்பான் என்று நினைத்தேன்' என்று அவர் ரொம்பவும் வருத்தப்பட்டார். அதற்கு மேல் அவனிடம் அவர் அதிகம் பேச்சே வைத்துக் கொள்வதில்லை... நான் போய் எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன். மீண்டும் இங்கே வரவே முடியாது என்று விட்டான். அவன் அப்பாவின் குணத்துக்கும் அவனுக்கும் ஒத்துப் போகாதாம். இரு பத்தி ஆறு ஆண்டுகள் கழித்து ஞானோதயம் ஆகியிருக்கிறது!" என்றார் காந்திமதி ஒரு கசந்த முறுவலுடன்.

உதயா பேசாதிருக்கவும் தொடர்ந்து, "பாவம். எல்லாம் சொல்லி உன்னையும் படுத்துகிறேன். வேறு யாரிடமும் நான் இதையெல்லாம் சொன்னதில்லை உதயா. அவன் அப்பாவிடம் சொல்லப் போனால், 'தானாகப் பட்டுத் திருந்தட்டும். அதுவரை அவன் பேச்சை பேசாதே' என்று விடுகிறார். சொந்த பந்தத்தில் ஒரு வார்த்தை சொன்னால் அதைப் பத்தாக்கி, பெற்றவளே சொல்லி விட்டாள் என்று அவனுக்கு ஒரேயடியாகக் கறுப்பு முத்திரை குத்தி விடுவார்கள். வசுவோ, அவன் பார்க்கிற அளவிலேயே அரண்டு போகிறாள். எல்லாம் உள்ளே போட்டு விழுங்கி விழுங்கி... சில சமயம் மூச்சு முட்டிப் போகிறதம்மா. என்னவோ, உன்னை எனக்கு அன்னியமாகவே எண்ணத் தோன்றாததால் அடைத்துக் கிடப்பதையெல்லாம் உன்னிடம் கொட்டி உன்னைப் போரடித்து விட்டேன். சாரிம்மா" என்று வருத்தமாக உரைத்தார்.

பிரியமாய் நோக்கி, "அன்னியமாய் எண்ணவில்லை என்றுவிட்டு 'சாரி' சொல்கிறீர்களே, ஆன்ட்டி..." என்றாள் உதயரேகா. "சொல்லுங்கள் ஆன்ட்டி, இப்போது உங்கள் மகன் இங்கே உங்களோடு இல்லை என்றால் வேறு எங்கே வசிக்கிறார்? ஹாஸ்டல் மாதிரி எதுவுமா? பெண்கள் விடுதி

மாதிரி ...டா? அங்கே எப்படி இருப்படி?'' என்று குடிப்பது போலப் பாவனை செய்து காட்டினாள்.

'பதில் தருவதற்குக் கொஞ்சம் இடைவெளி விட்டு விட்டு அடுத்தகேள்வி கேளேன்'' என்று விளையாட்டாய்க் கடிந்து விட்டு, ''இங்கேயே கீழ்ப்பாக்கத்தில் நமக்கு இன்னொரு வீடு இருக்கிறது. அதில்தான்...'' என்று காந்திமதி பேச்சை முடிக்குமுன் கலீர் என்ற சிரிப்புடன் உதயா குறுக்கிட்டாள். ''கீழ்ப்பாக்கமா? பிரமாதம். ரொம்ப ரொம்ப வசதிதான். கொஞ்சம் முற்றியதும் பக்கத்திலேயே சேர்த்து விடலாம்'' என்றுரைத்து மேலும் நகைத்தாள்.

அவளது பாவனையில் கூடச் சேர்ந்து சிரித்து விட்டு, ''உனக்குத் துணிச்சல் அதிகம் தான், உதயா. என் பிள்ளைக்குப் போய்ப் பைத்தியம் என்கிறாயே!'' என்றார் காந்திமதி.

''பின்னே? இந்த மாதிரித் தாய், தந்தை, தங்கை மனதை நோகடிப்பவர் பைத்தியமாகத் தானே இருக்க வேண்டும்?''

காந்திமதியின் சிரிப்பு உடனே மாறி விட்டது.

''எப்படி இருந்த பையன்! நான் என்ன நாலைந்தா பெற்றுப் போட்டிருக்கிறேன்? இதில் ஒன்று; அதில் ஒன்று என்று எண்ணி இரண்டே இரண்டு. அதுவும், இல்லையே என்று ஏங்கித் தவமிருந்து பெற்ற பிள்ளைகள். அதிலே ஒன்று இப்படி ஆவது என்றால் – இவ்வளவு காலம் நன்றாக இருந்து விட்டு மாறி விட்டதை நினைக்கும் போது சில சமயங்களில் தாங்கவே முடியவில்லை, உதயா. நிர்மலானந்தர் கற்றுக் கொடுக்கிற யோகாவும் தியானமும் மன அமைதி தரும் என்று கேள்விப்பட்டுத்தான் அந்த யோகா வகுப்புக்கே வந்தேன். என்னவோ, அதில் ஒருபெரிய நன்மையாக உன்னைக் கண்டேன்'' என்று சின்னவளின் கன்னத்தை வருடினார்.

''என்ன பிரயோஜனம், ஆன்ட்டி?'' என்று கையை விரித்தாள் உதயா.

''பெரிய நன்மைதான். மேலே மேலே அடைத்து மூச்சு முட்டாமல், உன்னிடம் வாய் விட்டுச் சொல்ல முடிகிறதே. அதுவே பெரிய சுகம்தான். நீ வந்து போகத் தொடங்கியதிலிருந்து நான் இரவில் கொஞ்சம் நன்றாகத் தூங்குகிறேன், தெரியுமா?''

மனம் பாகாய் உருகப் பெரியவரிடம் நெருங்கி உட்கார்ந்தாள் உதயா. 'இவருக்கு ஏதாவது செய்ய வேண்டுமே! அந்தக் கிறுக்கனை சந்திரனின் காதைப் பிடித்து இழுத்து வந்து இந்த வேதனையைக் காட்ட முடிந்தால்?'

துடித்துக் கொண்டு இருந்தவள் கையில் ஒரு வாய்ப்பைத் தந்தாற்போல வசுமதியின் பிறந்த நாள் வந்தது.

உதயரேகாவை வீட்டுக்கு வந்தே அழைத்தாள் வசுமதி.

வசுமதியும் பானுரேகாவும் ஒருவரை ஒருவர் நோட்டம் விடுவதைப் பார்த்து உதயாவுக்குச் சிரிப்பு வந்தது. இவர்களை விடத் தான் ரொம்பப் பெரியவள் போல



ஓர் உணர்வும் வந்தது.

தன் வீட்டில் தம்பி, தங்கைக்குச் செய்வது போலவே, வசுமதியின் பிறந்த நாள் விழாவிலும் உதயா முழு மனதோடு ஈடுபட்டாள்.

காந்திமதியோடு சேர்ந்து, கேக், ஹால் அலங்காரம் செய்தாள். வசுமதிக்குத் தெரியாமல் இருவருமாகப் பரிசு வாங்கினார்கள். பிறந்த நாளன்று வசுமதியின் அலங்காரத்தைச் சரிபார்த்தாள்.

அழைக்கப்பட்டிருந்த நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் வந்திருந்தனர். அலங்கரிக்கப்பட்ட மேஜையில், 'போ' கட்டிய கத்தியோடு, நட்ட நடுவில் ஒரு மெழுகுவர்த்தியோடு கேக்கும் வைக்கப்பட்டாயிற்று.

எல்லாமே ரெடி. ஒரே ஒருவனது வருகையைத் தவிர.

கிருஷ்ணசந்திரனின் வரவுக்காக, ஆறு மணிக்குத் தொடங்க வேண்டிய விழா தாமதப்பட்டுக் கொண்டே இருந்தது.

"மணி ஏழு. ஆரம்பிச்சுடலாம்!" செல்வரங்கத்தின் குரல் அழுத்தத்துடன் உத்திரவிட, வசுமதியின் கண்களில் நீர் நிரம்பலாயிற்று.

"சாப்பாட்டை முடித்துக் கொண்டு பிறகு கேக் வெட்டலாமா?" என்று மெல்ல வினம்பிய தாயார், தந்தையின் கோபப் பார்வையில் வாயடைத்துப் போனார்.

உதயா, வசுமதியைத் தேற்ற முனைந்தாள். "ஷ்... வசு. கண்ணீர் விட்டால் காஜல் கரைந்து கறுப்பாய்க் கோடு விழும். அழக் கூடாது. பார், உன் அண்ணன் புத்தி தெரியாதா? இப்போது அப்பாவுக்குக் கோபமூட்டாமல் கேக்கை வெட்டி விடம்மா..." என்று பரிவு காட்டி வற்புறுத்தினாள்.

"போன வருஷம்... அண்ணன்..." என்று வசுமதி விசும்புகையில், வாயிலில் கார் ஒன்று வேகமாக வந்து பிரேக் போட்டு நிற்கவும் பேச்சை நிறுத்தி ஆவலாக வாயிலை நோக்கினாள்.

எல்லோரின் பார்வையும் அங்கேதான்.

ஆனால் வந்தவன் மணிவாசகமே.

ஏமாற்றத்தை மறைக்க வெகுவாக முயன்று கொண்டிருந்த வசுமதியிடம் சென்றான்... கேசி வர முடியவில்லை, வசும்மா. 'ஸாரி' சொல்லச் சொன்னான். இதோ பரிசு... அட இன்னும் கேக் வெட்டவில்லையா? சீக்கிரம்..."

விழா முடிந்து விருந்தினர்கள் சென்ற பிறகு அவன் சொன்ன கதையே வேறு. கிருஷ்ணசந்திரனுக்கு இங்கே வருகிற எண்ணமே இல்லையாம். குடித்து விட்டுப் பார்க்கில் கிடந்தானாம். எழுப்பி வீட்டில் கொண்டு விட்டானாம். அப்போது நண்பன் குழறிப் பேசியதில் இருந்து, வசுமதியின் பிறந்த நாளை ஊகித்து, அண்ணனுக்காக அவள் ஏங்குவாளே என்று எண்ணி, அழைக்கப்பட்டிரா விட்டாலும் பரவாயில்லை என்று ஒரு பரிசுப் பொருளுடன் வந்து, கிருஷ்ணசந்திரன் அனுப்பியது போன்று நடித்தானாம்.

மூவரின் முகங்களும் மாறிய விதத்தைப் பார்த்து, இந்த உண்மை விளம்பி உண்மையை விளம்பாமலேயே போயிருக்கலாமே என்று உதயரேகா எண்ணினாள். ஆனால் எல்லோராலும் பொய்யில் வாழ முடிவதும் இல்லைதான்.

எல்லாம் போட்டு உடைத்து விட்டு, இன்னும் ஒரு 'ஸாரி'யோடு மணிவாசகம் சென்று விட, வாயைப் பொத்தி விசும்பலை அடக்கியபடி அங்கிருந்து ஓடினாள் வசுமதி.

"பிறந்த நாளும் அதுவுமாக என் கண்மணியை அழவைத்து விட்டானே!" என்று காந்திமதி அரற்ற, கல்லாய் அமர்ந்திருந்தார் அவளுடைய கணவர்.

இனி இந்தக் கிருஷ்ணசந்திரனைச் சும்மா விடக் கூடாது என்று முடிவுக்கு உதயரேகா வந்தது அப்போதுதான்.

முடிவு எடுத்தபின் சும்மா இருப்பார்களா, என்ன? அதிலும் அவள்!

அன்று உதயரேகா 'கல்ச்சரல்' வகுப்புக்குச் செல்ல வேண்டிய தினம். அங்கே போய், பிரியாணி செய்து, அங்கே கொஞ்சம் உண்டு, மீதியைத் தம்பி தங்கைக்காகப் பத்திரப்படுத்தி எடுத்து வைத்துக் கொண்டு, நேராகக் கிருஷ்ணசந்திரனின் அலுவலகம் சென்றாள்.

ஒருதரம் 'ஷாப்பிங்' சென்ற போது, தன் அண்ணனின் அலுவலகத்தை வசுமதி அவளுக்குக் காட்டித் தந்திருந்ததோடு, மின்சார வயர்கள் தயாரிப்பை அவனிடம் தந்தை கொடுத்திருப்பதாகவும் சொல்லியிருந்தாள்.

வெறுமனே உதயரேகா என்றால் நேரில், பார்க்கச் சம்மதிப்பானோ என்னவோ என்று யோசித்து, 'கெம்பிளாஸ்ட்' கம்பெனியின் பிரதிநிதி, 'வயரு'க்கான பிளாஸ்டிக் கச்சாப் பொருள் பற்றிப் பேசப் பெரியவர் செல்வரங்கம் இங்கே அனுப்பி வைத்ததாக ஒரு சிறு பொய் சொல்லி, அவனைச் சந்திக்கும் அனுமதி பெற்று உள்ளே சென்றாள்.

உள்ளே சென்றவளுக்கு முதல் அதிர்ச்சி. ஒரு குடிகாரனின் கண்களில் இருந்த - அவள் சற்றும் எதிர்பார்த்திராத கூர்மை!

ஒரு பார்வையில் அவளை எடை போட்டு,

மகிழ்ச்சியோடு இருப்பது நம்முடைய லட்சியமானால் அதை எளிதில் அடைந்து விடலாம். ஆனால், நாமோ மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சியோடு இருக்கவே ஆசைப்படுகிறோம். இதுவே நம்முடைய மகிழ்ச்சிக்குத் தடையாக இருக்கிறது.

— மாண்டிஸ்கியு

தகவல் : வயலூர். ஆர். பார்த்திபன்

துகரின் டெபாசிட் 50 கோடியை கடந்து பொன்னான சாதனை புரிந்துள்ளது.

50 CRORES

துகரும், அதில் சேமிப்பவர்களும், ஒவ்வொரு பைசாவின் மதிப்பையும் அறிவார்கள். இப்போது துகரில் சேமிக்கப்பட்ட பைசாக்களின் மதிப்பு ரூ.50 கோடி ஆகும். இந்த பொன்னான கட்டத்தை துகர் அடைய, அதில் சேமிப்பு செய்த 60,000—க்கும் மேலான மக்களே காரணம். அவர்கள் துகர் மீது வைத்திருக்கும் திடமான நம்பிக்கையில் துகர் வளர்ந்து வருகிறது. துகரின் சேமிப்புகள் ரூ.100 கோடி ஆகும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

DUGAR
FINANCE INDIA LTD

Dr. C.ANNA RAO
CHAIRMAN
Former chairman T.T.D

N. TARACHAND DUGAR
MANAGING DIRECTOR

REGD. OFFICE: DUGAR TOWERS, 123 MARSHALLS ROAD, MADRAS 600 008.
PH: 8553535(10 LINES) FAX: 8554864


■ HIRE PURCHASE ■ LEASING ■ PROPERTY DEVELOPMENT ■ PUBLIC DEPOSIT ■ MERCHANT BANKING ■ FOREIGN EXCHANGE ■ SHARE POINT ■

BRANCHES		BANGALORE	☎ 5585699	MYSORE	☎ 514944	SALEM	☎ 418769
MADRAS		JAYANAGAR	☎ 641511	ERNAKULAM	☎ 369515	SECUNDERBAD	☎ 846006
ADYAR	☎ 4917700	MALLESWARAM	☎ 365276	GUDUR	☎ 51830	TIRUPATI	☎ 21977
MOUNT ROAD	☎ 8521888	BOMBAY	☎ 2846233	GUNTUR	☎ 353877	TRICHY	☎ 469852
T.NAGAR	☎ 4341541	CALICUT	☎ 63344	MADURAI	☎ 543106	VISHAKAPATNAM	☎ 546581
MYLAPORE	☎ 4942858	COIMBATORE	☎ 231867	NELLORE	☎ 27576	VIJAYAWADA	☎ 478194

WE KNOW THE VALUE OF EVERY PAISA

TAKEWING D10 - D0 - EN - K

அருள்வாக்கு



செப்புப் பாத்திரம் மாதிரி ஆத்மா இருக்கிறது. அது தெரியாதபடி அதன்மேலே ஏக அழுக்கை அப்பிக் கொண்டிருக்கிறோம். நம் மனஸினாலே நினைக்கிற எண்ணங்கள், வாயாலே சொல்கிற வார்த்தைகள், உடம்பாலே செய்கிற காரியங்கள் இவற்றால் எல்லாம் கும்பி மண்ணைக் கொண்டு வந்து கனமாகப் படியவிட்டிருக்கிறோம். அப்படியிருக்கும் போது உள்ளுக்குள்ளே ஆத்மா இருக்கிறது என்றாலும் அதைத் தெரிந்து கொள்வதற்குப் பரிசுத்தி பண்ணத்தானே வேண்டும்? முதலில் மனோ, வாக், காயங்களாலேயே அநேக நல்லதைப் பண்ணித் தேய்த்துத் தேய்த்து அலம்ப வேண்டும். கும்பி மண் போக வேறே மண், மட்டை போட்டுத் தேய்க்கிற மாதிரி. முடிந்த முடிவிலே பார்த்தால் இந்த மண், மட்டை, புளி எல்லாமும் அசுத்தம்தான். ஆனாலும் ஆரம்பத்திலே இவைதான் அசுத்தத்தைப் போக்குகிறவை. கடைசியில் சுத்த ஜலத்தை விட்டுப் பாத்திரத்தை அலம்புகிறபோது, கொஞ்சங்கூட மட்டை, மண், புளிக்கோது இல்லாமல் அலம்புகிறோம். எதனால் அசுத்தத்தைப் போக்கினோமோ அதையும் அசுத்தமென்று சுத்த ஜலத்தைக் கொட்டி அகற்றுகிறோம். இதே மாதிரிக் கடைசியில் மனோ-வாக்-காயம் எல்லாவற்றையுமே ஆத்மாவை அசுத்தி செய்பவைதான் என்று ஞான விசார தீர்த்தத்தின் தாரையில் அலம்பி அப்புறப்படுத்தி விடத்தான் வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சிக்கிமுக்கிக் கல்லானது பல யுகங்களாக நீருக்குள்ளிருந்தாலும், தன் குணத்தை இழந்து விடாது. நீரிலிருந்து வெளியே எடுத்து உளியால் அதைத் தட்டிப் பார்த்தால், ஒளி பொருந்திய நெருப்புப் பொறி உண்டாவதைக் காணலாம். அது போலவே உண்மை பக்தன், உலகத்தின் எல்லா அசுத்தங்களின் நடுவே வசித்தபோதிலும் நம்பிக்கையையும் கடவுளிடம் உள்ள அன்பையும் இழந்து விடுவதில்லை. கடவுளுடைய திருநாமத்தைக் கேட்டவுடனேயே அவன் பக்தி வெறி கொண்டவனாகின்றான்.

— பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

ஏற இறங்க நோக்கி, விழிகளில் கேள்வியோடு கிருஷ்ணசந்திரன் எழுந்தான்.

இனி வேஷத்தினால் பயனில்லை என்பதோடு, அது அவசியமும் இல்லை என்று உணர்ந்து, "நான் உதயரேகா" என்று தன் பெயரைச் சொன்னாள் அவள்.

சட்டென அவன் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. "அடடா! தெரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேனே!"

"ஏ... என்னது?"

"நம் பிரதமர் பதவி விலகிய விவரம்தான். பதிலுக்கு நீங்கள் பிரதமராகப் பதவி ஏற்றது... அல்லது அவ்வளவு உயரம் இல்லையோ! மாநில முதல் அமைச்சர்? உதயரேகா இதில் யார் என்று புரிந்து கொள்ளத் தெரியாதது தப்புதானே?!"

அவளையே மட்டம் தட்டினாலும் கூடக் கண்களில் கேலி நகையும், உதட்டோரம் வளைவுமாகக் கிருஷ்ணசந்திரனின் தோற்றம் உதயரேகாவின் மனத்தில் பதிந்தது.

அவனது கிண்டலை உள்ளூர ரசித்து, "என் பெயரை முதலில் சொன்னேன். அதன் பிறகுதானே விவரம் சொல்ல முடியும்?" என்றாள் மிடுக்காக.

"இனிமேல்தான் அது சொல்ல வேண்டுமா? முன்னே சொன்ன விவரம் என்ன ஆயிற்று?"

"அது... அது உள்ளே வர அனுமதிக்காக ஒரு சிறு... சிறு வெள்ளைத்தனமான, கெடுதலற்ற புளுகு."

லேசாக முகம் சிவந்தாள் உதயா.

"பொய்தான் இல்லையா? பொய்யைப் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாக வள்ளுவர் கூறியிருக்கிறார் தெரியுமா?" மிகவும் சீரியஸாக விவரம் சொன்னான் அவன்.

"அதே வள்ளுவர் பொய்மையை வாய்மை இடத்து வைத்தும் பாடியிருக்கிறார் தெரியுமா?" என்றாள் அவளும் சளைக்காமல்.

"இப்போது புரை தீர்ந்த நன்மை என்னவோ?"

"இனிமேல்தான் தீரப் போகிறது!"

"ம்ஹூம்?"

இவ்வளவு இலகுவாகப் பேசுகிறவன் அப்படி ஒரு மூடமதி முரடனாக எப்படி இருக்க முடியும்?

ஆச்சரியமும் ஆராய்ச்சியுமாக உதயரேகா அவனை நோக்கினாள்.

அவன் முகத்திலும் சிறு திகைப்பு தோன்றி, உடனே மறைய, "உட்காரலாம்" என்று எதிரே இருந்த குஷன் நாற்காலியைக் காட்டிய போது, அவன் குரலில் உணர்ச்சி துடைக்கப்பட்டிருந்தது.

"என்ன விஷயம்?"

இந்தக் கேள்வியின் பதில் அவள் ஏற்கெனவே யோசித்து வைத்திருந்ததுதான். எனவே தொடங்கி விட்டாள். "பாருங்கள் மிஸ்டர் கிருஷ்ணசந்திரன். பெற்றவர்களும் உடன் பிறந்தவர்களுமே ஒருவருக்கு மிகவும் உற்ற உற

வினர்கள். இந்த உலகத்தில் நாம் பிறவி எடுக்கக் காரணமான பெற்றோருக்குச் சும்மாவே நாம் நன்றியோடு இருக்க வேண்டும். அதிலும், எத்தனையோ சிரமங்களைச் சகித்து, பத்து மாதம் வயிற்றில் சுமந்து, படாதபாடுபட்டுப் பெறுகிற தாய்..."

"சொந்த அனுபவமா, கேள்வி ஞானமா?"

"என்னது?"

"இந்தப் 'படாதபாடுபட்டுப் பெறுகிற' விஷயம்?"

எரிச்சலை அடக்கிக் கொண்டு, "நான் திருமணம் ஆகாதவள்" என்றாள் உதயா.

"திருமணத்துக்கும் பிள்ளை பெறுவதற்கும் என்ன சம்பந்தம்?" என்று அவன் சாவதானமாக உரைக்கவும் அவள் முகம் ஜிவ்வென்று சிவந்து விட்டது.

"நான் ஒன்றும் அந்த மாதிரிப் பெண் அல்ல" என்று ஆத்திரமாக உரைத்தவள், உடனே நிதானித்தாள். இவன் தன்னைச் சீண்டி விட்டுத் திசைமாற்ற முயல்கிறான் என்று ஊகித்து, "என்னைப் பற்றிய விவரம் உங்களுக்கு அவசியம் இல்லை. நான் சொல்ல வந்தது.."

"எனக்குக் கேட்கப் பிரியமில்லாதது. பாருங்கள் மிஸ் உதயா, இங்கே போர்டு ஒன்று 'அனாவசியமாய் நுழைக்கிற மூக்கு இங்கே உடைக்கப்படும்' என்று பெரியதாக எழுதி வைக்கலாம் என்று பார்க்கிறேன். கறுப்பிலே வெள்ளை எழுத்தா அல்லது வெள்ளையிலே கறுப்பா? எது நன்றாக இருக்கும்?" என்று அவளிடம் ஆலோசனை கேட்டான் கிருஷ்ணசந்திரன்.

நிமிர்ந்து, அவனை நேராக நோக்கி, "இதைப் பேச நீ யார் என்கிறீர்களா?" என்றாள் உதயா.

"இல்லை. நீ யார் என்பது தெரிகிறது. 'உன் வீட்டுச் சாப்பாட்டுக்காகப் புதிதாக ஒன்று உன் வீட்டைச் சுற்றிக் கொண்டு அலைகிறது' என்று மணி ஏற்கெனவே சொல்லியிருக்கிறான்."

மீண்டும் 'சுர்'ரென்று சினம் ஏற, "சாப்பாட்டுக்காகவா? எங்கள் சித்தி எவ்வளவு அருமையாகச் சமைப்பார்கள் தெரியுமா? உங்கள் வீட்டில் வெறும் சமையல்காரன் சாப்பாடு" என்றவளுக்கு இன்னும் இரண்டு விஷயங்கள் உறைத்தன.

ஒன்று அவனது ஏக வசனம். அதை ஒதுக்கி, அவன் பேச்சிலிருந்த ஓட்டையைக் காரியவாதியாகக் கைப்பற்றி, "உங்கள் வீட்டைச் சுற்றுகிறவர்கள் பற்றிப் பிறர் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அது உங்களுக்கு அவமானமாக இல்லையா?" என்று மடக்கினாள்.

ஆனால், "இல்லை என்றால் என்ன செய்யப் போகிறாய்?" அவன் அலட்சியமாய்க் கேட்கவும், சற்றுத் திகைத்து விட்டு, "ஆமாமாம். மான அவமானம் பார்க்கிறவர்கள் குடித்து விட்டுப் பொது இடத்தில் உருளுவார்களா என்ன?" என்றாள் குத்தலாக.

"நான் நடுத்தெருவிலேயே உருளுவேன். அதைக் கேட்க உனக்கு உரிமை கிடையாது. எனவே, நீ கிளம்பலாம்" என்றான் கிருஷ்ணசந்திரன் கடினமான குரலில்.

"ஒரு கெட்டதை யார் வேண்டுமானாலும் தட்டிக் கேட்கலாம்."

"அதை என் எல்லைக்கு அப்பால் வைத்துக் கொள். சின்னப் பெண், போகிறது என்று பொறுத்துப் போனால் யாரோ ஒருத்தி, உனக்கு இவ்வளவு வாய் நீளுகிறதா? இப்போது ரசாபாசமின்றி வெளியே போகிறாயா, அல்லது கழுத்தைப் பிடித்துத் தள்ள வேண்டுமா?" என்று அவன் எழவும், உதயாவின் முகம் கன்றிச் சிவந்து போயிற்று.

கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவதா! அவளையா! என்ன அவமானம்! சட்டென எழுந்து, "உங்களை ஒரு மனிதர் என்று எண்ணிப் பேச வந்தேனே! எனக்கு இது தேவைதான்!" என்றவள் கைப் பையை எடுத்துக் கொண்டு விடுவிடென்று வெளியே நடந்தாள்.

உதயரேகாவுக்கு ஆத்திரம் அடங்க வெகு நேரம் ஆயிற்று. அப்போதும் – உறங்குவதற்கென்று அன்று விளக்கை அணைத்து விட்டுப் படுத்த பிறகும் கிருஷ்ணசந்திரனின் பேச்சை மறக்க முடியவில்லை.

முதலில் அவ்வளவு இலகுவாகப் பேசியவன் ஏன் மாறினான்? ஒருவேளை மேலே பேச விடாமல் தடுப்பதற்காகச் சினமூட்டினானா?

யாரோ ஒருத்தியா? யாரோ ஒருத்தியாக இல்லாமல் உரிமை உள்ளவளாக நின்று கேட்டால் இப்படி வெளியேற்ற முடியுமா?

உரிமையோடு அவனைத் தட்டிக் கேட்பதற்காகத்தான் அவனைத் திருமணம் செய்யும் எண்ணம் – ஆவல் தனக்கு உண்டாயிற்று என்பதுதான் உதயரேகாவின் அன்றைய கணிப்பு.

ஆனால் அடிமேல் அடிபட்டு, நொந்து ஓய்ந்த பிறகுதான், என்ன சூழ்ச்சி செய்தேனும் கிருஷ்ணசந்திரனை அவள் மணக்க விரும்பியது, அசட்டுத்தனமாக அவன் மேல் அவள் கொண்டு விட்ட காதலினால் என்பதை அவள் கண்டுகொண்டாள்.

சற்றுக் காலம் கடந்த கண்டுபிடிப்பு.

(தொடரும்)

"பத்திரிகைகளுக்கு அறிக்கை தருவதில் கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க தலைவரே!"

"ஏன்யா?"

"இன்றைக்கு வந்திருக்கிற அறிக்கை ஒரு வாரத்திற்கு முன்பு ஏற்கெனவே ஒரு தடவை வந்திருக்கு!"

- ஞானமுத்து



லாவெண்டர் வாலன்டைன்

பலவேசம் பிள்ளை வீட்டு வாசல் திண்ணையில் அமர்ந்திருந்தார். வாட்டசாட்டமான உடல். நல்ல கறுப்பு. இடுப்பில் வேட்டி. மேல் துண்டை அருகே வைத்துக் கொண்டிருந்தார். பனைவிசிறியால் வீசிக் கொண்டிருந்தார். அதையும் மீறி வேர்வை.

உட்புறமாகத் திரும்பி 'ஏளா' என்று குரல் கொடுத்தார். கையில் சொம்பில் மோருடன் வந்தாள் கோமதி.

"எங்கே போயிட்டானுவ பயலுவ? ராவுத்தர் வூட்டுக்குப் போயிட்டானுவளா? காலையிலே கூழோ, கஞ்சியோ குடிச்ச உடனே அவர் வூட்டுக்குப் போயிடறது. வெட்டிப் பயலுவ!"

– உரத்த குரலில் அலுத்துக் கொண்டார் பெரியவர்.

அவர் அலுத்துக் கொள்வதிலும் நியாயம் இருந்தது. இரண்டு மூன்று வருடங்கள் வரை அவரே சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்தார். கடற்கரைக்கு உள்ளே தள்ளி ஐந்து ஏக்கர். இன்னும் உள்ளே தள்ளி மூன்று ஏக்கர்கள். பூர்வீக ஆஸ்தி. வானம் பார்த்த பூமி. அவர் விவசாயம் பார்த்து, கஷ்டப்பட்டு மகன்களைப் படிக்க வைத்தார்.

மூத்தவன் பெரியசாமி தட்டுத் தடுமாறி பி.ஏ. முடித்தான். சிறியவன் காளிமுத்து ரெஃப்ரிஜெரேஷன் அண்ட் ஏர்கண்டிஷனிங்கில் டிப்ளமா வாங்கினான். இருவரும் வேலை தேடிக் கொண்டிருந்தார்கள். விவசாயம் செய்ய இஷ்டமில்லை. விவசாயம் செய்வது கௌரவக் குறைவு என்ற எண்ணம் அவர்களுக்கு.

பலவேசம் பிள்ளைக்கு இப்போது பார்வை சற்று மங்கல். உடல் என்னவோ வலுவாகத்தானிருந்தது. விவசாயம் செய்ய இயலவில்லை. 'மகன்களை நம்பிப் பிரயோஜனமில்லை' என்று குத்தகைக்கு விட்டிருந்தார் நிலங்களை.

'காலையிலே எழுந்தவுடனே ராவுத்தர் வீட்டுக்கு ஓடிட்டானுவளே, ராவுத்தரும் நாமும் ஒண்ணாயிட முடியுமா?"

– தனக்குத் தானே உரக்கப் பேசி அங்கலாய்த்துக் கொண்டார் பெரியவர்.

உண்மை. ராவுத்தரும் பிள்ளையும் ஒன்றாகி விட முடியாதுதான். ஊரிலிருந்த ஒரே பெரிய கடை ராவுத்தருடையது. அது தவிர ஏராளமான நிலபுலன்கள். மனிதர் நல்லவர். பெரியசாமியும் காளிமுத்துவும் சிறு வயதில் ராவுத்தர் மகன்களுடன் ஒன்றாகப் படித்தவர்கள். ராவுத்தர் வீட்டில் 'டிஷ் ஆன்டெனா' இருந்தது. பெரியசாமியும் காளிமுத்துவும் கிரிக்கெட்



மாட்ச் அது இது என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள், ராவுத்தர் மகன்களுடன்.

யாரோ வருவது தெரிய, கண்களை இடுக்கிப் பார்த்தார். சரியாகத் தெரியவில்லை. செருப்புச் சத்தத்தில் தெரிந்து கொண்டார். கோடி வீட்டு பாராங்குசத்தின் மகன் வேணுகோபால். அவர் மகன் காளிமுத்துவின் வயது.

"யாரு வேணுகோபாலா?"

"ஆமாம் பெரியவரே!"

"என்னடா அது சத்தம்? ஏதோ லாரி டிரக் போற மாதிரி? கண்டிப்பா இது டவுன் பஸ்ஸில்லே. பஸ்ஸானா நின்னு நின்னு மெள்ளப் போறச் சத்தம் கேக்குமே?"

'கிழவர் எமகாதகப் பேர்வழி' என்று சிலாகித்துக் கொண்டான் வேணுகோபால். 'இவர் படித்திருந்தால் எல்லோரையும் விழுங்கி ஏப்பம் விட்டிருப்பார்.'

"நமக்கெல்லாம் நல்ல காலம் தாத்தா! கொஞ்ச நாள்ல நம்ம கிராமம் ரொம்ப முன்னேறிடும். இறால் பண்ணை அமைக்க நம்ம ஊர் தோதா இருக்காம். பெரிய பெரிய மல்டிநேஷனல் கம்பெனிகள், பல தேசங்களிலே இருக்கிற பெரிய கம்பெனிகள் இந்த ஊரிலே இறால் பணணை வெக்கப் போறாங்க. இதனாலே ஊர்ல தார் ரோடுங்க வரும். கடை கண்ணின்னு ஊரு பெரிசாயிடும். வியாபாரம் பெருகும். ஊர் ஜனங்களுக்கு வேலை கிடைக்கும். பெரிய பெரிய மின்விசைப் படகு வெச்சு மீன், இறால் எல்லாம் பிடிக்கப் போறாங்க. சின்னச் சின்ன மீனவங்க இப்போ போல மீன் விக்க 'லோ-லோ'ன்னு அலைய வேணாம். மொத்தமா ஜனங்க பணத்தை அரிச்சுக் கொட்டலாம். நம்ம ஊர் சொர்க்க பூமியா மாறிடப் போகுது!"

"போடா போக்கத்தவனே! வேற ஊர்க்காரன் இந்த ஊரை உத்தாரணம் பண்ண வரானா? அவன் காசு பண்ண வரான். காரியம் ஆனதும் போயிடுவான். நீ விரலை வாயில வெச்சுக்கிட்டு நிப்பே. பரம்பரை பரம்பரையா செய்யற விவசாயத்தைப் பண்ணுவியா? அதை விட்டுட்டு இறால் பண்ணை வெக்கறாங்களாம். அதை இந்தப் போக்கத்த பயலுவ 'ஈ'ன்னு பார்த்துட்டு நிக்கறானுங்களாம். சே!"

"நான் அப்புறம் வர்றேன் பெரியவரே!"

கிழவரை மனதுக்குள் திட்டியபடியே கிளம்பினான் வேணுகோபால். 'கிழத்துக்கு வேற வேலையில்லே. புதுசா எது வந்தாலும் எதிர்க்க வேண்டியது.'

ஆயிற்று ஒரு மாதம். இறால் பண்ணை அமைக்க ஜரூராக வேலைகள் தொடங்கி விட்டன. ஊர் பெரிதாகித்தான் போனது. பஸ் ஸ்டாண்ட் அருகே நிறைய பெட்டிக் கடைகள் உருவாகின. கோலி சோடா இடத்தில் பெப்ஸி கோலா. ராட்சத இயந்திரங்கள் வந்தன. எஸ்கலேட்டர்கள் பண்ணை அள்ளின. புல்டோசர்கள் நிலத்தைச் சீர்படுத்தின. செயற்கைக் குளங்கள் வெட்டப்பட்டன. குளத்தில் கடல் நீரை நிரப்ப ராட்சத பம்புகள், ஜெனரேட்டர்கள் உபயோகிக்கப்பட்டன. பலதரப்பட்ட மக்கள் வரத் தொடங்கினார்கள். ஊரில் பணப்புழக்கம் அதிகரித்தது.

மூன்றே மாதங்கள். ஊர் முழுமையாக மாறி விட்டது. ஊரெங்கும் முக்கிய வீதிகளில் தார் போடப்பட்டது. தெருக்கள் அகலப்படுத்தப்பட்டன. ரோட்டோரம் நிழல் தந்த மரங்கள் ரோட்டை அகலப்படுத்த அடியோடு பிடுங்கப்பட்டன. சினிமா பார்க்கப் பத்து கிலோ மீட்டர் நடந்தவர்கள், இன்று ஊரிலேயே செமி பர்மனென்ட் தியேட்டரில் பார்த்தார்கள்.

தாய்நிலம்

ஊரைச் சுற்றியிருந்த தென்னந்தோப்புகள், மாந்தோப்புகள் அழிந்து இறால் பண்ணைகளாக மாறின. பத்தாயிரம் விற்ற ஏக்கரா எழுபதாயிரம் ஆயிற்று.

செல்வச் செழிப்பு ஊரில் தெரியத்தான் செய்தது. வானம் பார்க்கச் சும்மா இருந்த பூமியை விற்றதில் காசு புரண்டது. சோத்துக்கு லாட்டரி அடித்தவனெல்லாம் இன்று ஷூவுடன் மோட்டார் சைக்கிளில் போகத் தொடங்கினார்கள்.

ஊர் விடலைப் பையன்கள் பலவேசம் பிள்ளையைக் கிண்டுவார்கள்.

"என்ன பெரியவரே! அப்படியே பொடி நடையாத் தார் ரோடிலே போய் சினிமா பார்த்துட்டு வரலாம்!"

கிழவர் கோபத்தில் தாறுமாறாகக் கத்துவார்.

"போடா, கம்மனாட்டிப் பயலுவளா? கோமணம் கட்டாத பயலெல்லாம் இன்னைக்கி பாண்ட் போட ஆரம்பிச்சுட்டான். அடிச்சுப் போட்டா பாக்கெட்ல பத்து ரூபா கெடையாது. ஆயிரம் ரூபா 'ஷூ' போடறானுவ!"

விடலைப் பையன்கள் போன பின்பும் புலம்பிக் கொண்டிருப்பார் வெகு நேரம்.

இறால் பண்ணையில் பெரியசாமிக்கும் சரி, காளிமுத்துவுக்கும் சரி வேலை கிடைக்கவில்லை. பண்ணைகளில், தற்குறிகளுக்குத்தான் கூலி வேலை கிடைத்தது. பெரிய வேலைகள் ஃபிஷரி பயாலஜி, மரைன், மைக்ரோ பயாலஜி படித்தவர்களுக்கே கிடைத்தது. அனைவரும் வெளி ஆட்கள்.

''என்ன சார், உங்க மனைவியை ஆத்தங்கரைல நிறுத்தி வெச்சு 'டேப்புல' அளந்து பார்க்கிறீங்க?''

''ஆத்துல போட்டாலும் அளந்து போடுன்னு, பெரியவங்க சொல்லியிருக்காங்களே, அதான்!''

— யோகானந்தம்



பெரியசாமி இறால் பண்ணைகளுக்குத் தீனி சப்ளை செய்ய 'ஷிரிம்ப் ஃபீட் மில்' ஒன்று வைக்க ஆசைப்பட்டான். தேவை பணம். தம்பி காளிமுத்து துபாய்க்குப் போக முயற்சித்தான். தேவை – குறைந்தபட்சம் ஐம்பதாயிரம் ரூபாய்.

சில நாட்களாகவே வீட்டில் வாக்குவாதம். எட்டு ஏக்கரா நிலத்தை விற்றால் நல்ல பணம் கிடைக்கும். பெரியசாமி ஃபீட் மில் வைக்கவும் காளி துபாய் போகவும் உதவும். வியாபாரம் சூடு பிடித்தால் மாதம் பத்தாயிரம் அரித்துக் கொட்டலாம் என்று பெரியசாமி திட்டமிட்டான்.

பலவேசம் பிள்ளைக்கு நிலத்தை விற்க இஷ்டமில்லை. இத்தனை நாள் சோறு போட்ட அன்னலட்சுமியைப் பிடிவாதமாக விற்க மறுத்தார்.

"ஏண்டாலே! வீட்டிலே இருக்கிற லட்சுமியை வரப் போற மூதேவிக்காக விற்க முடியுமா? சோறு போடற லட்சுமிடா அது!"

பூர்வீகச் சொத்து. குத்தகையின் சொற்ப வரும்படி. மனைவி-மக்களின் கசமுசா. வேண்டாவெறுப்பாக நிலத்தை விற்கச் சம்மதித்தார். பத்திரங்களை விற்கக் கைநாட்டு வைத்த போது அவரது உடலிலிருந்து உயிரே போவது போன்ற உணர்வு. சோர்வு.

மூன்று மாதங்கள். இப்போது பெரியசாமி இறால் ஃபீட் மில்லுக்குச் சொந்தக்காரன். ஓரளவு வீட்டுச் செலவுக்குப் பணம் வந்தது. இன்னும் சில காலம் சென்றால் நிறைய பணம் வரும் என்று நம்பினான். காளிமுத்து பம்பாய் போனான், துபாய் போகும் உத்தேசத்தில்.

''அப்பன் பேச்சைக் கேட்டிருந்தால் இப்போ இவ்வளவு காசு வந்திருக்குமா? குத்தகைக்காரன்கிட்டே இல்லே மாரடிச்சிருக்கணும்?''

பெரியசாமி தன்னைப் பார்க்க வந்திருந்த வேணுகோபாலிடம் பீற்றிக் கொண்டான்.

இப்போது பெரியசாமி விற்ற நிலம் ஏக்கர் ஒன்று இரண்டு லட்சம். காசு கொடுத்தாலும் நிலம் கிடைக்காத சூழ்நிலை. வாயில் வெற்றிலை, தலையில் நிறைய பூ. கண்களில் அதிகப்படியான மை – இவற்றுடன் பெண்கள் பஸ் ஸ்டாண்டைச் சுற்றித் திரியத் தொடங்கினார்கள். நாற்சந்தியில் கொட்டிக் கிடந்தாலும் திருட்டுப் போகாத ஊரில் அவ்வப்போது சிறிய, பெரிய திருட்டுக்கள் ஏற்படத் துவங்கின.

சிறிய மீனவர்கள் பெரிய விசைப் படகுகள் முன்னே போட்டி போட முடியவில்லை. கிலோ மீட்டர் கணக்கில் உள்ள ராட்சத வலைகளை மீறிச் சிறிய மீனவர்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. ஆரம்பத்திலாவது அவர்கள் பிடித்த இறால் மீனுக்கு நல்ல விலை



''என்னய்யா இது... நிதி நிறுவனம்னு சொல்லிகிட்டு வீடு புகுந்து சுத்தி முனைல பணம் பிடுங்குறீங்க?''

''டெபாசிட் சேகரிப்பு டீம்ல நாங்க கொஞ்சம் தீவிர பிரிவு!''

— அம்பை தேவா

கிடைத்தது. இப்போது முதலே மோசம் போன கதை.

அன்று காலை வழக்கம் போல் பலவேசம் பிள்ளை திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அருகே வந்ததும்தான் தெரிந்தது அது ராமசாமிக் கௌண்டர் என்று. அவர் ஒத்த வயது. சிறு வயது நட்பு.

"அடேடே! ராமசாமியா? வா வா! என்ன இவ்வளவு தூரம்?" - திண்ணையில் அமர இடம் கொடுத்தார்.

"ஏளா! வந்திருக்கிறது யார் பார்! குடிக்க மோர் கொண்டா!"

உள்ளே குரல் கொடுத்தார் பிள்ளை.

ஊரிலிருந்த அனைவரும் தங்கள் தங்கள் நிலங்களை இறால் பண்ணைக்கு விற்ற போது ராமசாமிக் கௌண்டர் பிடிவாதமாக விற்க மறுத்து விட்டிருந்தார். பேச்சு விவசாயத்திற்குத் திரும்பியது.

''இல்லே பலவேசம்! இப்போ இறால் பண்ணையாலே ஊரே கெட்டுப் போச்சு. கடல் நீரை உள்ளே கொண்டு வந்து எல்லா விளைச்சல் நிலங்களும் உப்பு சேர்ந்து போய் எது போட்டாலும் வெளைய மாட்டேங்குது. எதுவும் பிரயோஜனமில்லே!"

- விசனப்பட்டார் கவுண்டர். தன் கடைசி மகன் திருமண அழைப்பிதழைக் கொடுத்து விட்டுப் போனார்.

ஆந்திரக் கடற்கரையோரம் இறாலைப் பிடித்த ஒரு வைரஸ் நோய், தமிழ்நாட்டுக் கடற்கரையோரக் கிராமங்களிலும் வெகுவேகமாகப் பரவியது. இறால் பல்லாயிரக்கணக்கில் மடிந்தன. அனைத்து கம்பெனிகளுக்கும் பெரு நஷ்டம். சிறு சிறு பண்ணைகள் தலைநிமிர முடியாமல் நஷ்டம். மல்டிநேஷனல் கம்பெனிகள் சுதாரித்துக் கொண்டன. தற்காலிகமாக இறால் பண்ணைகளை நிறுத்தின - அந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் வரை.

பெரியசாமிக்குப் பெரிய நஷ்டம். இறால் செத்த பிறகு அதன் உணவு எப்படி விலை போகும்? முன்பு கடனுக்குக் கொடுத்த இறால் உணவுக்கான காசே கையில் வரவில்லை. வேலை சுத்தமாக நின்று போனது. பெரு நஷ்டம். நாட்கள் போய் மாதங்களாயின. பண்ணைகள் திறந்தபாடில்லை.

விளைநிலங்கள் அதீத உப்பு காரணமாக உப்பளங்களாகிப் போயின. ஒன்றும் விளையாத நிலை. பெரியசாமி வீட்டிலிருந் தான். பலவேசம் ஆவேசப்பட்டார்.

"ஏண்டாலே! நிலத்தை வித்துப் போட்டா இம்மாம் பணம் கெடைக்கும், அம்மாம் பணம் கெடைக்குமின்னியே... இப்போ ஒருவேளை கஞ்சிக்கே வழியில்லே. பெரிய பெரிய கம்பெனி வந்திச்சே. எவனுக்குப் பலன் வந்தது? லாபம் வந்தப்போ சம்பாதிச்சான். நஷ்டம் வந்தப்போ இழுத்து மூடிட்டான். ஊர் ஜனங்க விரல் சூப்பிட்டு உட்கார்ந்திருக்காளுவ. காடு கழனியெல்லாம் உப்பாப் போச்சு. ஒண்ணுக்கும் உதவாமே போயிடிச்சு. கிணறு வெட்டினா சர்க்கரையா இருந்த தண்ணி இப்போ வாயிலே வைக்க முடியாதபடி உப்பு. அதுவும் நூறு, இருநூறு அடி ஆழுத்திலே!"

மூச்சு வாங்கத் தொடர்ந்தார் பெரியவர்.

''ஏண்டா! பெத்த அம்மா அழகாயில்லேன்னு பக்கத்து வூட்டுப் பொம்பளைய அம்மான்னு கூப்பிடுவியா? பணக்காரியா இருந்தா அம்மான்னுவியா? நிலத்தில பாடு பட்டா பலன் கண்டிப்பாகக் கிடைக்கும். நாங்க காடு கழனியிலே செருப்புக் காலோட நடக்கவே மாட்டோம்டா. நிலம் தாய்டா. காசுக்காகத் தாயை வித்துட முடியுமா?

தொடர்ந்தார் பெரியவர்.

''உங்ககிட்டே சொல்லிப் பிரயோஜனமில்லே. கூடக் காசு கொடுத்தாங்கன்னா பெத்த அம்மாளையே வித்துடுவீங்க. தார் ரோடு வந்துச்சு, சினிமாக் கொட்டகை வந்ததுன்னு பெருமைப்பட்டீங்க. காலி வயித்தோட போய் தார் ரோட்டிலே உருளுங்க, போங்க!"

எதிர்காலம் பற்றிய கவலையில் கனமான மௌனம் நிலவியது அங்கே.

பிரபலங்கள் நடத்தும் பயிற்சிப் பள்ளிகள்!



பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.